# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume - 16 Issue - 10

அக்டோபர் 2023 - ரபியுல் அவ்வல் - ரபியுல் ஆகிர் 1445




பிப்ரவரி 21,2019

## இலங்கை குண்டுவெடிப்பு..

## யாரால்? யாரால்?

இஸ்ரேலுக்கு எதிரான போர்

## ஹமாஸின் பலம் என்ன?

"சீறத் சிறப்புக் கட்டுரை"

நபி (ஸல்) வாழ்க்கை..?

அண்மையில் இஸ்லாத்தை ஏற்ற யுவான்னி ரிட்லி அவர்களின் ஆய்வு...

• மோடி அரசின் வரலாறு காணாத ஊழல்..! 7500000000000



# இலங்கை ஈஸ்டர் தி

# யாரால்.....? யாரால்.....?

இலங்கை அரசியலைப் பொருத்தவரை 2009 என்றால் அது முள்ளிவாய்க்கால் - சிங்கள பௌத்தப் பேரினவாதத்தால் தமிழர்கள் வகைதொகையின்றி கொத்துக் கொத்தாய் கொல்லப்பட்டதன் குறியீடு. 2019 என்றால் அது உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு.( ஈஸ்டர் குண்டுவெடிப்பு) - ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதத்தால் தேவாலயங்களில் தொழுது கொண்டிருந்தோர் கொல்லப்பட்டதன் குறியீடாகும். இவ்விரண்டின் தொடர்பிலும் இன்றுவரை தற்சார்பான புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு குற்றமிழைத்தோர் பொறுப்புக்கூறலுக்கு உள்ளாக்கப்படவில்லை.

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு யாரால், யாருக்காக, எப்படி திட்டமிட்டு நடத்தப்பட்டது என்பதை செப் 4 ஆம் நாள் இரவு 11 மணிக்கு இங்கிலாந்தைச் சேர்ந்த ஊடகமான சானல் 4 தொலைக்காட்சி, ஓர் ஆவணப்படமாக வெளியிட்டுள்ளது. அதன் தலைப்பு "சிறிலங்காவின் ஈஸ்டர் குண்டுவெடிப்புகள் - அம்பலமாகும் தகவல்கள்".

சானல் 4 தொலைக்காட்சி "சிறிலங்காவின் கொலைக்களங்கள்" என்ற தலைப்பில் 2011 இல் வெளியிட்ட ஆவணப்படம் தமிழ் மக்களுக்கும் போராளிகளுக்கும் எதிராக சிங்களப் படையினர் நடத்திய சட்டப்புறம்பான கொலைகளைக் காட்சிப்படுத்தின. உலகெங்கும் உள்ள தமிழர்களின் மனசாட்சியைத் தட்டியெழுப்பியதில் அதற்கொரு தனிச்சிறப்பான பங்குண்டு.

இப்போது வெளியிடப்பட்டிருக்கும் ஆவணப்படமும் அது போலவே முகன்மையுடையது ஆகும். இப்போது நடந்துவரும் ஐ.நா. மாந்த உரிமைப் பேரவையின் 54 ஆவது கூட்டத் தொடரைக் குறிவைத்துத் தான் இந்த ஆவணப்படம் வெளியிடப்பட்டுள்ளது.



# ன குண்டு வெடிப்பு..!

### உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு

*2019* ஏப்ரல் *21* அன்று கொழும்பில் அந்தோணியார் ஆலயத்திலும் நீர்க்கொழுப்பில் செபஸ்டியான் ஆலயத்திலும் மட்டக்களப்பில் ஜியோன் ஆலயத்திலும் மனித வெடிகுண்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டன. கொழும்பு நகரில் உள்ள மூன்று சொகுசு விடுதிகளிலும் - சாங்ரி லா, கிங்ஸ்பரி, சின்னமன் கிராண்ட் இல் மனித வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டன. இத்தாக்குதல்கள் காலை *8:45*இல் இருந்து *9:05*க்குள் ஒரே நேரத்தில் நடத்தப்பட்டன. இவையன்றி பிற்பகல் வேளையில் இரண்டு விடுதிகளில் குண்டுகள் வெடித்தன. இத்தாக்குதல்களில் மொத்தமாக *269* பேர் கொல்லப்பட்டனர். *500*க்கும் மேற்பட்டோர் காயமுற்றனர். இதில் *43* பேர் வெளிநாடுகளைச் சேர்ந்தோர். அதில் *11* பேர் இந்தியாவைச் சேர்ந்தோர். இங்கிலாந்து, துருக்கி, டென்மார்க், ஜப்பான், ஆஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்தோர் இதில் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதல்களின் மூளையாக ஹாசிம் ஜாகிரான் என்பவர் இருந்தார். தேசிய தவ்ஹீத் ஜமாத் அமைப்பைச் சேர்ந்தவர்கள் இத்தாக்குதலை நடத்தியிருந்தனர். இத்தாக்குதலில் ஈடுபட்டோர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்தோர் என்று சொல்லி இத்தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றுக் கொண்டது.

இத்தாக்குதலைத் தொடர்ந்து ஏராளமான அப்பாவி இசுலாமிய இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். இசுலாமியர்களுக்கு எதிரான சிங்கள பௌத்தப் பேரினவாதம் சிறிலங்காவில் கொழுந்துவிட்டு எறியத் தொடங்கியது.

கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் தமிழ் - சிங்கள கத்தோலிக்கர்கள் ஆவர். இதுநாள் வரை இத்தாக்குதலுக்கு காரணமானோர் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படவில்லை.

### சானல் 4 காணொளி

இந்த *47* நிமிட காணொளி உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கும் இராசபக்சே குடும்பத்தினருக்கு நெருக்கமான புலனாய்வுத் துறை அதிகாரிக்கும் இத்தாக்குதலை நடத்தியவர்களோடு உள்ள தொடர்பைக் காட்டுகிறது. இராணுவப் புலனாய்வுத் துறை தாக்குதலுக்கு துணை போனதை இந்த ஆவணப்படம் அம்பலப்படுத்துகிறது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிள்ளையானிடம் *20* ஆண்டுகள் மொழிபெயர்ப்பாளராகவும் உதவியாளராகவும் பணியாற்றிய, கடந்த ஆண்டு உயிருக்கு தஞ்சம் கேட்டு சுவிட்லார்ந்துக்குப் போயுள்ள அன்சீர் ஆசாத் மௌலானா என்பவரின் வாக்குமூலத்தின் அடிப்படையில் இக்குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. இவர் இவ்வாண்டு தொடக்கத்தில் ஐ.நா. மாந்த உரிமைப் பேரவையிடம் வாக்குமூலம் தந்துள்ளார்; ஐரோப்பிய உளவு அமைப்புகளும் இவரை உசாவல் செய்துள்ளன. அந்த வாக்குமூலம் ஏற்கெனவே வெளிவந்திருப்பினும் சானல் - 4 காணொளி வழியாக தொகுக்கப்பட்டிருப்பது சிங்களத் தரப்பில் கூடுதலான விவாவத்தைக் கிளப்பியுள்ளது. சானல் 4 காணொளியில் வரக்கூடிய செய்திகள் கீழே தொகுக்கப்பட்டுள்ளன.

## முள்ளிவாய்க்கால் படுகொலை

2005 இல் மகிந்த இராசபக்சே சிறிலங்காவின் அதிபராக தெரிவு செய்யப்பட்டார். அவர் அதிபரானவுடன் தனது தம்பியான கோத்தபய இராசபக்சேவை நாட்டின் பாதுகாப்புச் செயலர் பதவியில் அமர்த்தினார். இதன் மூலம், ,நாட்டின் இரண்டாவது அதிகாரமிக்க மனிதனாக கோத்தபய இராசபக்சே மாறிப்போனர். அவரது நேரடிக் கட்டளையின்கீழ் விடுதலைப் புலிகளுக்கு எதிரானப் போர் நடத்தப்பட்டது. அப்போரில் ஒரு சிறு நிலப்பகுதியில் பல்லாயிரக் கணக்கானோர் மாட்டிக் கொண்டனர். அவர்கள் கொல்லப்படுவார்கள் என்று தெரிந்தே குண்டு மழைப் பொழிந்தது சிங்கள படை. சுமார் 40,000த்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப் பட்டார்கள் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. நேரடியாக படுகொலைகளை நடத்து மாறு கோத்தபய இராசபக்சே கட்டளையிட்டார். சண்டே லீடர் ஊடகத்தின் முன்னாள் ஆசிரியர் பிரெட்ரிக் ஜான்சுவின் கூற்றாக இவை சானல் 4 காணொளியில் சொல்லப்படுகின்றன.

## லசந்தா படுகொலை

போரின் வெற்றிநாயகனாக இராசபக்சேக்கள் மாறிப்போயினர். அவர்கள் புலிகளுக்கு எதிரானப் போரை முடித்த பின், சிவில் சமூகத்தினருக்கு எதிரானப் போரைத் தொடங்கினர். கோத்தபய இராசபக்சேவுக்கு எப்படி ஒடுக்குமுறையை செய்ய வேண்டும் என்பது மிக நன்றாகத் தெரியும். அவர் அச்ச சூழலை உருவாக்குவதில் மிகவும் திறன் வாய்ந்தவர். பாதுகாப்புச் செயலர் கோத்தபய, நிலைமையைக் கட்டுக்குள் வைப்பதற்கு என்னென்ன வழிவகைகள் தேவையோ அவற்றை எல்லாம் செய்தார் என்று சிறிலங்காவின் மனித உரிமை ஆனையத்தின் ஆணையராக 2015 முதல் 2020 வரை செயல்பட்ட அம்பிகா சத்குகானந்தம் சொல்கிறார். பிள்ளையானும் நானும் கோத்த பயாவை சந்தித்த போது தனக்கு உதவும் பொருட்டு டிரிபோலி பிளாட்டூன் (Tripoly Platoon) என்ற பெயரில் துணை இராணுவக் கொலைப் படை ஒன்றை உருவாக்குமாறு கேட்டுக்கொண்டார். உங்களிடம் இருக்கும் சிறந்த ஆட்களைக் கொண்டு அவ்வணியை அமைக்குமாறு சொன்னார். அந்தப் படை கோத்த பயவின் நேரடி கட்டளையின் கீழ் செயல்பட்டது. அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் தெரிவு செய்யப் பட்டனர். அவர்கள் குறிவைக்கப்பட்டு கொல்லப் பட்டனர் என்று மௌலானா சொல்கிறார்.

துணை இராணுவப் படைகள் அரசுடன் சேர்ந்து வேலை செய்ததைப் பார்க்க முடிந்தது. ஊடகவியலாளர்கள், செயற்பாட்டாளர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டதைக் காண முடிந்தது. ஊடகத் துறை மீது இராசபக்சேக்கள் தாக்குதலை நடத்தினர். தி நேசன் நாளிதழின் பாதுகாப்புப் பிரிவு சேகரிப்பாளர் குல்தீப் நய்யார் கடத்தப்பட்டு தாக்கபட்டார். ஊடக ஆசிரியர்கள், செய்தி ஆசிரியர்கள் மிரட்டப் பட்டனர், தாக்கப்பட்டனர், கொல்லவும் பட்டனர்.

மனித உரிமைக் கண்காணிப்பகமும் (HRW) அமெரிக்க வெளியுறவுத் துறையும் (US State Department) தாக்குதல்கள் பலவும் டிரிபோலி பிளாட்டூனால் நடத்தப்பட்டவை என்று உறுதி செய்தன. இத்தகைய தாக்குதல்களுக்கு இடையிலும் சண்டே லீடர் ஆசிரியரும் நிறுவனருமான லசந்தா விக்ரமசிங்கே அரசை அம்பலப்படுத்திக் கொண்டிருந்தார். அவர் மிகுந்த துணிவுடன் புலனாய்வு இதழியலை மேற் கொண்டிருந்தார். அவரது ஊடக அலுவலகம் மீது வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இவ்வரசால் தான் கொல்லப்படக் கூடும் என்று அவர் எதிர்பார்த்திருந்தார். இரசியாவிடம் இருந்து மிக் 27 ரக போர் விமானங்கள் வாங்கியதில் கோத்தபய இராசபக்சே ஊழல் செய்திருக்கிறார் என்பதை லசந்தா அம்பலப்படுத்தினார். இது கோத்தபயவுக்கு ஆத்திரமூட்டியது.

அப்போது கோத்தபய இராசபக்சே பிள்ளையானையும் என்னையும் சந்திப்புக்கு அழைத்திருந்தார். அவரது அறையில் அவரை சந்தித்தோம். சண்டே லீடர் செய்தித்தாளை தன் மேசையில் வைத்திருந்தார். "இந்த நாய் லசந்தா தன்னிடம் எப்போதும் விளையாடுகிறது, அவர் கொல்லப்பட வேண்டும். உங்களால் இயலு மாயின் உடனே அவரைக் கொன்றுவிடுங்கள் என்று சொன்னார்" என்று கோத்தபய கூறியதாக மௌலானா வாக்குமூலம் தந்துள்ளார்.

2009 சனவரி 8 அன்று தன் வீட்டில் இருந்து அலுவலகத்திற்கு செல்லும் போது லசந்தா சுட்டுக் கொல்லப்பட்டார். ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்புக் கமிட்டியின் கணக்குப்படி போர் முடிவுற்ற கடைசிப் பத்தாண்டில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களில் லசந்தா 19வது ஆள் ஆவர்.

லசந்தாவைப் படுகொலை செய்ததன் மூலம் மாபெரும் அச்சம் விதைக்கப்பட்டு பலரும் மௌனிக்கப்பட்டனர் என்று அம்பிகா சத்குகானந்தம் சொல்கிறார்.

## இராசபக்சேக்களின் இரண்டாவது ஆட்சிக் காலம்

2010 வாக்கில் இராசபக்சேக்கள் பெரும் பாலான ஊடகங்களை மௌனிக்கச் செய்தனர்.

இராசபக்சே சகோதரர்கள் போர் வெற்றியின் மீதமர்ந்து கொண்டனர். அவ்வாண்டு நவம்பரில் மீண்டும் அதிபராக மகிந்த இராசபக்சே தெரிவு செய்யப்பட்டார். கோத்தபய பாதுகாப்புத் துறை செயலராகவே தொடர்ந்தார். போர் வெற்றி அவர்களை மக்களிடையே கதாநாயகர்களாக ஆக்கியது.

இரண்டாவது ஆட்சிக் காலத்தின் முதல் சில ஆண்டுகளில் இராசபக்சேக்கள் தமது புகழைப் பயன்படுத்தி தங்கள் அதிகாரத்தை உறுதிசெய்து கொண்டனர். குற்றங்களுக்கு தண்டனைக் கிடையாது என்ற அச்சமின்மையும் நாடே தங்களுக்கு சொந்தம் என்ற உணர்வும் அவர்களிடம் இருந்தது. இராசபக்சே குடும்பம் எல்லாமாக மாறிப் போனது. உடனடி உறவினர் மட்டுமின்றி தூரத்து உறவினர்கள் வரை எல்லோருக்கும் அரசு பதவிகளோ அல்லது தொழில் வாய்ப்புகளோ அல்லது அரசின் சலுகைகளோ கொடுக்கபட்டன. இராசபக்சே குடும்பத்தில் கிட்டதட்ட 40 பேருக்கு அரசப் பதவிகள் கொடுக்கப்பட்டன. வெகுசில ஆண்டுகளில் இராசபக்சே குடும்பத்தினர் நாட்டின் 70% வரவுசெலவுத் தொகையை கட்டுப் படுத்தக் கூடியவர்களாக மாறிப்போயினர்.

இராசபக்சேக்கள் மீதான ஊழல் குற்றச் சாட்டுகள் சுழன்றடித்தன, அவர்கள் மீதான பொதுக்கருத்து மாறத் தொடங்கியது. இலங்கைக்கு வெளியில் உள்ள கமுக்க நிறுவனங்களில் இராசபக்சே குடும்பத்தினர் பெரும் பணத்தை முதலீடு செய்துள்ளனர் என்று புலனாய்வு இதழியலுக்கான பன்னாட்டுக் கூட்டமைப்பு அம்பலப்படுத்தியது.

இராசபக்சேக்களின் இரண்டாவது ஆட்சிக் காலத்தின் முடிவில் அவர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு எதிரானப் போராட்டங்கள் எழுந்தன. ஊழல் எதிர்ப்பு என்ற பெயரில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் மகிந்த இராசபக்சே தோற்கடிக்கப்பட்டு மைத்ரிபால சிறிசேனா 2015 சனவரியில் சிறிலங்காவின் 6வது அதிபராக தெரிவு செய்யப்பட்டார்.

**நிசாந்தா சில்வாவின் வாக்குமூலம்**

20 ஆண்டுகாலம் சிரிலங்கா காவல்துறையின் உயர் பொறுப்பில் பணியாற்றிய நிசாந்தா சில்வா, இராசபக்சே ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் பற்றி விசாரிக்க சிறிசேனா அரசால் பணியமர்த்தப்பட்டவர். அவர் தனது வாக்குமூலத்தை ஐரோப்பிய புலனாய்வு நிறுவனங்களிடமும் ஹேக்கில் நடைபெற்ற மக்கள் தீர்ப்பாயத்திடமும் கொடுத்திருந்தார். அவர் முதல் முறையாக ஊடகத்திடம் தான் அறிந்தவற்றை சொல்லியுள்ளார். அவர் சிறிலங்காவை விட்டு ஏன் வெளியேறினார் என்ற கேள்விக்குப் பதிலாக, "தனக்கும் தனது குடும்பத்திற்கும் இராணுவப் புலனாய்வுதுறை, கடற்படை புலனாய்வுதுறை, முன்னாள் அதிபர் கோத்தபயவிடம் இருந்து உயிர் அச்சுறுத்தல் இருந்தது."

இவர் விசாரித்த வழக்குகளில் லசந்தா விக்ரசமசிங்கே கொலை வழக்கு முகன்மையானது. அதில் அவர் டிரிபோலி பிளாட்டூனின் பங்கைக் கண்டுபிடித்தார். லசந்தா கொலையில் தொடர்புடைய டிரிபோலி பிளாட்டூன் அமைப்பின் உறுப்பினர்கள் ஐவரின் தொலைபேசி எண்களைக் கண்டுபிடித்தார். அந்த தொலைபேசி எண்களையும் அவற்றுடனான அழைப்புகளையும் ஆய்வு செய்தபொழுது கொலைகாரர்கள் லசந்தாவின் வீட்டில் இருந்து அவர் கொலை செய்யப் படும் இடம் வரை பின்தொடர்ந்து வந்ததைக் கண்டுபிடித்தார்.

பல ஆண்டுகளாகவே இந்த கொலைக்குப் பின்னால் கோத்தபய இராசபக்சே இருப்பதாக பலரும் குற்றஞ்சாட்டி வந்தனர். நிசாந்தாதான் அந்தக் குற்றச்சாட்டை வலுப்படுத்தக் கூடிய சான்றை முதன்முதலாக கண்டுபிடித்தவர் ஆவர். "கோத்தபய டிரிபோலி பிளாட்டூனிடம் நேரடி தொடர்பில் இருந்தார். அதனால், அவரைக் குற்றவியல் புலனாய்வுப் பிரிவு முன்பு விசாரணைக்கு அழைத்தேன்" என்று நிசாந்தா சொல்கிறார்.

நிசாந்தாவின் இம்முடிவு மிகவும் துணிச்சலானது. ஏனென்றால் கோத்தபய ஆட்சியில் இல்லாவிட்டாலும் அவர் அதிகாரம் மிக்கவராகவே இருந்தார். அவருக்கு அதிகாரமிக்க நண்பர்கள் இருந்தனர்.

"லசந்தா கொலை வழக்கில் என் பெயரை ஏன் சந்தேகத்திற்குரியவராக சேர்த்தீர்கள்?" என்று கோத்தபய என்னிடம் கேட்டார். நான் தேவையானவற்றை மட்டுமே செய்வேன். தேவையில்லாதவற்றை நான் செய்வதில்லை. நீங்கள் யார் என்பதைப் பற்றி எனக்கு கவலையில்லை. நான் உங்கள் பெயரை சந்தேகத்திற்கு உரியவர் பட்டியலில் சேர்த்தேன்" என்று அவரிடம் சொன்னேன். என் பொருட்டு அவருக்கு அதிருப்தி இருப்பதாக காணப்பட்டார்" என்று நிசாந்தா சொல்கிறார்.

இராசபக்சேக்களிடம் பற்றுடன் இருக்கக்கூடிய அதிகாரமிக்க ஆட்கள் லசந்தா கொலைவழக்கு விசாரணைக்கு நீதிமன்றத்தில் முட்டுக்கட்டைப் போட்டனர்.

### நெருக்கடியில் இராசபக்சேக்கள்

அடுத்தடுத்த குற்றச்சாட்டுகள் இராச பக்சேக்களைச் சுற்றி எழுந்தன. மகிந்த இராசபக்சே ஊழல் குற்றச்சாட்டுகளுக்காக விசாரணைக்கு அழைக்கப்பட்டார்.

முன்னாள் பொருளியல் வளர்ச்சித் துறை அமைச்சர் பசில் இராசபக்சே நிதிசார் குற்றங்களுக்கானப் புலனாய்வுப் பிரிவால் சிறைப்படுத்தப் பட்டார். மகிந்தவின் மகன் நாமல் இராசபக்சேவும் மோசடிக் குற்றச்சாட்டில் சிக்கிக் கொண்டார். இராசபக்சேக்களும் அவரது கூட்டாளிகளும் பாதுகாப்பு இழந்துப் போனார்கள்.

“யாரும் இதை எதிர்பார்க்கவில்லை. அவர்கள் பத்தாண்டுகாலம் ஆட்சியில் இருந்தார்கள். திடீரென்று எல்லாம் மாறிப் போனது. நாங்கள் மிகவும் பயந்து போய் இருந்தோம்” என்று மௌலானா சொல்கிறார்.

இராசபக்சேவை எதிர்க்கும் அரசியல்வாதியும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கம் 2005இல் தேவாலயத்தில் வைத்து நள்ளிரவு தொழுகை நடந்து கொண்டிருந்த போது கொல்லப்பட்டார். அவ்வழக்கில் அக்டோபர் 2015இல் பிள்ளையான் குற்றவியல் புலனாய்வு பிரிவால் விசாரணைக் கைதியாக மட்டக்களப்பில் சிறைப்படுத்தப் பட்டார்.

அது அவருடைய சொந்த ஊர் என்பதால் அவருக்கு செல்வாக்கு இருந்தது. எனவே, சிறையிலும் அவர் ஓர் அரசியல்வாதியாக சிறப்புச் சலுகையுடன் இருந்தார்.

### உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கு திட்டமிடல்

”குண்டு வெடிப்புக்கு 19 மாதங்களுக்கு முன்பு 2017 செப்டம்பரில் மட்டக்களப்புச் சிறைச் சாலையில் பிள்ளையானை அவரது அறையில் சந்தித்தேன். “ஆர்வத்தைத் தூண்டக்கூடிய சில சிறையாளர்கள் இங்கு இருக்கிறார்கள். அவர்கள் மிகவும் ‘தீவிரமானவர்கள்’. அவர்களில் ஒருவரை நீ சந்திக்க வேண்டும்” என்று பிள்ளையான் என்னிடம் சொன்னார். ஒரு சிறைக்காவலர் அந்த சிறையாளரை அழைத்து வந்தார். “அவர் கறுப்பு நிறத்தவராக, தாடியுடன் இருந்தார். அவர் பெயர் ஜைனி மௌல்வி”என்று மௌலானா சொல்கிறார்.

ஜைனி அசிம் மௌல்வி சமய தீவிரவாதக் குற்றங்களுக்காக அங்கு சிறையில் அடைக்கப் பட்டிருந்தார். அவரது சகோதரர் ஜாகிரான் தலைமறைவாக இருந்தார். அவர் தேசிய தவ்ஹீத் ஜமாத் (National Thowheed Jamad) அமைப்புக்கு உறுப்பினர்களைத் திரட்டி வந்தார். அது ஓர் இசுலாமிய தீவிரவாதக் குழுவாகும். அது சிறிலங்காவில் கலிபா ஆட்சியைக் கொண்டுவர விரும்பியது.

“அவர்கள் சாவுக்காக காத்திருக்கிறார்கள். அதன் மூலம் அவர்கள் சொர்க்கத்திற்கு செல்ல விரும்புகிறார்கள்.” ஆனால், பிள்ளையானோ, “இது நல்லது. அவர்களை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம்” என்று சொன்னார். அவர்களுக்கு இவ்வுலகில் எதன் மீதும் ஈடுபாடு இல்லை. அவர்களைப் பிணையில் வெளியே எடுப்பதற்கு செலவு செய்து ஒரு வழக்கறிஞரை அமர்த்தினேன். அவர்கள் பிணையில் வெளியே வந்தார்கள்.

“மூன்று மாதங்களுக்குப் பிறகு சனவரி 2018 இல் புலனாய்வுத் துறையின் முன்னாள் இயக்குநர் சுரேஷ் சாலையுடன் இவர்களுக்கு ஒரு சந்திப்பை ஏற்படுத்துமாறு பிள்ளையான் என்னிடம் சொன்னார்” என்று மௌலானா சொல்கிறார்.

இராசபக்சே ஆட்சிக் காலத்தில் சுரேஷ் சாலை மிக வேகமாக வளர்ந்து புலனாய்வுத் துறையின் இயக்குநராகப் பதவி உயர்வுப் பெற்றிருந்தார். 2015இல் இராசபக்சே தேர்தலில் தோற்ற பிறகு, புதிய அரசாங்கத்தால் இவர் மலேசியாவுக்குப் பணியிடமாற்றம் செய்யப்பட்டார். அவர் அப்போதும் இராசபக்சேக்களுக்கு மிகவும் பற்றுடன் இருந்தார். திரைக்குப் பின்னால் இருந்து கொண்டு இராணுவத்தில் பெரும் செல்வாக்கு செலுத்தி வந்தார்.

தன் பெயரை சொல்ல விரும்பாத, உயர் பதவியில் இருக்கும் அதிகாரி ஒருவர், “சுரேஷ் சாலை எப்படி செயல்படக் கூடியவர்” என்று சானல் 4 இடம் பகிர்ந்துள்ளார். கோத்தபயவின் கட்டுப்பாட்டில் இருப்பவர் சுரேஷ் சாலை. அதனால், மிக இலகுவாக உயர் பதவியை அவரால் அடைய முடிந்தது. இவர்தான் சிறிலங்காவின் ஏராளமான பிரச்சனைகளுக்கு குற்றஞ்சாட்டப்பட வேண்டியவர்.

“பிள்ளையான் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பிப்ரவரி 2018ஆம் ஆண்டு நான் சிறையில் இருந்து வெளியே எடுத்த நபரும் சுரேஷ் சாலையும் சந்திப்பதற்கு நான் ஒழுங்கு செய்தேன். அந்த சந்திப்பு நடைபெற்ற இடம் கரடிப்புவல் ஆகும். அங்கு ஒரு பெரிய தென்னந்தோப்பு உள்ளது. அங்கு ஒரேயொரு வீடு இருந்தது. நான் செல்லும் போதே அங்கு சுரேஷ் சாலை வந்திருந்தார். தேசிய தவ்ஹீது ஜமாத் உறுப்பினர்கள் வரும்வரை நாங்கள் காத்திருந்தோம். அவர்கள் வெள்ளை மூடுந்தில் (வேன்) வந்தார்கள். அதில் ஜைனி



இருந்தார். அவருடன் ஜாகிரானும் வந்திருந்தார். ஜாக்கிரான் தங்களுடைய தலைவர் என்று ஜைனி எனக்கு அறிமுகப்படுத்தினார். நான் அவர்களை சுரேஷ் சாலைக்கு அறிமுகப்படுத்தினேன். என்னை வெளியே நிற்கச் சொல்லிவிட்டு அவர்கள் வீட்டுக்குள் சென்றுவிட்டனர். அவர்களுக்கு இடையிலான சந்திப்பு மூன்று மணி நேரம் நடைபெற்றது. அந்தச் சந்திப்பு முடிந்தவுடன் சுரேஷ் சாலை, “சிறிலங்காவுக்குப் பாதுகாப்பற்ற ஒரு சூழல் வேண்டும்” என இராசபக்சேக்கள் விரும்புவதாகவும், “கோத்தபய அதிபராவதற்கு அதுஒன்றுதான் வழி என்றும் என்னிடம் சொன்னார்” என்று மௌலானா சொல்கிறார்.

இந்த சந்திப்பு நடந்ததாக சொல்லப்படும் நாட்களில் தான் மலேசியாவில் இருந்ததாக சுரேஷ் சாலை சொல்கிறார்.

2018இன் இறுதிவாக்கில் தேசிய தவ்ஜீத் ஜமாத் தலைப்புச் செய்திகளில் அடிபடத் தொடங்கியது. இரு காவல்துறையினரின் உடல்கள் மட்டக் களப்பில் ஐயத்திற்கு இடமான வகையில் கிடைத்தன. இக்கொலையைச் செய்துவிட்டு தேசிய தவ்ஹீத் ஜமாத்தினர் தப்பிச் சென்றுவிட்டனர். சனவரி 2019இல் காவல்துறை விசாரணையில் தென்னந் தோப்பில் உள்ள அந்த பாதுகாப்பான வீட்டை வந்தடைந்தனர். அந்த இடத்தில்தான் சுரேஷ் சாலைக்கும் தவ்ஹீத் ஜமாத் உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற்றது. அந்த வீட்டைக் காவல்துறையினர் சோதனையிட்ட போது அதிர்ச்சிதரக் கூடிய பொருட்கள் கிடைத்தன. 100 கிலோவுக்கு மேல் யூரியா நைட்ரேட் என்ற வெடி மருந்து கிடைத்தது. கூடவே, கருவிகளையும் இராணுவம் சார் வன்மியங்களையும் *(military hardwares)* பார்க்க முடிந்தது. சந்தேகத்திற்குரிய இருவர் கைது செய்யப்பட்டனர். அவரிடம் கேள்வி எழுப்பிய போது, அந்த வீடோ அல்லது அந்த பயிற்சி மையமோ ஜாகிரானால் நடத்தப்பட்டு வருகிறது என்பதும் அவர்கள் தேசிய தவ்ஹீது ஜமாத்தின் உறுப்பினர்கள் என்பதும் தெரியவந்தது.

ஜாகிரானையும் என்.டி.ஜே. உறுப்பினர் களையும் கைது செய்வதற்குப் போதுமான தகவல்கள் காவல்துறையிடம் இருந்தன. ஆனால், ஒவ்வொரு முறையும் காவல்துறையின் புலனாய்வுக்கு குறுக்கே இரும்புக் கதவுகள் வந்தன. என்.டி.ஜே வின் தலைவரைக் கண்டு பிடிக்க காவல்துறையின் புலனாய்வுப் பிரிவு முயலும் போதெல்லாம் இராணுவப் புலனாய்வுப் பிரிவு குறுக்கே வந்து சில தகவல்களைக் கொடுக்கும். அத்தகவல்கள் அடிப்படைகள் அற்றவை என்பது பின்னர் தெரிய வரும்.

முரண்பட்ட, பொய்யான தகவல்களைக் கொடுப்பதன் மூலம் இராணுவப் புலனாய்வுப் பிரிவு காவல்துறையின் புலனாய்வை ஒவ்வொரு கட்டத்திலும் முடக்குவதற்கு முயன்றிருக்கிறது.

“இராணுவப் புலனாய்வு துறை கொடுத்த தகவல்கள் அனைத்தும் பொய்யானவை என்பதும் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்குப் பின்பு தெளிவாக தெரியவந்தது. இதுவொரு மிகப் பெரிய குற்றம். இதனால் எவ்வளவு பெரிய

அழிவுகள் ஏற்பட்டுள்ளன! இராணுவப் புலனாய்வும் அரசப் புலனாய்வும் இதுபோல் தவறாக வழிநடத்தாமல் இருந்திருக்குமாயின் கண்டிப்பாக குற்றவியல் புலனாய்வுப் பீரிவு(CID) இதில் தேசிய தவ்ஹீத் ஜமாத் ஈடுபட்டுள்ளதைக் கண்டுபிடித்திருக்க முடியும்." என்று அந்த உயரதிகாரி பதிவு செய்கிறார்.

குண்டுவெடிப்பு நடப்பதற்கு இரு கிழமைகளுக்கு முன்பு இந்தியப் புலனாய்வுத் துறை சிறிலங்காவின் அரசப் புலனாய்வுத் துறைக்கு ஜாகிரான் இத்தகைய தாக்குதலை நடத்தத் திட்டமிட்டிருப்பதைச் சொல்லி எச்சரித் துள்ளது. சிறிலங்கா காவல்துறையின் உயர் பொறுப்பில் இருந்தோர் எச்சரிக்கை எழுப்பி, பாதுகாப்பு அமைப்புகளுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளனர்.

உண்மையில் புலனாய்வுத் தகவல் கள் கத்தோலிக்க தேவாலயங்கள் வாய்ப்புள்ள இலக்குகள் என்பதைக்கூட துல்லியமாகக் காட்டின. ஆனால், அரசின் உயர் பொறுப்பில் இருந்தவர்களுக்கும் அதிபருக்கும் இச்செய்தி போய் சேரவில்லை என்று தாக்குதலுக்குப் பிறகு சொல்லப்படுகிறது.

"கிடைக்கப்பெற்றத் தகவல்கள் உறுதியானவை. எந்த நாளில், எந்த இடத்தில், யாரால், என்ன விதமான தாக்குதல் நடக்கப் போகிறது என எல்லாத் தகவல்களும் கிடைக்கப்பெற்றிருந்தன" என்று அந்த உயரதிகாரி சொல்கிறார்.

**உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்குப் பின்**

ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல் நடந்த அன்று காலை நேரத்தில் சுரேஷ் சாலை யிடம் இருந்து எனக்கு எதிர்பாராத அழைப்பு வந்தது. அவர் என்னை உடனடியாக கொழும்பில் உள்ள தாஜ் சமுத்ரா ஓட்டலுக்குப் போகச் சொன்னார். அங்கோர் ஆள் எனக்காக காத்திருப்பதாகவும் அங்குசென்று அவரை என்னுடன் மகிழுந்தில் அழைத்துக் கொண்டு அவர் சொல்லும் இடத்தில் அவரை இறக்கி விடுமாறும் அவரது தொலைபேசியை வாங்கி வைத்துக் கொள்ளுமாறும் எனக்கு அறிவுறுத்தினார். ஆனால், "நான் மட்டக்களப்பில் இருக்கிறேன்" என்று சொல்லிவிட்டேன்.

அதேநேரத்தில், தாஜ் சமுத்ரா ஓட்டலில் உள்ள சிசிடிவி கேமராக்கள் ஜாகிரானின் என்.டி.ஜே குழுவைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரை காலை 8:50 மணி வாக்கில் காட்டியது. அவர் வெடி மருந்துகள் அடங்கிய பையொன்றை முதுகில் மாட்டியிருந்தார். இவரைத்தான் சந்திக்குமாறு சுரேஷ் சாலை தன்னிடம் சொல்லியிருக்க வேண்டும் என்று மௌலானா இப்போது கருதுகிறார். அந்த ஆளுக்கு அப்போது ஒரு தொலைபேசி அழைப்பு வருகிறது. இரண்டு நிமிடத்திற்குப் பிறகு அவர் வெடிகுண்டை வெடிக்கச் செய்யாமல் அந்த விடுதியில் இருந்து வெளியேறுகிறார்.

நீர்கொழும்பில் உள்ள புனித செபஸ்டியன் தேவலாயத்தில் உயிர்த்த ஞாயிறு தொழுகை முடிவுக்கு வருகிறது. தொழுகை முடிந்து எல்லோரும் புறப்பட அணியமாகும் பொழுது முதல் மனித வெடிகுண்டு வெடித்தது. இதில் 115 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் 27 பேர் குழந்தைகள். இதற்குப் பிறகு ஒரே நேரத்தில் இரு வேறு தேலாயங்களிலும் மூன்று சொகுசு விடுதி களிலும் மனித வெடிகுண்டு தாக்குதல் நடந்தது. சாங்ரி லா விடுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஜாகிரானும் இன்னொரு ஆளும் ஈடுபட்டிருந்தனர்.

பிற்பகல் இரண்டு மணி வாக்கில் மத்திய கொழும்பில் உள்ள 'டிராபிகல் இன்' என்ற நடுத்தர விடுதியில் ஏழாவது குண்டு வெடித்தது. இதில் இருவர் கொல்லப்பட்டனர். இந்த தாக்கு தலில் வெடித்து சிதறியவர் தாஜ் சமுத்ரா விடுதியில் இருந்து அன்று காலை வெளியேறிய அதே ஆள்.

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்குப் பின்னான நாட்களில் நாட்டில் உள்ள பல்வேறு இடங்களிலும் காவல்துறை சோதனை நடத்தியது. இந்த சோதனைகளின் போது ஜாகிரானின் சகோதரர் ஜைனியை ஒரு மிட்டில் கண்டு பிடித்தனர். மட்டக்களப்புச் சிறையில் பிள்ளை யானுடன் மௌலானா சந்தித்தது இந்த ஆளைத்தான். படையினர் அந்த வீட்டை முற்றுகையிட்டு தாக்குவதற்கு அணியமாகிக் கொண்டிருந்த போதே, ஜைனி கைபேசி வழியாக நேரலையில் பேசிவிட்டு, வெடிகுண்டை வெடிக்கச் செய்து தனது மனைவி, குழந்தை களோடு தற்கொலை செய்துகொண்டார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு நடந்த பிறகு அதில் ஈடுபட்டவர்களின் முகத்தை என்னால் அடையாளம் காண முடிந்தது. முதலாவது ஆள் ஜாகிரான். அவர்தான் தலைவர். இரண்டாமவர் அவரது சகோதரர் ஜைனி. எனக்கு இந்த ஆட்களைத் தெரியும். அவர்களை நான் முன்பே சந்தித்திருந்தேன். நான் பயந்துபோனேன். பிள்ளையானைத் தொடர்பு கொண்டு பேசினேன். அவர், 'உனக்கு எதுவும் தெரியாது. அவ்வளவு தான். உன் வாயை மூடிக் கொண்டிரு' என்று சொன்னார் என மௌலானா சொல்கிறார்.





கடற்கரை விடுதிகளில் நடந்த தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களில் ஐந்து அமெரிக்கக் குடிமக்களும் இருந்தனர். எனவே, அமெரிக்கப் புலனாய்வு துறையான எப்.பி.ஐ.யும் தனது சொந்தப் புலனாய்வைத் தொடங்கியது.

"எப்.பி.ஐ. ஓர் ஐ.பி. முகவரியை *(IP address)* எங்களுடன் பகிர்ந்து கொண்டது. அதில் இருந்து ஜாகிரான் தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறார். அவர் யாரென கண்டுபிடிக்கச் சொன்னார்கள். அந்த ஐ.பி. முகவரி ஓர் இசுலாமியப் படை வீரருடையதாகும். அவர் இராணுவப் புலனாய்வுடன் தொடர்புடையவர்" என்று அந்த உயரதிகாரி சொல்கிறார்.

இந்த சந்தேகத்திற்கு உரிய ஆளை விசாரணைக்கு உட்படுத்துவதை இராணுவப் புலனாய்வுத் துறையே தடுத்தது. சுரேஷ் சாலையை குற்றஞ்சாட்டக் கூடிய சான்றுகள் கிடைக்கப் பெற்றன என்று அந்த உயர் அதிகாரி சொல்கிறார். சுரேஷ் சாலை கோத்தபயவுக்குப் புலனாய்வு துறையில் உள்ள மிகவும் நம்பிக்கைக்குரிய ஆளாகும்.

"சுரேஷ் சாலை இக்குண்டுவெடிப்பை நடத்துவதில் மிகப் பெரிய பங்காற்றியுள்ளார். அவர் இக்குண்டுவெடிப்பு நடத்துவதை எளிதாக்கியுள்ளார். மனித வெடிகுண்டு தாக்குதல் நடத்தியவர்கள் பற்றி அவருக்கு தெரிந்திருந்தது. குறிப்பாக ஜாகிரானும் அவரது செயல்பாடுகளும் அவருக்கு தெரிந்து இருந்தது" என்று உயரதிகாரி வாக்குமூலம் தந்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல் நடந்து சில நாட்களிலேயே கோத்தபய அரசியலில் நுழைந்தார். மகிந்த ஆதரவுடன் அதிபர் தேர்தலில் போட்டியிடப் போவதாக அவர் அறிவித்தார். அவர் தேர்தல் பரப்புரைகளில் இசுலாமிய வெறுப்பு அலையைத் தூண்டிவிட்டார். இப்போது நாட்டை சூழ்ந்துள்ள இசுலாமிய ஆபத்தில் இருந்து நாட்டை தன்னால் மட்டும் தான் மீட்க முடியும். தமிழர்களைத் தோற்கடித்தது போல் இந்த புதிய இசுலாமிய ஆபத்தில் இருந்தும் நாட்டைத் தன்னால் காப்பாற்ற முடியும் என்று தேர்தலில் பரப்புரை செய்தார். உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்குப் பின்னான ஆறு மாதங்களுக்குள் நடந்த அதிபர் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்றார் கோத்தபய. பிள்ளையான் உள்ளிட்ட இராசபக்சேக்களின் பற்றாளர்கள் இராசபக்சே குடும்பம் மீண்டும் ஆட்சிக்கு வந்ததை வரவேற்றனர்.

"இராசபக்சேக்களை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வருவதற்காக அவர்களின் கட்டளைக்கு ஏற்பவே இராசபக்சே பற்றாளர்கள் இந்த தாக்குதலை நடத்தினார்கள்" என்று மௌலானா சொல்கிறார்.

கோத்தபய பதவிக்கு வந்தவுடன் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு விசாரணையைத் தடம் புரளச் செய்தார். அவர் விசாரணையுடன் தொடர்புடைய அதிகாரிகளைப் பணியிட மாற்றம் செய்தார். அவர் விசாரணையை நாசப் படுத்தினார்.

சுரேஷ் சாலை நாட்டின் புலனாய்வுத் துறையின் தலைவராக கோத்தபயவால் பணியமர்த்தப்பட்டார். நவம்பர் 2022இல் பிள்ளையான் மட்டக்களப்பு நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டார். அடுத்த இரண்டு மாதத்தில் அந்த வழக்கு முடித்து வைக்கப்பட்டது.

அதிபர் விசாரணை ஆணைக்குழு தனது விசாரணையை முடித்து அறிக்கையைக் கொடுத்தது. கோத்தபய அந்த அறிக்கையை வெளியிட மறுத்துவிட்டார். அந்த அறிக்கை சானல் 4 க்கு கிடைத்துள்ளது. மனித வெடிகுண்டு தாக்குதல் நடத்தியக் குழுவின் தலைவரை பல ஆண்டுகளுக்கு முன்பே புலனாய்வுக் குழுவுக்கு தெரிந்திருந்தது என்று அவ்வறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது

தாக்குதல் நடந்தது முதலே நீதிக்காக உரக்கக் குரல் கொடுத்துக் கொண்டிருப்பவர் கத்தோலிக்க சபையின் தலைவர் கார்டினல் மால்கம் ரஞ்சித் ஆவார். "அரசு அதிகாரிகளுக்கு இத்தாக்குதலில் தொடர்பு இருப்பதற்கான சான்றுகள் உள்ளன. தற்சார்பான புலனாய்வு நடத்த வேண்டும்" என்று அவர் கோரி வருகிறார்.

"உண்மையைக் கண்டுபிடிக்கும் வரை நாங்கள் இந்த போராட்டத்தைத் தொடர்வோம். அதை தெரிந்து கொள்வதற்கான உரிமை மக்களுக்கு உண்டு" என்று அவர் சொல்கிறார். 2022 ஆம் ஆண்டு வாடிகனில் இருந்து போப் அவர்களும் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகளுக்கு நீதியை உறுதிசெய்ய வேண்டும் என்ற குரலை எழுப்பினார்.

பொருளியல் நெருக்கடி காரணமாக எழுந்த வெகுமக்கள் எழுச்சியின் பகுதியாக அதிபர் மாளிகையை மக்கள் கைப்பற்றினர். செப்டமர் 2022 இல் கோத்தபய நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. சில கிழமைகளுக்குப் பிறகு அவர் சிறிலங்காவுக்கு திரும்பினார். இராசபக்சளோடு நெருக்கமாக இருப்பவர்கள் மேல்மட்டத்தில் இருக்கிறார்கள். அவர்கள் இன்னும் நாட்டைத் திருடிக் கொண்டிருக் கிறார்கள். பலன் அடைகிறார்கள். இதுவொரு வாழ்க்கை முறையாக மாறிவிட்டது. அரசியல் வாழ்வியலாக மாறிவிட்டது. இதுவொரு அமைப்பாக நிலைப்பெற்றுள்ளது. எனவே இராச பக்சேக்களைத் தாண்டி களையெடுக்கப்பட வேண்டிய பலரும் உள்ளனர் என்று சன்டே லீடர் முன்னாள் ஆசிரியர் சொல்கிறார்.

இந்த குற்றச்சாட்டுகள் கோத்தபயவிடமும் பிள்ளையானிடமும் முன் வைக்கப்பட்டது. அவர்கள் பதிலளிக்கவில்லை. சுரேஷ் சாலை



என்.டி.ஜே உறுப்பினர்களைச் சந்தித்ததாக சொல்லப்படும் நாட்களில் தான் மலேசியாவில் இருந்ததாகவும் குண்டுவெடிப்பு நடந்த பொழுது இந்தியாவில் இருந்ததாகவும் சனவரி 2018க்கும் 2019 ஏப்ரலுக்கும் இடைப்பட்ட காலத்தில் பாது காப்புக் கட்டமைப்புகளில் எவ்வித செயல் பாட்டிலும் இல்லை என்றும் சுரேஷ் சாலை சானல் - 4 க்கு சொல்லியுள்ளார்.

இந்த குட்டுடைப்பாளர்களின் (Whistleblowers) வாக்குமூலங்கள் பல்வேறு கேள்விகளை எழுப்புகின்றன.

1. புலனாய்வுத் துறை அதிகாரிகள் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு நடத்திய ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளை இரகசியமாக சந்தித்தார்களா?

2. பயங்கரவாதக் குழுவைக் கண்டுபிடிக்க முயன்ற காவல்துறையை இராணுவப் புலனாய்வுப் பிரிவு தவறாக வழிநடத்தியதா?

3. குண்டுவெடிப்புக்கான விசாரணையை கோத்தபய அரசு நாசப்படுத்தியதா?

இந்த ஆவணப்படம் வெளிவந்ததை தொடர்ந்து உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பை விசாரிப்பதற்கு முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதியின் தலைமையில் நாடாளுமன்ற நிலைக் குழு ஒன்றை அமைத்துள்ளது சிறிலங்கா அரசு. இதை நம்ப மறுத்து பன்னாட்டுப் புலனாய்வை வலியுறுத்துகிறார் கார்டினல் மால்கம் இரஞ்சித்.

எதிர்க்கட்சி தலைவரான சஜித் பிரேமதாசாவும் பன்னாட்டுப் புலனாய்வைக் கோரியுள்ளார். இசுலாமியர்கள் தரப்பும் இக்கோரிக்கையை எழுப்பத் தொடங்கியுள்ளது.

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்குப் பன்னாட்டுப் புலனாய்வு வேண்டுமென சிங்களத்

தரப்பில் இருந்து எழும் குரல்களை இறையாண்மை, ஆட்சிப்புல ஓர்மை என்ற பெயரால் கட்டுப்படுத்த முடியவில்லை.

சிங்கள பௌத்தப் பேரினாவதம் சிங்களவர் களிடையே தனிமைப்படுவதற்கான வழித்தடம் தெரியத் தொடங்கியுள்ளது. அரகலயா போராட்டம் ஊழல் எதிர்ப்பின் பெயரால்தான் எழுந்தது என்றாலும் சிங்கள வெகுமக்களில் ஒரு தரப்பினரிடம் இராசபக்சேக்கள் தனிமைப் பட்டதைக் காட்டி நின்றது. இப்போது உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கு நீதி வேண்டுமாயின் பன்னாட்டுப் புலனாய்வு வேண்டும் என சிங்களர் களில் ஒருசாரார் கேட்கத் தொடங்கியுள்ளனர்.

தமிழ் மக்கள் உறுதியுடன் நின்று போராடினால் சிங்கள பௌத்தப் பேரினவாதம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முற்றிலும் தனிமைப்படும் நிலைமைகள் தோன்றும்.

ஈழத் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள், மாந்த குலத்திற்கு எதிரானக் குற்றங்கள், இனவழிப்புக் குற்றங்களுக்கு எதிராகப் பன்னாட்டுப் புலனாய்வு நடத்த வேண்டும் என்ற குரல் சிங்களத் தரப்பில் இருந்தும் எழ முடியும்.

நீதிக்கான போராட்டத்தை சோர்வின்றியும் நம்பிக்கையோடும் தொடர்வோம்!

**- செந்தில்**

**நன்றி மக்கள் முன்னணி இணையதளம்**



# பா.ஜ.க. அரசின் பகாசூர ஊழல்

அனைத்து கட்சிகளும் ஊழல்கட்சிகள்! நாங்களே உத்தமர்கள்" என மார்தட்டி, சிபிஐ ரெய்டுகள், விசாரணைகள் யாவற்றையும் செய்யும் பாஜக அரசு எத்தகைய படுகேவலமான ஊழல்களை செய்துள்ளது என இந்திய கணக்கு தணிக்கை ஆணையம் (CAG) அம்பலப்படுத்தி உள்ளது! இந்திய வரலாறே இதற்கு முன் கண்டறி யாத பாஜக ஆட்சியின் ஊழல் பட்டியலைப் பாரீர்;

ஒன்றல்ல, இரண்டல்ல, ஒவ்வொரு துறையிலும் ஊழல், முறைகேடுகள் நடந்திருப்பது சிகிநி ஆய்வில் கன கச்சிதமாக வெளிப்பட்டுள்ளது! துரதிர்ஷ்டவசமாக இந்தியாவின் முக்கிய ஊடகங்கள் திடீரென்று ஊமையாக மாறி விட்டன. அறம் இணைய இதழ் வாசகர்களுக்கு இந்த பகாசூர ஊழல்களின் சாராம்சத்தை இங்கு தருகிறோம்.

CAG எனப்படும் இந்திய கட்டுப்பாட்டு கணக்கு தணிக்கை ஆணையம் என்பது இந்திய நீதித் துறையைப் போல ஒரு தன்னாட்சி பெற்ற அமைப்பாகும். இதன் தலைவர் உச்ச நீதிமன்ற நீதிபதிக்குரிய அந்தஸ்த்து உள்ளவராவார். தற்போது இதன் தலைவராக கிரிஸ் சந்திர முர்மு உள்ளார். இந்த அமைப்பு எல்லா ஆட்சி காலங்களிலும் பாரபட்சமில்லாமல் ஒவ்வொரு துறையின் ஆடிட் ரிப்போர்ட்களை அலசி ஆராய்ந்து உண்மைகளை தெரிவிப்பார்கள். இது இந்திய ஜனநாயகத்தின் ஆகச் சிறந்த சிறப்பம் சமாகும்.

பாஜக அரசின் பாரத் மாலா திட்ட ஏலம் விடுதலில் ஏடாகூடமாக முறைகேடுகள் நடந்திருக் கின்றன. ஒரு கிலோ மீட்டர் சாலை அமைக்க அதிகபட்ச மதிப்பீடே 15.37 கோடி ரூபாய் தான் என்பது நடைமுறையில் உள்ள நிலையில், இந்த திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தத்தின்படி, செலவு 32.17 கோடியாக அதிகரித்து காட்டியுள்ளனர். அதாவது, ஆட்சியாளர்கள் கொள்ளையடிக்க இத்திட்டத் தின் நிதி இரண்டு மடங்காக உயர்த்தப் பட்டுள்ளது. இந்த வகையில் இந்தியா முழுமையும் உள்ள நெடுஞ்சாலைகள் மற்றும் சாலைகளை விரைவுச் சாலைகளாக இணைக்கும் பாரத் மாலா திட்டத்தின்,

- முதல் கட்டத்தில் 34,800 கிலோ மீட்டர் சாலை அமைக்க, மத்திய அமைச்சரவை 5,35,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது.
- இரண்டாம் கட்டத்தில். 26,316 கிலோ மீட்டர் சாலை அமைக்க 8,46,588 கோடி ரூபாய் மதிப்பில் ஒப்பந்தங்கள் வழங்கப் பட்டுள்ளன.
- ஆக மொத்தம் 13 லட்சத்து 81 ஆயிரத்து 588 கோடி பணம் ஒதுக்கப்பட்டதில், 6 லட்சத்து 90

ஆயிரம் கோடி 790 கோடிகள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

### எவரும் செய்யத் துணியாத மோசடி!


துவாரகா விரைவுப் பாதை கட்டுமானத்தில், ஒப்பந்ததாரர் தேர்வு முதல் இறுதி வரை ஊழலோ ஊழல்! எங்கே சாலை போடுவதென நிலத்தை கையகப்படுத்தாமலே ஒப்பந்த பணிகள் கொடுத்த ஆட்சி இதுவாகத் தான் இருக்கும்.

➢ ஒரு கிலோ மீட்டருக்கு திட்டச் செலவு என்பது 18 கோடி ரூபாய் தான்! ஆனால், 250 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது ஏன் என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

➢ நாட்டின் முதல் எட்டு வழி விரைவு சாலையான துவாரகா பாதை சுமார் 9,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்ட திட்டமிடப்பட்டது.

➢ ஹரியானாவில் 18.9 கிலோ மீட்டர் தூரத்திற்கும் தில்லியில் 10.1 கிலோ மீட்டர் தூரத்துக்குமான இத்திட்டத்தில் ஒரு கிலோ மீட்டர் சாலையை அமைக்க தாராள மதிப்பீடாக 18 கோடி ஆகும் என்று முடிவு செய்திருந்த சூழலில் அதிரடியாக அது ஒரு கிலோ மீட்ட ருக்கு 250 கோடி ரூபாய் என அதிகரித்து கணக்கு காட்டப்பட்டுள்ளது.

➢ அதாவது, திட்ட மதிப்பீட்டை விடவும் பல மடங்கு உயர்த்தி காட்டப்பட்டது 10 சதவிதம், 20 சதவிகிதமல்ல, 1,400 சதவிகிதம்! இது நினைத்துப் பார்க்கவே முடியாத, யாரும் செய்யக் கூசும் ஊழலாகும். இது வரை இந்திய நெடுஞ்சாலைத் துறையில் திட்ட மதிப்பை விடவும் 14 மடங்கு உயர்த்தி கணக்கு எழுதி, பணத்தை அள்ளும் களவாணித்தனத்தை எவரும் செய்யத் துணிந்ததில்லை!




### வாகன ஓட்டிகளை சூறையாடும் சுங்கச் சாவடிகள்!

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் சுங்கச்சாவடிகள் என்ற பெயரில் வாகன ஓட்டி களிடம் பகிரங்கமான பகல்கொள்ளை நடத்தி வருவதையும் மத்திய கணக்கு ஆணையம் அம்பலப்படுத்தி உள்ளது.

➢ குறிப்பிட்ட ஐந்து சுங்கச் சாவடிகளின் கணக்குகளை ஆய்வு செய்ததிலேயே வாகன ஓட்டிகளிடம் இருந்து நிர்ணயிக்கப்பட்ட தொகையை விட, ரூ.154 கோடி அளவிற்கு அதிக தொகையை வசூல் செய்திருப்பது உறுதியாகியுள்ளது.

இப்படி இந்தியா முழுமையும் உள்ளவற்றை கணக்கில் கொண்டால் சில லட்சங்களில் இதில் ஊழல் கரைபுரண்டோடுவதை அறியலாம்.

### ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் அகோர ஊழல்!

தேர்தலை கருத்தில் கொண்டு 2018ஆம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி ஆயுஷ்மான் பாரத் என்ற பெயரில் மருத்துவக் காப்பீடு திட்டம் அறிவித்து, அதை வைத்து வெற்றியும் பெற்றார். அந்த மருத்துவ திட்டத்தில் மக்களின் பெயரால் மருத்துவ நிறுவனங்களும், மந்திரிமார்களும் தான் பலன் அடைந்துள்ளனர் என்பது தற்போது அம்பல மாகியுள்ளது.

➢ பிரதான் மந்திரி ஆயுஷ்மான் பாரத் ஜன் ஆரோக்யா யோஜனா எனப்படும் டேட்டா தளத்தில் இல்லாத விலாசங்கள், போலிப் பெயர்கள், சம்பந்தமில்லாத பிறந்த தேதிகள், இஷ்டத்திற்கு எழுதப்பட்ட சுகாதாரக் கணக்குகள், குடும்ப உறிப்பினர் எண்ணிக்கையில் உண்மைக்கு புறம்பான தகவல்கள் போன்ற முரண்பாடுகள் இருப்பதாக அந்த சி.ஏ.ஜி. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. செயல்பாட்டில் இல்லாத மருத்துவமனைகள், எந்த வசதியுமற்ற மருத்துவமனைகள் பேரில் எல்லாம் கணக்கு எழுதி பணத்தை களவாடியுள்ளனர் எனத் தெரிய வருகிறது.

➢ தற்போதைய நிலவரப்படி 24.3 கோடி ஆயுஷ்மான் பாரத் மருத்துவக் காப்பீடு அட்டைகள் வழங்கப்பட்டதாக கணக்கில் உள்ளது. இதில் 7 லட்சத்து 49 ஆயிரத்து 820 இன்சூரன்ஸ் அட்டைகளில் ஒரே செல்




போன் எண் (9999999999) உள்ளது என்றால், எவ்வளவு தெனாவெட்டாக ஊழல் செய்திருப்பார்கள் என்பது அதிர்ச்சியளிக்கிறது.

➢ மருத்துவக் காப்பீடு திட்ட சிகிச்சையில் 88,670 பேர் இறந்துள்ளனர். இப்படி சிணீச்சையின் போது இறந்த 3,346 நபர்களுக்கு புதிதாக சிணீச்சை பார்த்ததாகச் சொல்லியும் மோசடி செய்து காப்பீடு பெறப்பட்டிருப்பது தான் கொடுமை! இதில் பல்லாயிரம் கோடிகளில் படு பயங்கர முறைகேடுகள் நடந்திருப்பதாக சிஏஜி அறிக்கை உறுதி செய்கிறது.

**அயோத்தி ராமர் கோவில் அயோக்கியத்தனங்கள்!**

அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவதற்காக மிகக் குறைந்த விலையில் நிலங்களை வாங்கி குவித்து, அதை அயோத்தி ராமர் அறக் கட்டளைக்கு பல மடங்கு அதிகமாக விற்று பக்தியின் பெயரால் மோசடிகள் அரங் கேறியுள்ளன.

➢ கோவில் மற்றும் நகர மேம்பாட்டு கட்டுமானங்களில் எல்லாம் ஆதாயங் களுக்கு மேல் ஆதாயம் அடைந்துள்ளனர். அயோத்யா மேம்பாடு திட்டத்தில், ஒப்பந்த பணி கொடுப்பதில் கையூட்டு, உத்திரவாதப் பணத்தில் சலுகைகள்.. என எதிலும் ஊழல்களே! இந்தப்படி பார்த்தால், ஒப்பந்ததாரர்கள் கோடிக் கணக்கில் ஓகோன்னு லாபம் அடைந்திருப்பதாகவும், இந்த திட்டத்தை செயல்படுத்திய வகையில் சுமார் ரூ.8.22 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அம்பலமாகியுள்ளது.

**கிராமப்புற மேம்பாட்டு திட்ட கிராதக ஊழல்!**

செயல்பாடுகளை விட விளம்பரங்களை அதிகம் நம்பும் அரசாக பாஜக அரசு உள்ளது என்பது இந்த ஊழலில் உறுதியாகியுள்ளது. கிராமப்புற மேம்பாட்டு அமைச்ச கத்தின் ஓய்வூதிய திட்டத்துக்கான நிதி, விளம்பரத்துக்காக அள்ளி இறைக்கப்பட்டுள்ளது.

➢ 2017ஆம் ஆண்டு இத்திட்டத்தை 19 மாநிலங்களில் விளம்பரப்படுத்த, 5 விளம்பரப் பலகைகள் வைக்க, 2. கோடி 444 லட்சம் ரூபாய் ஓய்வூதிய திட்டநிதியில் இருந்து முறைகேடாக எடுத்து செலவு செய்யப்பட்டுள்ளது. இன்னும் திட்ட செயல்பாட்டை ஆராய்ந்தால் என்னென்ன ஊழல்கள் தெரிய வருமோ?

**ஹெச்.ஏ.எல்லில் ஏப்பம் விட்ட 160 கோடி!**

➢ ஹெச்.ஏ.எல் என அழைக்கப்படும் இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் பொதுத் துறை நிறுவனத்தில் சென்ற ஆட்சி காலத்திலேயே சட்ட விரோதமாக ஒப்பந்த தாரார்களுக்கு பணம் தந்த வகையில் 13.28 கோடி ஊழல் செய்ததாக சி.ஏ.ஜி அறிக்கை தந்து 2019ல் மோடி அரசு அவமானப் பட்டது.

➢ ஹெச்.ஏ.எல். விமான எஞ்சின் வடிவமைப்பில் கோளாறு செய்த வகையில் பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது., தவறான திட்ட வடிவமைப்பு கோளாறுகள், உற்பத்தியில் தாமதம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் சுமார் ரூ.159.23 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருப் பதாக சி.ஏ.ஜி. அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த வகையில் CAG தரும் ஆய்வு அறிக்கை களை நாடாளுமன்றத்தில் வைத்தாக வேண்டும் என்பது தொன்றுதொட்டு மரபாக உள்ளது. அந்த வகையில் சமீபத்திய நாடாளு மன்றக் கூட்டத் தொடரின் இறுதி நாளில் ‘காக் ரிப்போர்ட்’ சபையில் மின்னல் வேகத்தில் வைக்கப்பட்டு, விவாதங்களின்றி கடந்து போனது. இது குறித்து பெரும்பாலான இந்திய ஊடகங்கள் மௌனம் சாதிப்பதையும் நாம் உணரலாம். எனினும், ஒரு சில ஊடகங்கள் இதை வெளிக் கொண்டு வந்துள்ளன. இதை தடுப்பதற்காகத் தான் குற்றவியல் சட்டங்களில் திருத்தம் செய்து மசோதாவை நிறைவேற்றியுள்ளது பாஜக அரசு. அந்த வகையில் அடுத்த முறை பாஜக ஆட்சிக்கு வந்தால் இந்திய கணக்கு தணிக்கை ஆணையத்தின் தலைவரைக் கூட கட்டுப்படுத்தும் அல்லது கைது செய்யும் அதிகாரம் கொண்டதாக மசோதா வடிவமைக்கப்பட்டுள்ளது.

**- சாவித்திரி கண்ணன் (அறம் இணைய இதழ்)**

# செல்வம் ஒரு சோதனையே...!

தலையங்கம்

இது நாகரிக உலகம், அறிவியலின் உச்சத்தில் உலகம் சென்று கொண்டு இருக்கின்றது இங்கு ஆண் பெண் என அனைவரும் சமம் என்று கூறிக் கொண்டாலும் இன்றளவும் பெண்கள் தங்கள் உரிமைக்காகவும், பாதுகாப்புக்காகவும் போராட வேண்டிய நிலையில் தான் இருக்கின்றார்கள். பெண்பிள்ளை பிறந்தாலே அவமானம் அதை கொலை செய்து விட வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் இன்றும் இருக்கின்றார்கள். பெண்களை இச்சைப் பொருளாகவே பார்க்க கூடியவர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். நாளுக்கு நாள் பாலியல் வன்கொடுமைகளில் வயதுவரம்பு வித்தியாசம் இல்லாமல் பாதிக்கக்கூடிய பெண்கள் அதிகமாகிக் கொண்டு இருக்கிறார்கள். இதுவெல்லாம் ஒருபுறம் இருக்க நாங்கள் சுதந்திரமானவர்கள் யாருக்கும் அடிமைகள் அல்ல. நாங்கள் எங்கள் இஷ்டம் போல் நாங்கள் இருப்போம் என்று கூறி கலாச்சார ஒழுக்க சீர்கேட்டில் நிறைய பெண்கள் பலியாகிக் கொண்டு இருக்கிறார்கள். இவை அனைத்திற்கும் காரணம் பெண்களுக்கான சரியான சட்ட வழிமுறைகளை பெரும்பாலான அரசுகள் நடைமுறைப்படுத்தாததே காரணமாகும்.

இஸ்லாமிய சட்டத்தில் மட்டுமே பெண்களுக்கான அனைத்து உரிமைகளும், பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது. பெண்களின் பாதுகாப்பு கேடயமாக இஸ்லாமிய சட்டம் உள்ளது. பெண்களின் சமூக உரிமைகள் பற்றி பேசும்போது அந்தப் பெண்ணை இருளின் ஆழத்திலிருந்து மீட்டு கண்ணியம் மற்றும் கருணையின் உயர்ந்த பீடத்திற்கு உயர்த்தியவர்கள் முஹம்மத் நபி(ஸல்) அவர்கள்.

தாயின் உரிமைகளை பாதுகாக்க தவறியவர்களை அல்லாஹ் பாவம் செய்தவர்களாக அறிவித்துள்ளான் என்றார்கள் முஹம்மது நபி (ஸல்)அவர்கள். "நான் அதிகம் கடமைப்பட்டிருப்பது யாருக்கு? என்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் நபி தோழர் கேட்டார் அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாயாருக்கு என்றார்கள். அடுத்ததாக யாருக்கு என்றார்கள் தாயாருக்கு என்றார்கள். அடுத்ததாக யாருக்கு என்று அவர் கேட்டபோது அதே பதிலையே கூறினார்கள். அடுத்தது யார்?என்று அவர் மீண்டும் கேட்டபோது தந்தைக்கு என்றார்கள்.

**பாதுகாப்பு**

ஒழுக்கமுள்ள பெண்கள் மீது பழி சுமத்தி பின்னர் நான்கு சாட்சிகளைக் கொண்டு வராதவர்களை எண்பது கசையடி அடியுங்கள் அவர்களின் சாட்சியத்தை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாதீர்கள் அவர்கள் குற்றம் புரிபவர்கள். (அந்நூர் : 4)

நம்பிக்கை கொண்டோரே பெண்களை வலுக்கட்டாயமாக அடைவது உங்களுக்கு அனுமதி இல்லை அவர்களுக்கு நீங்கள் வழங்கியதில் எதையும் பிடுங்கிக் கொள்வதற்காக அவர்களை துன்புறுத்தாதீர்கள். அவர்கள் வெளிப்படையான வெட்கக்கேடானதை செய்தால் தவிர அவர்களுடன் நல்ல முறையில் குடும்பம் நடத்துங்கள். நீங்கள் அவர்களை வெறுத்தால் நீங்கள் வெறுக்கும் ஒன்றில் அல்லாஹ் ஏராளமான நன்மைகளை அமைத்திருப்பான். (அன்னிஸா : 19)

தமது பார்வைகளை தாழ்த்திக் கொள்ளுமாறும் தமது கற்பை பேணிக் கொள்ளுமாறும் நம்பிக்கை கொண்ட ஆண்களுக்கு கூறுவீ ராக இது அவர்களுக்கு பரிசுத்தமானது அவர்கள் செய்வதை அல்லாஹ் நன்கறிந்தவன்.(அந்நூர் : 30)

நபியே உமது மனைவியருக்கும், உமது புதல்வியருக்கும் ஏனைய நம்பிக்கை கொண்ட பெண்களுக்கும் முக்காடுகளை தொங்கவிடுமாறு கூறுவீ ராக அவர்கள் ஒழுக்கமுடைய பெண்கள் என்று அறியப்படவும் தொல்லை படுத்தப்படாமல் இருக்கவும் இது ஏற்றது அல்லாஹ் மன்னிப்பவனாகவும் நிகரற்ற அன்புடையோனாகவும் இருக்கிறான். (அல் அஹ்ஜாப் :59)

**உரிமைகள்**

குறைவாக இருந்தாலும் அதிகமாக இருந்தாலும் பெற்றோரும் உறவினர்களும் விட்டுச் சென்றவற்றில் ஆண்களுக்கும் பங்கு உண்டு. பெற்றோரும் உறவினர்களும் விட்டுச் சென்றவற்றில் பெண்களுக்கும் பங்கு உண்டு இப்பங்கீடு கட்டாயக் கடமை. (அந்நிஸா : 7)

பெண்களுக்கு அவர்களின் மணக்கொடைகளை கட்டாயமாக கொடுத்து விடுங்கள் அவர்களாக மனமுவந்து அதில் எதையேனும் விட்டுத் தந்தால் மனநிறைவுடன் மகிழ்வுடனும் அதை உண்ணுங்கள். (அந்நிஸா :4)

பெண்களை விவாகரத்து செய்த பின் அவர்கள் தமது காலக்கெடுவை நிறைவு செய்து விட்டால் அவர்கள் (தமக்குப் பிடித்த) கணவர்களை விருப்பப்பட்டு நல்ல முறையில் நடந்து கொள்வதை தடுக்காதீர்கள். (அல்பகரா : 232)

ஆண்களிலோ, பெண்களிலோ நம்பிக்கை கொண்டு நல்லறங்கள் செய்தோர் சொர்க்கத்தில் நுழைவார்கள் சிறிதளவும் அவர்கள் அநீதி இழைக்கப்பட மாட்டார்கள். (அந்நிஸா : 124)

இஸ்லாம் மட்டுமே பெண்களுக்கான உரிமைகளையும், பாதுகாப்பையும் நடைமுறைப்படுத்திக் காட்டிய மார்க்கமாகும்.

# ஏழைகள் வாழும் பகுதியை மறைத்து நடத்திய

# G20 மாநாடு 2023




# முக்கியத்துவம் பெற்ற அரபு நாடுகள்..!

சில நேரங்களில் நாம் நமது வீடுகளில் விழாக்களை நடத்துகிறோம் அதற்கு முக்கியமான நபர்களை அழைத்துள்ளோம் என வைத்துக் கொள்வோம். இந்த அழைப்பில் மிகவும் பணக்காரர்கள் போன்றோரை அழைத்துள்ளோம். அனைவரும் வருவார்கள். இந்த மாதிரியான மனிதர்கள் வரும் பொழுது நமது அக்கா, தங்கை அல்லது அண்ணன் தம்பி யாராவது பார்ப்பதற்கு அவ்வளவு பாங்கான தோற்றதோடு இல்லாதிருப்பர் எனில் அதாவது ஒரு ஏழைப்பட்ட தோற்றத்தை தருவார் எனில் அவரை அந்த பணக்காரர்கள் வந்து செல்லும்வரை ஓர் அறையிலே இருந்துகொள் என்று கூறினால், அந்த சகோதரன் அல்லது அந்த சகோதரி எவ்வளவு வருத்தப்படுவார்? இது என்ன குடும்பம் என்றல்லவா நினைப்பார்கள்.

அதேபோல் தான் டெல்லியில் நடந்த G20 கூட்டத்திற்கு 21 நாடுகளில் இருந்து முக்கியமான தலைவர்கள், நிதி செயலாளர்கள் ஆகியோரெல்லாம் வருகை தந்ததால், டெல்லியில் ஏழை மக்கள் வாழக்கூடிய பகுதிக்கு ஒரு பெரிய பச்சைத் திரையைக் கொண்டு மூடிவிட்டார்கள். அந்த ஏழைகள் அனைவருக்கும் மிகுந்த மனக்குமுறல், நாங்களும் தானே இந்தியாவில் இருக்கிறோம் எங்களை மறைத்துவிட்டு என்ன இந்தியா? என குமுறுகிறார்கள்.

G20 தலைமை என்பது ஏதோ நமது பிரதமரின் கடுமையான உழைப்பில் கிடைத்தது போன்ற தொரு தோற்றத்தைக் கொடுக்கிறார்கள். ஆனால் இந்த G20 கடந்த வருடம் இந்தோனேஷியாவில் நடந்தது, இப்பொழுது நமது நாட்டில் அடுத்து பிரேசிலில் நடக்கவுள்ளது.

டெல்லியில் 20 நாட்களுக்கு முன்பே logo வெல்லாம் போட்டு, ஒலிம்பிக் போட்டிகளுக்கு என்னவெல்லாம் ஏற்பாடுகள் செய்வார்களா, அதேபோல் "வருகிறது வருகிறது ஒலிம்பிக்ஸ் வருகிறது" என்பதுபோல நமது பிரதமரே ஒரு கட்டத்தில் ஒலிம்பிக்கிற்கு ஈடாக இதனைப் பேசியிருக்கிறார்.

அந்தளவிற்கு முக்கியத்துவம் கொடுத்து, டெல்லியை முழுவதுமாக முடக்கி, டெல்லியில் ஒரு வாகனம் கூட செல்ல முடியாத அளவிற்கு, மக்களை எல்லாம் உள்ளே அடைத்து ஒரு பெரிய விழாவாம்! அதற்கு இந்தியா தலைமையாம்! நிறைய சாதித்து விடுவார்களாம்!

இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட பல அமைப்புகள் இருக்கின்றன. பண்டித ஜவஹர்லால் நேரு ஆரம்பித்த "NAM"(Non Alignment Movement). இது "ஒன்று அமெரிக்காவுடன் இருக்க வேண்டும் இல்லை ரஷ்யாவுடன் இருக்க வேண்டும்" என இந்த உலகத்தை இரண்டாக பிளந்து

கொண்டிருந்த நேரத்தில் "அணி சேரா நாடுகளின் அணி" என்ற ஒன்றை உருவாக்கினார்கள் அதன்பிறகு அவருடைய பேரன் ராஜிவ் காந்தி, "சாக்" என்றொரு அமைப்பை ஏற்படுத்தினார் அவையெல்லாம் இப்பொழுது காணாமல் போய் விட்டன. ஆனால் இந்த G20 மட்டும் கூடி விருந்து சாப்பிட்டு களைந்து கொண்டு இருக்கிறார்கள்.

இது முதன் முதலில் இரண்டாவது உலகப் போருக்கு பிறகு, "பொருளாதார ஒருங்கமைப்பு" வேண்டும் என்பதற்காக International Monitor Fund, உலக வங்கி அனைத்தையும் ஒன்றிணைத்து அது சிறிது சிறிதாக ஒரு அமைப்பாக மாறி நி20 என்ற ஒரு வடிவத்திற்கு வந்தது.

பொருளாதார ஒருங்கமைப்பு வேண்டும் என்பதற்காகத் தான் இவை.

உலகத்தில் 195 நாடுகள் இருக்கின்றன அதில் 193 நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கமாக இருக்கின்றன. ஒரு 20 நாடுகள் கூடியவுடன் இதனை மிகைப்படுத்தி பேசுகிறார்கள். இதில் கூடியது ஒன்றும் குறைவான நாடுகள் அல்ல ஓரளவிற்கு நாம் அதனை நியாயமாக அணுகும்போது 80% உலகத்தினுடைய Gross hold product இந்த நாடுகளிலிருந்து தான் வருகின்றது. 75% சர்வதேச வர்த்தகம் இந்த நாடு களில் நடக்கின்றது. உலக மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பகுதி இந்த 20 நாடுகளும் இப்பொழுது 21 தென் ஆப்ரிக்காவையும் இணைத்த பிறகு. அதன்பிறகு உலகத்தின் பரப்பளவில் 60% இடத்தைக் கொண்டவர்கள். இப்படி பெரிய நாடுகள் வந்ததால் தான் என்னவோ ஏழைகளை மறைத்துவிட்டார்கள் போலும்.

பிறகு இந்த டெல்லி ஒன்றிணைவில் நியாமாக ஒரு சாதனை உண்டு!

என்னவென்றால் இதுவரைக்கும் இந்த G20 கூடி கூடிக் கலைவார்களே தவிர ஒரு பொதுவான முடிவோ, அறிக்கையோ இருப்பதில்லை. ஆனால் டெல்லியில் நடந்த மாநாட்டில் ஒரு பொது முடிவிற்கு வந்திருக்கிறார்கள். ஆனால் அதற்காக நிறைய சிரமப்பட்டார்கள். இந்தியாவில் இருக்கக் கூடிய அமிதாப் காந்த் அதற்காக நிறைய உழைத்தார். அவருடன் மற்றொரு ஆந்திராவைச் சேர்ந்த சகோதரியும் நன்கு உழைத்தார்கள்.

அந்த ஒரு சிறிய ஒப்பந்தத்திற்கு வருவதற்கு 200 முதல் 300 முறை அவர்களுக்குள் ஆலோசனை செய்தார்களாம். உடனே உலகத்தில் அனைத்தும் மாறிவிடும் என்று நினைத்து விடாதீர்கள் அனைத்தும் அப்படியேத்தான் இருக்கும். நம் மணிப்பூருக்கு இன்னும் எந்த ஒரு தீர்வும் இல்லை. நாங்கள் உக்ரேன் யுத்தத்தை முடித்துவிடுவோம் என்று கூறினார்கள், சம்மந்தப்பட்ட இரு தரபினரும் ரஷ்யாவும், உக்ரேனும் எந்த முடிவிற்கும் வரவில்லை.

இவர்களுக்கு 15 வரைவுகளையும் (Draft) கிழித்துப் போடுவதற்கு நேரம் எடுத்ததற்கு காரணம் இந்த உக்ரேன் பிரச்சனை பற்றித்தான் என்கிறார்கள். இப்பொழுது என்ன உக்ரேன் போர் நிற்கப்போகிறதா? இதன் முக்கியமான குற்றவாளி அமெரிக்கா ஆனால் அந்த அமெரிக்காவை சேர்ந்த ஜோ பைடன் இந்த மாநாட்டிற்கு வருகை புரிந்திருந்தார். அவர் இங்கு அவருடைய வேலைகளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தார். அதாவது அவருடைய ஆயுதங்களை நாம் வாங்கிக் கொள்ள வேண்டும் அந்த வியாபாரத்திற்காக தான் அவர் இங்கு வருகை புரிந்துள்ளார்.

இதற்கிடையில் சந்தடி சாக்கில் சவுதி அரேபியாவை கொஞ்சம் அரவணைத்து வைத்துக் கொண்டார். இவர்கள் இடையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அதில் சவுதியும் ஒரு தரப்பினர். ஏனெனில் சவுதி அமெரிக்காவிடம் இருந்து எதையும் வாங்க மாட்டேன் என்று தனியாக நிற்பதால்,


அவ்வாறு ஏதேனும் ஏற்பட்டுவிட்டால் அமெரிக்கா இயங்காது என்பதாலும் அதாவது அமெரிக்காவினுடைய வீழ்ந்துவரும் பொருளாதாரத்தில் ஒரு பெரிய கவலை இருக்கின்றது என்பதாலும் ஜோ பைடன் ஓரளவிற்கு அவர் வசம் காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார்.

ஆனால் இந்த G20 மாநாட்டின் பிரகடனத்தில் பத்தி 78ல் என்ன கூறுகின்றார்கள் எனில், "சிறுபான்மையினர் உரிமைகள், மத நல்லிணக்கம் அனைத்தையும் பாதுகாப்போம்" என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் இவையெல்லாம் இந்தியாவில் நடந்து கொண்டிருக்கின்றதா? என்ன நடக்கிறது இந்தியாவில்? என்று காங்கிரஸை சேர்ந்த ஜெயராம் ரமேஷ் என்பவர் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் இது எவ்வளவு பெரிய கபட நாடகம் என்கிறார். "எல்லா கலாச்சாரங்களையும் அழிக்க வேண்டும், ஒரே நாடு ஒரே கலாச்சாரம், சிறுபான்மையினரை கொடுமைப்படுத்துதல்" எல்லாம் அல்லவா இந்தியாவில் நடந்து கொண்டிருக்கின்றன என்கிறார்.

அடுத்ததாக Climate change என்ற கால நிலை மாற்றத்தில் ஒரு முக்கியமான சாதனை என்று கூறுகிறார்கள். சூழ்நிலையை சரி செய்து





விடுவோம், ஒழுங்கு படுத்தி விடுவோம் என்கிறார்கள் ஆனால் இங்கு மணிப்பூரில் வனவாசிகள் படும்பாடு வாழ இயலவில்லை என்றளவிற்கு வந்துவிட்டது. காடுகளை எல்லாம் இரண்டு பெரிய பணக்காரர்களுக்கு தாரை வார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவரது இந்த அறிக்கை சிறிய அறிக்கைதான் ஆனால் மிகவும் வலுவான கருத்துக்களை முன்வைக்கிறது.

மேலும் இந்த அறிக்கையில் இந்த பிரகடன மானது இவர்களுக்கு உள்ளேயுள்ள வஞ்சகத் தனத்தை தான் காட்டுகின்றது என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஆனால் இந்த டெல்லியில் நடந்த மாநாட்டின் பிரகடனம் முக்கியமான சாதனை என அனைத்து பத்திரிகைகளும் கூறிக்கொண்டு இருக்கின்றன. இந்த G20 இரண்டாம் உலகப்போருக்கு பிறகு அதாவது 1995இல் ஆரம்பிக்கப்பட்டு 1999இல் ஓர் வடிவம் எடுத்து ஒவ்வொரு நாடாக இணைந்து 20 நாடுகள் கலந்து கொண்டது.

உலகத்தில் 195 நாடுகள் இருக்கும் பொழுது, அதில் 193 நாடுகள் இருக்கக்கூடிய சபையும் இருக்கின்றது அதில் ஏதோ தலைவர்கள் ஆகிவிட்டது போல் இவர்கள் காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஏனெனில் நடக்கவிருக்கக் கூடிய தேர்தலில் இவர்கள் சார்பாக எந்த ஒரு நல்ல செயல்களையும் குறிப்பிட இயலாததால் இதைக் காண்பிக்க முயல்கிறார்கள்.

இப்பொழுது நவம்பரில் இவர்களுடைய பதவிக்காலம் முடிகின்றது, முடிகின்ற பொழுது இணையதள வழி அனைவரையும் சந்திக்கலாம் என ஏதோ செய்து கொண்டிருக்கிறார்கள். அடுத்தது இந்த மாநாடு பிரேசிலில் நடக்க விருக்கிறது அவர்களுக்கு அங்கு தேர்தல் இல்லை ஆகையால் அவர்கள் இது போல் எதையும் செய்து கொண்டிருக்க மாட்டார்கள்.

இதில் என்னவென்றால், இந்த பாரத்-இந்தியா என்ற பிரச்சனையில், இவர் பதவியேற்றுக் கொள்ளும் பொழுது இந்தியாவினுடைய பிரதமர். இந்த G20 மாநாட்டின் பிரதிநிதித்துவத்தை பெறும் பொழுது அதாவது ஜனவரியில் இருந்து நவம்பர் வரையும் இவர் இந்தியாவினுடைய பிரதமர் ஆனால் அதனுடைய கடைசியில் மாநாடு நடக்கும் பொழுது இவர் பாரத்-னுடைய பிரதமர். ஏனென்று அனைவருக்கும் புரியும்!

உலக அரங்கில் அனைவருக்கும் இந்தியா வினுடைய பிரதமர் என்று தான் அனைவருக்கும் தெரியும். நமது அரசியலமைப்பு சட்டத்தின் ஓரிடத்தில் "India, that is Bharat" என்று இருக்கிறது ஆனால் இதைப் பற்றி உலக அரங்கில் என்ன தெரியும்? அவர்கள் இந்தியா என்றே குறிப்பிடுவார்கள். இவர்கள் இப்படி பெயரை குறிப்பிட்டது ஒரு இழுக்கை ஏற்படுத்தி விட்டது.

அடுத்தது இந்தியாவில் ஒரே எதிர் கட்சி என்று பல வெளிநாட்டு பத்திரிகைகளும், வட இந்திய பத்திரிகைகளும் குறிப்பிடுவது தி.மு.க.வைத் தான். இப்பொழுது இந்த சனாதனம் பற்றிய பேச்சு எழும்பொழுது, எங்கள் பதவியே போனாலும் நாங்கள் கொள்கையில் உறுதியாக இருப்போம். பெரியாரின் வழி, அண்ணாவின் வழி, கலைஞரின் வழி, ஸ்டாலின் வழி என்று இளம் தளபதி உதயநிதி ஸ்டாலின் சொன்ன பிறகு, என்ன ஆகிவிட்டது என்றால் உலகத்தின் ஒரே எதிர் கட்சி, கொள்கை ரீதியாகவும் அது தி.மு.க தான் என்று ஆகிவிட்டது. அதனால் பைடன் ஸ்டாலினுடைய கையைப் பிடித்துக்கொண்டார். இப்பொழுது ஸ்டாலின் -ஐ டெல்லிக்கு அழைத்து சர்வதேச தலைவர் ஆக்கியிருக்கிறார்.

அதன்பிறகு இந்தியாவிற்குள் ஒரு பாரத் பேருந்து ஓடி இருக்கின்றது, அது நமது குடியரசு தலைவர் திரௌபதி முர்மு வைத்த விருந்திற்கு இந்தியாவில் உள்ள அனைவரும் ஒரே காரில் சென்றுள்ளார்கள். அந்த கார் அங்கு வரும்போது இந்தியாவினுடைய கார் வருகிறது என்று அனை வரும் கூறுமளவில் சென்றிருக்கிறது.

இவர்கள் எந்த அளவிற்கு மக்களை பதட்டத் தோடு வைத்து இருக்கிறார்கள் என்றால், டெல்லியில் எல்லா அதிகாரத்தையும் வைத்துக் கொண்டார்கள். டெல்லி முதலமைச்சர் கெஜ்ரிவால் கொஞ்சம் அதிகாரத்தை கேட்டதற்கு ஒரு தனி Ordinance போட்டு பிறகு அதனை சட்டமாக்கி அதனை கையில் வைத்துள்ளார்கள். ஆனால் கடைசியில் என்ன ஆகிவிட்டது என்றால்,

திருமண வீட்டில் வீடியோ பதிவு செய்ய பறந்த ட்ரோனைப் பார்த்து உடனே உடனடியாக எச்சரித்துள்ளார்கள் பிறகு தான் தெரிந்திருக்கிறது அது திருமண வீட்டில் புகைப்படம் எடுக்க பறந்த ட்ரோன் என்று. இந்த அளவிற்கா நமது வான் பாதுகாப்பு கேவலமாக இருக்கிறது? இந்த சிறிய ட்ரோன்களைப் பார்த்து எச்சரிக்கை அடைவதற்கு?. அதாவது மடியில் கணம் அதனால் பயம் என்கின்ற பயம்.

இப்படி ஒரு விதமாக இவையெல்லாம் முடிந்த சூழலில், இந்தியாவினுடைய இந்த G20 மாநாட்டின் பிரகடனத்தால் உலக அளவில் நமது மானம் பாதுகாக்கப்படும்.

ஏதோ 200 அமர்வு, 300 கலந்தாய்வு, 15 வரைவு என இறுதியில் இந்தியாவினுடைய பிரகடனம் வந்தது அதைக் கொண்டு சிறிது இவர்கள் பெருமைப் பட்டுக் கொள்ளலாம். ஆனால் G20 ஒன்றும் நாளைக்கே உலகத்தை மாற்றிப் போடக் கூடிய ஒன்றல்ல. உக்ரேன் போர் நாளைக்கே நின்றுவிடப் போவதில்லை. காற்று மாசுப் பாட்டில் எந்த நாடும் உடன்பட மாட்டார்கள் ஆனால் இதுபோல் மாநாடுகளில் வந்து கைகுலுக்கி விட்டுச் செல்வார்கள். இப்பொழுது Economic Corridor என்று சொல்லக்கூடிய பொருளாதார தாழ்வாரம் ஒன்று உருவாகும் என்று கூறுகிறார்கள்.

பொருளாதாரத்தில் அமெரிக்கா செய்த முட்டாள் தனத்தில் அதாவது நேட்டோவில் உக்ரேன்-ஐ இணையச் சொல்லி, உக்ரேன் இணையப் போவதாகக் கூற, உடனே ரஷ்யா, அப்படி இணைந்தால் உன்னை ஆக்கிரமிப்பேன் என்று கூறி சண்டை ஏற்பட்டதால், உலக உணவுப் பொருட்கள் பரிவர்த்தனை பாதிக்கப்பட்டது. இதனால் உணவுப் பொருட்களின் விலை உயர்ந்து காணப்பட்டது. நாமே அரிசி ஏற்றுமதியைத் தடை செய்து வைத்துள்ளோம். இதற்கெல்லாம் பெரும் குற்றவாளி அமெரிக்கா தான்.

ரஷ்யா நேட்டோவுடன் உக்ரேன்-ஐ சேரக் கூடாது என தாக்க ஆரம்பித்ததால் ரஷ்யாவின் மீது பொருளாதார தடைகளை கொண்டு வந்தார்கள். இதனால் ரஷ்யாவினுடைய எண்ணெய்யை அதனால் விற்க இயலவில்லை. இதனை இந்தியா வாங்கி நல்ல லாபத்திற்கு விற்றது அது ஜெய்சங்கரின் நல்ல திறமை.


அதன் பிறகு Regional Currency என்ற பிராந்திய நாணயத்தை BRICS-இல் பேசினார்கள். இந்த கரன்சியை ஈரானுடன் பரிமாறிக் கொள்ளலாம், சீனாவிற்கு அவர்களுடைய நாணயங்களில் கொடுக்கலாம், ஜப்பானிற்கு அவர்களுடைய நாணயத்தில் கொடுக்கலாம் இப்படியாக ஒரு பொதுவான பண பரிவர்த்தனை BRICS-இல் வரும் என எதிர்பார்த்தார்கள் ஆனால் அதைப் பற்றி கலந்தாலோசிக்கவே இல்லை. இதனால் உலகப் பொருளாதாரம் வேறு ஓர் அளவிற்கு சென்றுவிட்டது.

முஸ்லிம் நாடுகள் இடையே இப்பொழுது ஏற்பட்டிருக்கக் கூடிய ஒற்றுமை மற்றும் பெட்ரோலிய உற்பத்தியை நாங்கள் முழுமையாக வைத்துக் கொள்வோம் என்று அவர்கள் எடுத்திருக்கக் கூடிய முடிவு, துருக்கி கத்தார் போன்ற நாடுகளுக்கு இடையே ஏற்பட்டிருக்கக் கூடிய Trade......... போன்றவற்றில் இந்தியாவும் இருக்கிறது, பாக்கிஸ்தானும் இருக்கிறது. எனவே இங்கு ஒரு Global Economic Situation ஒன்று உருவாகிறது இவற்றை முன்னேற்றிக் கொண்டு இதன் வழியாக நன்மை விளையுமா என்று நாம் பார்க்கலாம். இதற்கெல்லாம் நமது ஏற்றுமதி இறக்குமதியில் சமநிலையைக் கொணர்ந்து "Balance of Trade" கொண்ட நாடாக மாறிட வேண்டும். அதற்கு G20ஐ விட மற்ற நாடுகளோடு கொண்டிருக்கக் கூடிய உடன்படிக்கைகள் உதவலாம்.

இதைத்தான் கலைஞர் செய்திகளில் ஒரு செய்தியாகக் கூறினார்கள், இரண்டு வருடத்திற்கு முன்பு 55 பைசாவாக இருந்த ஆப்கானிஸ் தானுடைய நாணயம் இப்பொழுது 1ரூபாய் 10 பைசாவாக மாறிவிட்டது, ஒன்னும் தெரியாத வர்கள் என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருந்த வர்கள் எவ்வளவு அழகாக பொருளாதாரத்தை இரட்டிப்பாக்கி இருக்கிறார்கள்.

நாம் வேண்டுமானால் அவர்களிடமும் பாடம் படிக்கலாம் ஏனென்றால் நாமும் அவர்களும் நண்பர்களாகத்தான் இருக்கிறோம், கோதுமை ஏற்றுமதி செய்கிறோம், பட்ஜெட்டில் 200 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு நாம் ஒரு சிறந்த பொருளாதார வலுப்பெற்ற நாடாக ஆக வேண்டும் அதை இந்தியா செய்யும் என்று எதிர்பார்ப்போம்.

**-MGM**



# சமூக நீதியே

## பெருமானார்(ஸல்) அவர்களின் மாபெறும் செய்தி

## பெருமானார்(ஸல்) அவர்களின் தூது...!

சில மதங்கள் அன்பே கடவுள். அன்பே எல்லாம்... எனப் போதிப்பதுண்டு. அன்பு உண்மையிலேயே ஓர் அழகியப் பண்பு தான். அனைவரையும் அன்பால் அரவனைக்க முயல்வது போற்றத்தக்கதுதான்.

ஆனால் நமது தலைவர் முஹம்மத்(ஸல்) அவர்கள் நமக்குக் கொண்டு வந்த மார்க்கம் யாரும் யாருக்கும் அடிமை இல்லை. அல்லாஹ்வைத் தவிர யாரையும் நாம் அடிபணிய வேண்டாம். நாம் அல்லாஹ்வுக்கு மட்டுமே அடிமை எனப் பிரகடனப் படுத்தியது.

மனிதர்களுக்குள் எந்த நிலையிலும் எந்த ஏற்றத் தாழ்வு களுமில்லை. சமுதாயத்தில் சமத்துவம், சகோதரத்துவம், சமூக நீதி (Social Justice) எதிலும் நியாயம், நேர்மை என்பதையே நடைமுறையில் செய்து காட்டிவிட்டு சென்றார்கள்.

இப்படி சமத்துவத்தை நிலை நாட்டுவதில், சகோதரத்துவத்தை நாட்டு நடப்பாக ஆக்கிக் காட்டுவதில் தனி மனிதனின், நம்பிக்கைகள், அவனுடைய நிறம், நிலம், அவனுடைய பிறப்பு இப்படி எதுவும் எதிரே நின்றிட கூடாது. முடியாது பெருமானார்(ஸல்) அவர்கள் சமைத்துக் காட்டிய சமுதாய அமைப்பில்! வரலாற்றில் எப்போதும் நின்றதுமில்லை.

பெருமானார்(ஸல்) அவர்கள் செயம்படுத்திக் காட்டிய இந்த சமூக நீதிதான் (சமத்துவம், சகோதரத்துவம் இவைதான்) இஸ்லாத்தின் பக்கம், அலை, அலையாக மக்களைக் கொண்டு வந்து கொண்டிருக்கின்றது. அதனால் இஸ்லாம் தான் இன்றைய உலகில் மிகவும் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் மார்க்கம்.

யாரும், யார் மீதும் அன்பு செலுத்தலாம். பெரும்பாலும் இது நன்கு அறிமுகமானவர் களோடு சம்மந்தப்பட்ட ஒன்று. ஆனால் நமக்கு கீழே இருப்பவர்கள் எனக்கருதப்படுபவர்கள், காலகாலமாகத் (தீண்டத்தகாதவர்கள்) நம்மிலும் தாழ்வானவர்கள் என வழங்கப் படுபவர்கள், இவர்களை ஒரு கொள்கையை ஏற்றுக் கொண்டதால், சமமானவர்களாகவும், சகோதரர்களாகவும் நடத்துவது என்பதுதான் மாண்பு. அதிலே மிளிர வேண்டும் அன்பு. அந்தக் கொள்கை இறைவனின் இறுதி தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் நமக்கு வாழ்ந்து காட்டிய இஸ்லாம்! பரம்பரை எதிரிகளும் இந்த இனிய மார்க்கத்தில் இணைந்து விட்டால் சமமாக கருதப்படுவார்கள். அன்போடும், சகோதரத்துவ வாஞ்சையோடும் நடத்தப் படுவார்கள்.

இறைவனின் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களைப் படித்து இஸ்லாத்தை இன்று மேலைநாடுகளில் பலர் ஏற்றுக் கொள்கின்றார்

கள். அவர்கள் ஒரு புதிய சமூக நீதி வட்டத்துக்குள் வந்துவிட்டதாக மகிழ்கின்றார்கள். நீதியான மார்க்கத்திற்குள் நுழைந்து விட்டதாக பூரிக்கின்றார்கள். நிம்மதியடைகின்றார்கள். இந்த உலகில் வேறெங்குமில்லாத ஒரு வாழ்க்கை நெறியை ஒப்புவமை இல்லாத ஓர் உயர்ந்த வாழ்க்கை நெறியை ஏற்றுக் கொண்டதாக ஆனந்தப் படுகின்றார்கள்.

**நமது எதிரிகள்**

நமது எதிரிகள் முஸ்லிம்களாகிய ப்னாம் ஒரு காட்டுமிராண்டிக் கொள்கையைப் பின்பற்றிக் கொண்டிருப்பதாக பழிக்கின்றார்கள். அந்த மார்க்கம் 1400 ஆண்டுகளுக்கு முன்னால் வந்த மார்க்கம் எனப் பின்னுக்கு தள்ளுகின்றார்கள். இந்த முஸ்லிம்கள் நம்மை 1400 ஆண்டுகளுக்குப் பின்னால் கொண்டு செல்லப் பார்க்கின்றார்கள் எனப் புலம்புகின்றார்கள். 1400 ஆண்டுகளுக்கு முன்னால் கல்வியறிவற்ற ஒருவரால் பிரச்சாரம் செய்யப் பட்ட மார்க்கம் என இடிந்துரைக்கின்றார்கள்.


ஆனால் இஸ்லாத்தின் எதிரிகள் தாங்கள் மனித இனத்தின் வளர்ச்சிக்கும், நாகரிகங்களின் வளர்ச்சிக்கும் தாங்கள் என்ன செய்தார்கள் என்பதை ஏறிட்டுப் பார்க்க வேண்டும்.

இன்கே ஒன்றை நினைவு கூருவது பொருத்தமாக இருக்கும். மகாத்மா காந்தி அவர்களிடம் ஒரு முறை ஒரு கேல்வி மேலை நாட்டு கலாச்சாரத்தைப் பற்றி உங்களுடைய பார்வை என்ன? என்பதே அந்த கேள்வி. பதிலாக அவர் ஒரு வரட்டுச் சிரிப்பையே தந்தார்.

ஆனால் அந்த மகாத்மா காந்தி அவர்கள் பெருமானார் முஹம்மத்(ஸல்) அவர்களைப் பற்றி என்ன சொன்னார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மகாத்மா காந்தி நடத்திய “Young India” என்ற பத்திரிகையில் 1924ஆம் ஆண்டு இப்படி எழுதினார்கள்,

> ஆன்றைய நாள்களின் வாள் பலம் அல்ல. இஸ்லாத்திற்கு மக்களின் வாழ்க்கை ஓட்டத்தில் ஓர் இடத்தை வென்று தந்தது. இந்த கருத்தில் நான் ஒருமுறைக்கு இருமுறை உறுதியான





திருப்தி அடைந்தவனாக இருக்கின்றேன். இறுக்கமான எளிமை, உறுதியான சுயக் கட்டுப்பாடு, ஒப்பந்தங்களை எல்லா சூழல்களிலும் கட்டுப்பாட்டோடு நிறை வேற்றியது, தோழர்களிடமும், தன்னை பின்பற்றியவர்களிடமும் காட்டிய உள்ளன்பு, சுழன்றடித்த பகையிலும் வெளிப்படுத்திய நெஞ்சுரம், தன்னம் பிக்கை, தன்னாம் முடியும் என்ற நம்பிக்கை, கலப்பற்ற இறை நம்பிக்கை, எல்லா சூழலிலும் இறைவனையே முழுமையாக சார்ந்த நிற்பது. அதே போல் இலட்சியத்தில் கொண்ட உறுதி.

மேலே பட்டியலிட்ட. அருங்குணங்கள் தாம் அத்தனை எதிர்ப்புகளையும் எதிர் கொண்டு வெற்றி கொண்டு முன்னே சென்றிட வழிவகுத்தது. அல்லாமல் வாளல்ல. அந்த இறைத்தூதரின் வாழ்க்கை வரலாற்றின் இரண்டாம் பகுதியை நன்றாக படித்து முடித்த பின் அந்த பொன்னரிய மக்களின் வாழ்க்கையில் அதற்கு மேல் நான் படித்திட எதுவுமில்லை என்பதை மெத்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள் கின்றேன்.

**மேலை நாடுகளின் கலாச்சாரம்**

இறைவனின் தூதர்(ஸல்) அவர்கள் நமக்கொரு வாழ்க்கை நெறியைக் கொண்டு வந்தார்கள். நான் சொல்வேன் இந்த உலகிலுள்ள எல்லா வாழ்க்கை நெறிகளையும் விட அது மிகவும் சிறந்தது! மிகைந்தது!!

நிலையற்ற இந்த உலகின் ஒரு பகுதியில் ஆட்சியில் அமர்ந்த அமெரிக்க நிர்வாகி புஷ் பல புதிய குரூரமான சொற்களை நமக்கு அறிமுகப்படுத்துகின்றார். அவை,

***"Rendition Flights"* - ஒப்படைக்கும் விமானங்கள்.**


அதாவது முஸ்லிம் இளைஞர்களை சந்தடி இல்லாமல் கடத்திச் சென்று வேற்று நாட்டு முகாம்களில் வைத்துச் சித்திர வதைச் செய்வது. அவர்கள் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டார்கள் என ஒப்புதல் வாக்குமூலங்களை வாங்குவது. அமெரிக்காவின் உளவுத்துறைன் (CIA - Central Intelligence Agency) தான் இதனை முதன் முதலில் தொடங்கியது. பின்னர் உலகின் இதர உளவுத்துறைகளும் இதனை தொடங்கின. தொடர்ந்தன..

(இந்தியாவின் உளவுத்துறையும் இதனை மிகையாகப் பயன்படுத்தியது. இந்தியாவின் இரகசியச் சித்திரவதைக் கூடங்களைப் பற்றிய நூல் ஒன்றை வேர்கள் பதிப்பகம் வெளி யிட்டுள்ளது. வாசகர்கள் அதனைப் படிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.)

***Kidnab* - ஆட்கடத்தல்**

இதுவும் CIA என்ற அமெரிக்க உளவுத்துறை செய்யும் ஆட்கடத்தல் தான் முஸ்லிம் இளைஞர் களை சிலபல நேரங்களில் முஸ்லிமல்லாத மற்ற இளைஞர்களையும் கடத்தி சென்று ஆசை வார்த்தைகளைக் காட்டி தீவிரவாத செயல்களில் ஈடுபடச் செய்வது, பழியை முஸ்லிம்களின் மேல் போடுவது. அந்த அப்பாவிகள் தீவிரவாத செயல் களில் ஈடுபட மறுத்தால், சித்திரவதைச் செய்து அதன் மூலம் தீவிரவாத செயல்களில் ஈடுபட செய்வது. எப்படி நடந்தாலும் முஸ்லிம்கள் தாம் பழியை சுமக்க வேண்டும்.

(இதை உண்மைப்படுத்தும் விதமாக பல வீடியோக்களை எங்கள் யூடியூப் பக்கத்தில்




*(Vaigarai Velicham Official)* வெளியிட்டுள்ளோம். வாசகர்கள் அதனை பார்த்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.)

**_Torture_ - சித்திரிவதை**

(விளக்கம் மேலே சொல்லப்பட்டுள்ளது. படிக்க: இந்தியாவின் இரகசிய சித்திரவதைக் கூடங்கள் - வேர்கள் பதிப்பகம்.)

**_Detention Without Trail_ - நீதி விசாரணை இல்லாமல் நீண்ட காலம் சிறையில் வைப்பது.**

நீண்ட காலம் என்பது 25 - 30 ஆண்டுகள். இதில் அவர்கள் தங்கள் இளமையையும் தொலைத்து விடுகின்றார்கள். அவர்களுடைய குடும்பங்களும் சீரழிந்து விடுகின்றன.

இப்படி கொடுமைகளையும், சித்திரவதை களையும் முஸ்லிம்களின் வாழ்க்கையையும் சின்னாப்பின்னப்படுத்தும் புஷ் நிர்வாகம், நமது அகராதியில் பல சொற்களை இணைத்துள்ளது. இதனால் மனித உரிமைகள் அதல பாதாளத்தில் வீழ்ந்து கிடக்கின்றன.

நீதியைப் பெறுவது என்பது ஓர் அடிப்படை உரிமை என்பது கிருஸ்தவ உலகில், கூறிப்பாக புஷ் நிர்வாகத்தில் அறவே இல்லை. இவர்கள் மாபெரும் பிற்போக்குவாதிகளாகவும், அடிப் படை வாதிகளாகவும் நீடித்துக் கொண்டிருக் கின்றார்கள்.

**ஆப்கானிஸ்தான் பெண்களும், அமெரிக்காவும் கூட்டுப்படைகளும்**

அமெரிக்க அதிபர் புஷ் கும்பல் பெண்கலைப் பற்றி கொண்டிருந்த எண்னங்கள் மிகவும் தாழ் வானவை. அவர்கள் ஆப்கானிஸ்தான் பெண்களின் உரிமைகளைப் பற்றிப் பேசிடும் போது வாய்விட்டு சிரிக்கவே தோன்றுகின்றது. அவர்கள் ஆப்கானிஸ்தான் மீது தாக்க்தல் நடத்து வதன் மூலம், பெண்களை விடுதலைச் செய்யவே இந்தப் போர் எனச் சொன்ன போது நான் அதிர்ந்து போனேன்.

நான் ஆப்கானிஸ்தானின் இவர்களால் உருவாக்கப்பட்ட பிணக்காடுகளில் நடந்து சென்றிருக்கின்றேன். அதேபோல் ஈராக்கின் புதை குழிகளில் கடந்து சென்றிருக்கின்றேன். இவர்களின் ஆக்கிரமிப்பின் போது பெண்களின் நிலை மிகவும் மோசமாகவே இருந்தது.

ஆமெரிக்காவின் ஆக்கிரமிப்பின் போது (உண்மையில் 2007ஆம் ஆண்டில்) நான் காபூலுக்குச் சென்றிருந்தேன். அது அமெரிக்க மற்றும் நேட்டோ கூட்டுப்படைகளின் பிடியில் இருந்தது. நான் ஆப்கானிஸ்தானுக்குள் 2001இல் மாறுவேடம் பூண்டு நுழைந்தேன். தாலிபான் களின் பிடியில் சிக்கினேன். காபுலில் தான் சிறையில் வைக்கப்பட்டிருந்தேன். அந்த சிறைக்கு சில நாட்களுக்கு முன் (அதாவது 2007இல்) சென்றிருந்தேன். அந்த சிறையில் 12 வயது முதல் 16 வயது வரையிலான இளம் பெண்கள் நிரம்பவே அடைக்கப் பட்டிருந்தார்கள்.

இவர்கள், (இந்த பெண்கள் அமெரிக்காவும் நேட்டோ நாடுகளின் கூட்டுப்படைகளும்) கட்டவிழ்த்திட்ட கெடுபிடிகள் தாளாமல் தங்கள் வீடுகளை விட்டு ஓடியவர்கள். தங்கள் வயதை விட மூன்று மடங்கு, நான்கு மடங்கு வயதில் முதியவர்களைத் திருமணம் செய்திட கட்டாயப்படுத்தப்பட்ட பெண்கள். இந்தக் குழந்தைகளை முடிந்தவரை விலைக்கு வாங்கிடவே புஷ் நிர்வாகம் முடிவு செய்தது. அமெரிக்க நிர்வாகம் இவர்கள் ஆப்கானிஸ் தானில் பெண்களுக்கு உரிமை இல்லை என

வெளியே பொய்களை மூட்டைக்கட்டி விற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

**இறைவனின் தூதர்(ஸல்) அவர்களும், பெண் குழந்தைகளும்**

இறைவனின் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் செய்த முதல் சாதனை. மண்ணோடு பெண் குழந்தைகளை மகிழ்வோடு புதைத்துக் கொண்டிருந்த மாபாதகத்தைத் தடுத்தது தான். தொடர்ந்து கட்டாயத் திருமணங்களை சட்டத்திற்கு (ஷரியத்திற்கு) எதிரானது எனப் பிரகடனப்படுத்தினார்கள். திருமணங்களை முறைப்படுத்தினார்கள். எல்லாப் பெண்களும் எல்லா விதத்திலும் சமமானவர்கள் என பிரகடனப்படுத்தினார்கள். இதை வலியுறுத்தும், வழிகாட்டும் வசனங்களை இறைவன் அருளிக் கொண்டே இருந்தான்.

ஆனால் இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்யும் களத்திலிருந்து ஆலோசனை வழங்கும் அவை முதல், போர்க்களம் வரை பெண்கள் பெருமானார்(ஸல்) அவர்களின் காலத்தில் சமமாகவும், பல நேரங்களில் சாமர்த்திய மாகவும், தியாகங்களை அள்ளிச் சொறியும் பெரும் மனித ஆற்றலாகவும் விளங்கியதை, இன்றைய பழி மொழியாளர்களால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. இன்னும் பெண்களை தாழ்வானவர்களாகவும் தரமில்லாதவர் களாகவும் கருதுகின்ற நாடுகள் உலகெங்கும் இருக்கின்றன.

“வாதியுரானா” என்ற இடத்தில் தன்னுடைய ஹஜ்ஜின் இறுதியில் ஆற்றிய உரையில் இப்படிக் கூறினார்கள்.

*மக்களே! உங்களது இறைவன் ஒருவனே அறிந்து கொள்ளுங்கள்: எந்த ஓர் அரபிக்கும் ஓர் அரபி அல்லாதவரை விடவோ, எந்த ஓர் அரபி அல்லாத வருக்கும் ஓர் அரபியை விடவோ எந்த மேன்மையும் சிறப்பும் இல்லை. எந்த ஒரு வெள்ளையருக்கும் ஒரு கருப்பரை விடவோ, எந்த கருப்பருக்கும் ஒரு வெள்ளையரை விடவோ எந்த மேன்மை யும் சிறப்பும் இல்லை. இறையச்சம் மட்டுமே ஒருவரின் மேன்மையை நிர்ணயிக்கும். நிச்சயமாக அல்லாஹ் விடத்தில் உங்களில் மிகச் சிறந்தவர் உங்களில் அதிகம் இறையச்சம் உள்ளவர் தான்.*

*மக்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள் கருப்பு நிற (அபிசீனிய) அடிமை ஒருவர் உங்களுக்குத் தலைவராக ஆக்கப்பட்டாலும் அவர் அல்லாஹ்வின் வேதத்தைக் கொண்டு உங்களை வழி நடத்தி அதை உங்களுக்கிடையில் நிலை நிறுத்தும் காலமெல்லாம் (அவரது சொல்லைக்) கேட்டு நடங்கள்; (அவருக்குக்) கீழ்ப்படியுங்கள்!*

*அறிந்து கொள்ளுங்கள்! எனக்குப் பிறகு ஒருவர் மற்றவரின் கழுத்தை வெட்டி மாய்த்துக் கொள்ளும் வழிகெட்டவர் களாய் இறை நிராகரிப்பாளர்களாய் மாறி விடாதீர்கள்.*

*உங்களது இறைவனை நீங்கள் சந்திக்கும் வரை (இப்படியே வாழுங்கள்!) நீங்கள் அனைவரும் தவறாமல் அல்லாஹ்வின் முன்னிலையில் ஆஜராகப் போகிறீர்கள்! அப்போது அல்லாஹ் உங்களது செயல்களைப் பற்றி விசாரிப்பான். நான் மார்க்கத்தை உங்களுக்கு எடுத்துரைத்து விட்டேன். உங்களில் எவராவது மற்ற வருடைய பொருளின் மீது பொறுப் பேற்றிருந்தால், அதை அவர் உரிய முறையில் அதன் உரிமையாளரிடம் ஒப்படைத்து விடட்டும்!*

*மக்களே! முஸ்லிம்கள் அனைவரும் சகோதரர்கள். உங்கள் பணியாளர்கள் விஷயத்தில் பொறுப்புணர்வோடு நடந்து கொள்ளுங்கள்! அவர்களை நன்றாகப் பராமரியுங்கள்! நீங்கள் உண்பதையே அவர்களுக்கும் உண்ணக் கொடுங்கள்; நீங்கள் உடுத்துவதையே அவர்களுக்கும் உடுத்தச் செய்யுங்கள்!*

*அறியாமைக்கால அனைத்து விவகாரங் களும் என் பாதங்களுக்குக் கீழ் புதைப் பட்டுவிட்டன. மேலும், இன்று வரை யிலான எல்லா வட்டிக் கணக்குகளையும் ரத்துச் செய்து விட்டேன். எனினும், உங்களது மூலதனம் உங்களுக்கே உரியது.*

*அறிந்து கொள்ளுங்கள்! குழந்தை விரிப்புக்கே சொந்தமானது. (அனுமதிக்கப் பட்ட திருமண உறவுடன் இருக்கும்*

கணவனுக்கே குழந்தை உரியதாகும்) மணமுடித்துக் கொண்ட பிறகும் விபசாரம் செய்பவர் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும். எவர் தம் தந்தை அல்லாதவரை தம்முடைய தந்தையாக அழைக்கிறாரோ, எவர் தம் உரிமையாளர் அல்லாதவருடன் தம்மை இணைத்துக் கொள்கிறாரோ, அவர்கள் மீது அல்லாஹ்வுடைய, வானவர்களுடைய இன்னும், மக்கள் அனைவருடைய சாபமும் உண்டாகட்டும்! அவர்களின் கடமையான உபரியான எந்த வணக்கமும் ஏற்றுக் கொள்ளப்படாது.

கவனியுங்கள்! பெண்கள் விஷயத்தில் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்; அவர்களுக்கு நன்மையே நாடுங்கள்; அவர்கள் உங்களுக்குக் கட்டுப் பட்டவர்கள். அல்லாஹ்வுடைய அமானிதமாக அவர்களை நீங்கள் பெற்றுள்ளீர்கள்! எப்படி உங்கள் மனைவியர் மீது உங்களுக்கு உரிமைகள் இருக்கின்றனவோ, அதே போல் உங்கள் மனைவியருக்கும் உங்கள் மீது உரிமைகள் இருக்கின்றன. அவர்கள் உங்களுக்குச் சிறந்த முறையில் பணிவிடை ஆற்றட்டும்! அவர்களுக்குரிய கடமை என்னவென்றால், நீங்கள் எவரை விரும்ப மாட்டீர்களோ, அவரை அவர்கள் வீட்டுக்குள் அனுமதிக்காமல் இருக்கட்டும்; இன்னும், மானக்கேடான செயலைச் செய்யாமல் இருக்கட்டும்! அவர்கள் குற்றம் புரிந்தால், அவர்களைத் தண்டிக்கிற உரிமையும் உங்களுக்கு உண்டு. அது அவர்களை இலேசாக காயம்படாதபடி தண்டிப்பதாகும். அவர்களுக்கு ஒழுங்கான முறையில் உணவும் உடையும் வழங்குங்கள்; அவர்களுக்கு நன்மையை நாடுங்கள்; அவர்கள் உங்களின் உதவி யாளர்களாகவும் உங்களைச் சார்ந்தவர் களாகவும் இருக்கிறார்கள். அல்லாஹ்வின் பெயரை முன்மொழிந்தே நீங்கள் அவர்களுடன் மணவாழ்க்கை மேற் கொண்டுள்ளீர்கள்!

மக்களே! சிந்தித்துப் புரிந்து கொள்ளுங்கள்; எனது பேச்சை கவனமாக கேட்டுக் கொள்ளுங்கள். நான் எனது பிரச்சாரத்தை உங்களுக்கு எடுத்துரைத்து விட்டேன். உங்களிடையே அல்லாஹ்வின் வேதத்தை(யும் அவனது தூதரின் வழிமுறையும்) விட்டுச் செல்கிறேன். நீங்கள் அவற்றைப் பின்பற்றினால், ஒரு போதும் வழிகெட மாட்டீர்கள்!

மக்களே! உங்கள் இறைவனையே வணங்குங்கள்; உங்கள் இறைவனுக்கே பயந்து கொள்ளுங்கள்; கடமையான ஐவேளைத் தொழுகைகளையும் தவறாது பேணுங்கள்; (ரமளானில்) நோன்பு நோற்று வாருங்கள்; விருப்பமுடன் ஸகாத் கொடுத்து விடுங்கள்; அல்லாஹ்வின் இல்லத்தை ஹஜ் செய்யுங்கள்; உங்களில் அதிகாரம் உடையோருக்குக் கட்டுப்பட்டு நடங்கள்; நீங்கள் சொர்க்கம் செல்வீர்கள்!.

இறுதியில் மக்களை நோக்கி, மறுமை நாளில் உங்களிடம் என்னைப் பற்றி விசாரிக்கப்படும் போது நீங்கள் என்ன சொல்வீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு மக்கள், ”நீங்கள் (மார்க்க போதனைகள் அனைத்தையும் எங்களிடம்) தெரிவித்து விட்டீர்கள்; (உங்களது தூதுத்துவப் பொறுப்பை) நீங்கள் நிறைவேற்றி விட்டீர்கள்; (சமுதாயத்திற்கு) நன்மையை நாடினீர்கள் என நாங்கள் சாட்சியம் அளிப்போம் என்றார்கள். உடனே அல்லாஹ்வின் தூதர் அவர்கள், தமது ஆட்காட்டி விரலை வானை நோக்கி உயர்த்தி சைகை செய்துவிட்டுப் பிறகு, அதை மக்களை நோக்கித் தாழ்த்தி

“இறைவா! இதற்கு நீயே சாட்சி! இறைவா! இதற்கு நீயே சாட்சி! இறைவா! இதற்கு நீயே சாட்சி!” என்று முடித்தார்கள்.

இதைத்தான் விடைபெறும் உரை என்றும் அறியப்படுகின்றது. நான் இன்றும் என்னுடைய படுக்கை அறையில் அதனை பெரிதாக பசித்து வைத்திருக்கின்றேன். அதனை கிடைத்ததற்கரிய பெரிய பொக்கிஷமாக கருதுகின்றேன். மனித உரிமைகளின் ஒப்பற்ற பிரகடனமாகத் திகழ்ந்த இந்தப் பிரகடனத்திற்கு பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் பின்வரும் இறைவசனத்தை ஓதிக் காட்டினார்கள்,

இன்றைய தினம் உங்களுக்காக உங்களுடைய மார்க்கத்தை முழுமையாக்கி விட்டேன்; மேலும், நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன்; இன்னும், உங்களுக்காக நான் இஸ்லாம் மார்க்கத்தையே தேர்ந்தெடுத்துக் கொண்டேன். (அங்கீகரித்துக் கொண்டேன்.) (அல்குர்அன் 5:3)

இந்த உரையும் இந்த வசனமும் அவர்களின் இலட்சிய வெற்றியின் நிறைவை பற்றி அமைந்தன. அங்கு குழுமிழீருந்த மக்கள் இன்றளவும் உலகத்தின் தலை சிறந்த சிந்தனையாளர்கள் எனப் போற்றப்படு பவர்களும், பெருமானார்(ஸல்) அவர்களைப் புகழ்ந்து கொண்டே இருக்கின்றார்கள். புனிதத் தந்தை போஸ் ஒர்த் சுமித் - Bosworth Smith பெருமானார்(ஸல்) அவர்களின் வாழ்க்கையைப் பற்றி இப்படிக் கூறினார்கள்,

முஹம்மத்(ஸல்) அவர்கள் (பெருமானார் (ஸல்) அவர்கள்) அரசின் தலைவராகவும், தேவாலயங்களின் தலைவராகவும் இருந்தார்கள். "Head of the State and Church".

சீசராகவும்(ஆட்சியாளராகவும்), போப் (மதத் தலைவராகவும்) ஒரே நேரத்தில் திகழ்ந்தார்கள். "Caesar and Pope".

போப்பாக இருந்தார்கள். ஆனால் போப்-இன் படோடோபங்கள் எதுவும் அற்ற தாக! ஆட்சியாளராக இருந்தார். ஆனால் ஆட்சியாளரின் ஆடம்பரங்கள் எதுவு மில்லாத ஆட்சியில் எப்போதும் ஒரு பரிவாரத்தை பக்கத் துணையாக வைத்துக் கொண்டிருந்த ஓர் ஆட்சியாளர் அல்ல. ஒரு மெய்க் காப்பாளரைக் கூட அவர்கள் வைத்துக் கொண்டதில்லை. ஒரு காவல் துறையை அவர்களுடைய பரிபாலனம் கொண்டிருக்கவில்லை. ஒரு நிரந்தர வருமானமும் அவர்களுக்கு இல்லை.

இறைவனின் ஆணைப்படி இறைவனின் உதவிகளை மட்டும் நம்பி நின்று ஒருவர் ஆட்சிச் செய்தார் என்றால் அவர் முஹம்மத்(ஸல்) அவர்கள் தாம். எல்லா அதிகாரமும் கைவரப் பெற்றவர்களாக இருந்தார்கள். ஆனால் அதனை செயல்படுத்திட பரிவாரம் ஒன்றை வைத்திருக்கவில்லை. அதிகாரத்தின் பீடங் களுக்குப் பக்கத்திலும் கூட அவர்கள் சென்றதில்லை. அவர்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் எப்படி எளிமையாக இருந்தார்களோ, அதேபோல் பொது வாழ்க்கையிலும் எளிமையாகவே இருந்தார்கள். யதார்த்தங்களே அவர்களின் உள்ளும், புறமும் நின்றது. எங்கனும் நின்று நிலவியது.

*(Source: Reverend Bosworth Smith 1874. As Quoted by Yvonne Ridley in Radiance 15-21 April 2007 in the Article, Love, Way Social Justice - The core of Muhammad's Message)*

**இவர் மீதான வெறுப்பு**

என்னிடம் சிலர் கேட்கின்றார்கள், "இஸ்லாத்தை முஹம்மத்(ஸல்) அவர்களை ஏன் மக்கள் இத்துணை பாரதூரமாக வெறுக்கின்றார்கள்?" என்று நான் நேரே ஒரு பதிலைத்தான் சொல்லிக் கொண்டிருக்கின்றேன். பயம். பீதி!

தனக்கென ஒரு பட்டாளத்தை வைத்துக் கொள்ளாமல் இந்த உலகையாண்டார் ஒருவர் என்பதை இஸ்லாத்தின் எதிரிகளால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. அரசியலில் அகண்ட அதிகாரங்கள் தனக்கு வேண்டும் என ஆசைப்படாமல், ஆட்சியாளரின் பளபளப்பு களுக்கு ஆட்படாமல் ஒருவர் ஆட்சி செய்தார் என்பதை அந்த சில்லரை ஜென்மங்களால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை.


அமெரிக்க அதிபரும், ஜார்ஜ் புஷ் அவர்களும் பிரிட்டனின் பிரதம அமைச்சர் டோனி பிளேயர்களும் எது இத்துனை வலுவான ஒரு வல்லரசின் ஆட்சியாளராக முஹம்மது நபி அவர்களை ஆக்கியது? என்பதை ஆய்வுக்கு உட்படுத்துவார்கள் என்றால் அவர்கள் இஸ்லாத்தை ஆய்வுக்கு உட்படுத்திட வேண்டும். அப்போது அவர்கள் இந்த மகத்தான மத நம்பிக்கையின் மாண்புகளை ஆட்சேபனை யின்றி ஏற்றுக் கொள்ள வேண்டியதிருக்கும். அப்போது அவர்கள், இன்னொரு

உண்மையையும் உணர்ந்து கொள்வார்கள். அது இத்தனை மக்கள் ஏன் நித்தம், நித்தம் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். என்ற உண்மைதான்.

பெருமானார்(ஸல்) அவர்களின் "Legacy - மரபுவை" அதாவது பெருமானார்(ஸல்) அவர்கள் விட்டுச் சென்ற வழிமுறைகள் தாம் இதற்கு காரணம். அந்த வழிமுறைகளைத்தான் எல்லோரும் அஞ்சி ஒடுங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இதனை நன்றாக உணர்ந்தவர்களின் ஒருவர் ஜார்ஜ் பெர்னாட்ஷா. இவர் பகுத்தறிவு வாதத்தில் புகழ் பெற்றவர் 1936இல் அவர் சொன்னவை ஐரோப்பாவின் ஆட்சியாளர்களை அச்சத்திற்கும், பீதிக்கும் உள்ளடக்கியது.

அடுத்த நூறு ஆண்டுகளுக்குள், இங்கிலாந்தை ஆட்சி செய்வதற்கு, ஏன் மொத்த ஐரோப்பாவையுமே ஆட்சி செய்தவற்கு வாய்ப்புமிக உள்ள ஒரு மதம் இருக்கின்றது என்றால் அது இஸ்லாமாகத் தான் இருக்க முடியும். முஹம்மத்(ஸல்) அவர்களின் மார்க்கத்தை நான் என் எண்ணங்களின் உட்சத்தில் வைத்துப் போற்றுகின்றேன். காரணம், அதன் உயிரூட்டி எழுச்சிப் பெற்றிடச் செய்திடும் ஆற்றம், நமது வாழ்வின் மாற்றங்களை உட்கொண்டு அவற்றிற்கு தக்கப்படி வழிகாட்டும் ஆற்றல். இதனால் அது எல்லா தலைமுறையினரையும் ஈர்க்கும் சக்தியாக அமைந்து விடுகின்றது. நான் அந்த மனிதரை, ஆச்சர்யமிக்க மனிதரை படித்திருக்கின்றேன். அவர் எந்த விதத்திலும் கிருஸ்துவுக்கு எதிரானவரல்ல. அதெற்கெல்லாம் அப்பாற்பட்டவர் அவர். நாம் அவரை மனித இனத்தின் இரட்சகர் என அழைத்தே ஆக வேண்டும். அதுவே அழகு! நியாயம்!!

நான் அழுத்தமாக நம்புகின்றேன். அவரைப் போன்ற ஒருவர் இந்த நவீன உலகின் சர்வாதிகாரியாக ஆவார் என்றால் இன்றைய இந்த உலகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வித்தியாசமான ஒரு வகையில் தீர்த்து வைப்பார். அதன் மூலம் இந்த உலகம் அமைதியும், மகிழ்ச்சியும் நிலவும். *(George Berdnadshaw)*



இப்படி பெருமானார்(ஸல்) அவர்களிடம், இந்த உலகின் அனைத்து அதிகாரத்தையும் ஒப்படைக்கும் மனிதர், ஐயர்லாந்து நாட்டின் மிகப்பெரிய பகுத்தறிவுவாதி, இலக்கிய விமர்சகர். 1925ஆம் ஆண்டின் நோபல் பரிசைப் பெற்றவர். சமூக நீதிக்காக எழுதி போர்க்களம் கண்ட விற்பன்னர்.

இப்படி ஒரு பகுத்தறிவு பகலவன் பட்டயங்கூறும் போது, நான் யார் பெருமானார்(ஸல்) அவர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கிட....?

பெருமானார்(ஸல்) அவர்கள் இன்று நம்மோடு வாழ்ந்து கொண்டிருந்தால், இந்தப் பாராட்டுகள் எல்லாவற்றையும் கேட்டுவிட்டு நம்மைப் பார்த்து அமைதியாக, ஆராவார மில்லாமல் சொல்வார்கள்,

"நான் ஒரு மனிதன். இறைவனின் தூதர். நீங்கள் அனைவரும் அல்லாஹ்வுக்கே முழுமையாக கீழ்ப்படிய வேண்டும்."

**தமிழில் - எம்.ஜி.எம்**



# கைகோர்த்த துருக்கி – கத்தார் – ஈரான்

# பதறும் அமெரிக்கா – இஸ்ரேல்

முஸ்லிம் உலகில் ஏற்பட்டு வருகின்ற பல்வேறு ஒற்றுமைச் செய்திகளைப் பற்றி நாம் பல பதிவுகளை வெளியிட்டு இருக்கின்றோம். அதிருப்த்தியும் விரக்த்தியும் நிறைந்திருக்கின்ற முஸ்லிம் சமுதாய அமைப்பில் பல நல்ல நம்பிக்கைகளை இது ஏற்படுத்தி இருக்கின்றது. அல்ஹம்துலில்லாஹ்!

தொடர்ந்து முஸ்லிம் நாடுகளுக்கு இடையே உள்ள உறவு வளர்ந்து கொண்டிருக்கின்றது.

இதுவரையிலும் ஏன் அந்த உறவுகள் வளரவில்லை என்பதற்கான காரணம், அமெரிக்காவும் அதற்கு பின்னிலையில் இருக்கின்ற மேலை நாடுகளும், துணையாக சில நேரங்களில் இஸ்ரேலும் இந்த அரபு நாடுகளையெல்லாம் தங்களின் கைகளில் வைத்துக்கொண்டு தங்களுடைய ஆதிக்கத்தை அங்கே செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

அப்படி ஆதிக்கம் செலுத்துவதற்கு முதல் காரணம், இந்த அரபு நாடுகள் எல்லாம் ஒன்றிணைந்து இஸ்ரேலை ஒன்றுமில்லாமல் ஆக்கிவிடக்கூடாது. இரண்டாவது காரணம் இந்த உலகில் மிகவும் அரிதாகவும், பெரிதாகவும் கருதப்படுகின்ற எண்ணெய் வளங்கள் இந்த நாடுகளில் இருக்கின்றன,அவற்றை சுரண்ட வேண்டும். அது தொழில்நுட்ப சுரண்டல் என்று சொல்லக்கூடிய அறிவியல் ரீதியான அயோக்கியத்தனமாக பல நேரங்களில் மாறியிருக்கின்றது. ஏறத்தாழ அரபு நாடுகளிலே இருக்கின்ற முஸ்லிம் உலகில் இருக்கின்ற எண்ணெய்க் கிணறுகள் எல்லாம் இவர்களுடைய ஆதிக்கத்தின் கீழ் இருந்தது.

அண்மையிலே சவுதிக்கும் ஈரானுக்கும் ஏற்பட்ட அந்த உறவு, ஒப்பந்தம் அதனை அமெரிக்கா முடிந்த வரைக்கும் சிதைக்க நினைத்தும் ஆனால் அது ஒரு நல்ல முடிவையே எட்டியது. அதன் பிறகு இரண்டு நாடுகளும் தூதரகங்களை, முஸ்லிம் நாடுகளுக்கு இடையில் தூதரகங்களை திறந்து வைத்து செயல்படுவது என்பது ஒரு அதிசயமாக பார்க்கக்கூடிய அளவிற்கு அமெரிக்கா இவற்றை ஆட்டிப் படைத்தது.

இந்த நாடுகள் வெளியே வருகின்ற போது பகிரங்கமாக சொன்னார்கள், அமெரிக்காவை நாங்கள் பாதுகாவலனாக எடுத்துக் கொண்டிருந்தோம், ஏமாந்தோம். இனி நாங்கள் அமெரிக்காவை பாதுகாவலனாக எடுத்துக் கொள்ள மாட்டோம். நாங்கள் எங்களுக்குள்ளால் ஒரு ஒப்பந்தத்தைப் போட்டு விடுவோம் என்று பல அதிர்வு தரும் செய்திகள் வெளி வந்தன. ஜித்தாவிலே அரபு நாடுகள் எல்லாம் ஒன்று கூடி சிரியாவினுடைய பஷருல் ஆசாத் அங்கே வந்து கலந்து போது, ISIL என்பது அமெரிக்காவினுடைய உருவாக்கம் என்பது தெளிவானது. ISIL என்பதை மாற்றி ISKP (Islamic

State – Khorasan Province) என மாற்றி இருக்கிறார்கள்.

மார்க்க அறிஞர்களின் கருத்துப்படி அது ஆப்கானிஸ்தான் அருகிலே வரவேண்டும், கொரசான் என்பது இவர்கள் என்ன அங்கே நின்று கொண்டு கொராசான் என்கிறார்கள் என்பது ஒரு கேள்வி.

ஆனால் அவர்கள் ஏதாவது ஒரு தீவிரவாத அமைப்பின் பெயரை சொல்லி அரபு நாடுகளை குழப்பத்திற்குள் ஆக்கிக் கொண்டிருப்பார்கள். நான் ஏற்கனவே ஒரு பதிவில் குறிப்பிட்டது போல பாலஸ்தீன மக்கள் அகதிகள் முகாம்களில் வாழ்கிறார்கள் அங்கேயும் இவர்கள், அந்த மக்களை குழப்பமும் கொந்தளிப்பும் உள்ளவர்களாகவும், ஒருவரை ஒருவருக்கு எதிராக ஆயுதம் எடுப்பவர்களாகவும் மாற்றி இருக்கிறார்கள். முஸ்லிம் சமுதாயம் இதில் நிறைய படிப்பினைகளை பெற வேண்டும். அவர்களுடைய எதிரி யார்? நண்பன் யார்? என்பதை தெளிவாக தீர்மானிப்பதில் இந்த நிகழ்வுகள் எல்லாம் உதவி செய்யும்.

இதனிடையே துருக்கியில் நமது எர்துகான் அவர்கள் மீண்டும் ஆட்சியில் அமரத்த பட்டார்கள். நமது பத்திரிகைகள் எல்லாம், "Erdogan not out what next" அதாவது எர்துகன் இன்னும் வெளியேறவில்லை அடுத்து நமது திட்டம் என்ன என்றெல்லாம் எழுதினார்கள்.

ஒரு நாட்டில் ஒரு இஸ்லாமிய சிந்தனை உள்ள, அவர் எல்லா இஸ்லாமிய அடிப்படைகளையும் செயல்படுத்த முடிகின்றதா என்றால் இல்லை, குழப்பி எடுக்கிறார்கள். அவருடைய பொருளாதாரத்தை நசுக்குகிறார்கள். அதன் பிறகு அதையே காரணமாக காட்டி அவரை தேர்தலில் தோல்வியடைய எல்லா வேலைகளையும் செய்தார்கள், வெற்றி பெற இயலவில்லை.

பைடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனே அறிவித்தார், என்னுடைய அடுத்த இலக்கு எர்துகானை ஆட்சியிலிருந்து அகற்றுவதுதான் என்று. இறுதியில் துருக்கியில் நடந்த தேர்தலில் முஸ்லிம்களில் அதிகமானோர், அதாவது துருக்கியில் வாக்காளர்கள் நிறையபேர் எர்துகானுக்கு வாக்களித்தார்கள். இதனைப் பற்றி வினவியபோது அவர்கள் சொன்னார்கள், அமெரிக்காவும், மேலை நாடுகளும் அவரை வெறுக்கின்ற வேகத்தை பார்க்கும் போது இவர்தான் ஆட்சியில் தொடர வேண்டுமென்று நாங்கள் முடிவெடுத்தோம் இல்லையேல் இவர்கள் எங்களை சின்னாபின்னப்படுத்தி விடுவார்கள், துருக்கியை கையில் வைத்துக்கொண்டு ஆட்டிப் படைப்பார்கள் என்று கூறினார்கள்.

இப்பொழுது துருக்கியினுடைய எர்துகான், அரபு நாடுகளிடையே பயணம் செய்து துருக்கியினுடைய பொருளாதாரத்தை முன்னேற்றுகின்ற வகையிலும், இதுவரையிலும் அவரிடம் சற்று முறைத்துக் கொண்டிருந்த ஹிகிணி போன்ற நாடுகளையும், கத்தார் மீது அரபு நாடுகள் கொண்டிருந்த காட்பையும் அகற்றி இருக்கிறார். ஏற்கனவே இதனை நான் பல பதிவுகளில் குறிப்பிட்டும் இருக்கின்றேன்,

அதில் UAE கத்தார் நாட்டோடு போட்டுக் கொண்ட ஒப்பந்தத்தை நாம் விளீத்துரைத் திருந்தோம்.

இப்பொழுது எர்துகான் துருக்கியோடு, மேற்கண்ட நாடுகள் எல்லாம் வியாபாரம் செய்து கொள்ள ஒப்பந்தத்தை ஏற்படுத்தி இருக்கிறார். இதனைப் பற்றி எழுதுகின்ற ஆங்கில பத்திரிகைகள் அனைத்தும் ஒன்றை குறிப்பிடுகின்றன, அது கத்தாரோடு சேர்ந்து துருக்கியும் ஈரானும், பாலஸ்தீன முஸ்லிம்கள் இரண்டாக்கப்படும் போதெல்லாம் வந்து உதவி செய்தன. அதில் பலமுறை இஸ்ரேல் தாங்க முடியாத இழப்புகளை சந்தித்ததையும் குறிப்பிடுகின்றன.

இப்போது துருக்கியினுடைய பொருளாதாரம் ஒரு புது வலுவினை பெறுகின்றது. முஸ்லிம் நாடுகளினுடைய ஒற்றுமை ஒரு புது பொலிவினைப் பெறுகின்றது. துருக்கியும், UAE என்ற ஐக்கிய அரபு நாடுகளும், கத்தாரும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி கோடிக்கணக்கான டாலர்கள் இனி துருக்கியிலே முதலீடு செய்யப்படும் என்பது தெரிகின்றது என்று குறிப்பிடுகின்றன. அரபு நாட்டு பத்திரிகைகள் எல்லாம் துருக்கியும், வளைகுடா நாடுகளினுடைய ஒருங்கிணைந்த ஒற்றுமை தளங்களுக்கு இடையேயும் உள்ள உறவு சுமூகப் படுத்தப்படுகின்றது என்று குறிப்பிடுகின்றது.

ஆக இப்படியொரு நல்ல நிலை உருவாகிக் கொண்டிருக்கின்ற போது, சிலர் முஸ்லிம் நாடுகள் சீரழிந்து கிடப்பதாகவும், அவர்கள் எல்லாம் இஸ்ரேலுடன் ஒப்பந்தம் போட்டுக் கொண்டதாகவும் இனி செய்வதற்கு ஒன்றுமில்லை என்ற அடிப்படையில், அல்லாஹ்விடம் இருந்து யாராவது வந்து தான் காப்பாற்ற முடியும் என்பது போல பதிவுகளைப் போட்டு பொது மக்களையும், முஸ்லிம்களையும் ஒருவித தாழ்வு மனப்பான்மைக்கும், "என்னடா இது முஸ்லிம் உலகம்?" என்று எண்ணுகின்ற நிலைக்கும் மாற்றுகின்றார்கள், அதை தெளிவு படுத்துவதற்காகவே இது போன்ற கட்டுரைகளை நாம் எழுத வேண்டி இருக்கின்றது.

(வைகறை வெளிச்சம் youtube தளத்திலும் வீடியோக்களை பதிவேற்றி இருக்கின்றோம்)

ஏனென்றால் அமெரிக்காவிடம் இருந்து விடுபட்டது மட்டுமல்ல, இந்த ஒற்றுமை வளையம் வளர்ந்து கொண்டே இருக்கின்றது. இந்த ஒற்றுமையை கண்டிப்பாக குலைப்பதற்கு அமெரிக்கா மட்டுமல்ல, ஐரோப்பா மட்டுமல்ல இன்னும் பல நாடுகளும், பல குழுக்களும் முயற்சிகளை நிச்சயமாக செய்யும் ஆனால் அவர்களால் வெற்றி பெற முடியாது காரணம் யார் எதிரி? ஏன் நம்மை இப்படி மோத விடுகிறார்கள் என்பதையெல்லாம் கண்டுகொண்ட ஒரு சமுதாயமாக இப்பொழுது இருக்கின்ற ஆட்சியாளர்கள் மிளிர்கிறார்கள். ஆகவே இந்த ஒற்றுமை ஓங்கும்! இதனால் உலகிற்கும் மனித இனத்திற்கும் பல நன்மைகள் ஏற்படும்.

அண்மையில் ரியாதில் நடந்த உக்ரேனுக்கும், அரபு நாடுகளுக்கும் இதர நாடுகளுக்கும் இடையே நடந்த உக்ரேன் யுத்தத்தைப் பற்றிய விவாதம் அதற்கு புட்டின் அழைக்கப்படவில்லை இருந்தாலும் அதில் பல முன்னேற்றங்களை கொண்டு வந்திருக்கின்றது என்று உலக பத்திரிகைகள் எழுதியதை நாம் பதிவாகத் தந்திருந்தோம்.

ஆகவே உலக சமாதானத்தை நிறைவேற்றுகின்ற முன்னோடிகளாக திகழ்வார்கள் ஏனென்றால் இப்பொழுது ரஷ்யாவும் அரபு நாடுகளுடன் நல்ல உறவுகளை வளர்த்துக் கொள்ள முன் வந்திருக்கின்றது அந்த அடிப்படையில் இந்த உலக மக்களுடைய அமைதியை குலைக்கின்ற நாடுகள் மக்கள் மன்றத்தில் இனங்காட்டப்படும். அமைதி நிலவும்.

# அமெரிக்காவை எச்சரித்த ஈரான்

## கத்தாரின் உதவியை நாடிச் சென்ற அமெரிக்கா....!

# அணு ஆயுத தயாரிப்பில் சவூதி...!

சர்வதேச அளவில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை நாம் நமது பதிவுகளில் முறையாக வெளியிட்டு வருகின்றோம். ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேற முடியாமல், தங்களுடைய ராணுவ வீரர்களை உயிரோடு கொண்டு செல்வதற்காக தாலிபான்களிடத்தில் சரணடைந்து அவர்களை அழைத்துச் சென்றார்கள் அமெரிக்கர்கள். அதற்கு பெரிய அளவில் உதவி செய்தது கத்தார் என்ற நாடு.

ஆண்டனி பிலிங்கன் என்ற அமெரிக்கா வினுடைய வெளியுறவுத்துறை அமைச்சர் பலமுறை கத்தாரிடம் வந்து பேசி, தாலிபான் களை அழைத்து வாருங்கள் அவர்களிடம் பேசி எங்களில் மிச்சமிருப்பவர்களை உயிரோடு விடுங்கள் என்று கேட்டு வாங்கிச் சென்ற கதையை நாம் பார்த்தோம்.

அமெரிக்கா மீண்டும் இதே கத்தாரை வேறொரு விஷயத்திற்காக நெருங்கி எங்களுக்கு ஆப்கானிஸ்தானில் உதவி செய்தது போல் வேறொரு விஷயத்திற்காக உதவி செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கின்றது. அந்த விஷயம் என்னவென்றால் ஈரானுடைய கோடிக் கணக்கான டாலர்களை நீண்ட நெடிய காலமாக அமெரிக்காவினுடைய வங்கிகளிலே வைத்திருக் கின்றது. அவர்களுக்கு வேண்டிய பணத்தை, அவர்களுடைய பணத்தை தரமாட்டோம், உங்கள் மீது பொருளாதார தடை இருக்கின்றது எனவும் காரணம்,அணு ஆயுதத்தை கண்டு பிடித்து வைத்திருக்கின்றீர்கள்.அதில் வேகமாக பல முன்னேற்றங்களை அடைந்திருக்கின்றீர்கள். மேலும் அதில் சர்வதேச ஒப்பந்தங்களை எல்லாம் நீங்கள் மீறி இருக்கின்றீர்கள் என்றெல்லாம் பல குற்றச்சாட்டுகளை அமெரிக்கா சொல்லி வந்தது.

ஆனால் ஈரான் அமெரிக்காவிற்கு எப்படி சொன்னால் புரியுமோ அப்படியாக சொல்லி இருக்கின்றது. அண்மையிலே ஈரானுக்கும் சவுதி அரேபியாவிற்கும் நடந்த ஒற்றுமை, அவர்கள் கைகுலுக்கி கொண்டது, அவர்கள் தங்களது தூதரகங்களை இரண்டு நாடுகளிலும் திறந்தது இவையெல்லாம் உலகத்தில் ஒரு பெரிய மாற்றத்தை கொண்டு வரப்போகின்றது என்பதை நாம் நம் பதிவுகளில் வெளியிட்டு இருக்கின்றோம்.

அந்த மாற்றங்கள் இப்பொழுது நடந்து கொண்டிருக்கின்றன.

ஈரான் அமெரிக்காவினுடைய நிறைய படைகளை கைது செய்து வைத்திருக்கின்றது. எங்கிருந்து பிடித்து கைது செய்தார்கள் என்றால், ஈராக்கை விட்டு வெளியேறிய அமெரிக்கா பல இராணுவ வீரர்களை, பல இராணுவ தளங்களை அங்கேயே விட்டுச் சென்றது. அந்த தளங்களை தாக்குவது, அதில் இருக்கின்ற அமெரிக்க வீரர் களை பிடித்து செல்வதென்பது ஈரானுக்கு கைவந்த கலை.

இப்படி கொஞ்சம் கொஞ்சமாக நிறைய இராணுவ வீரர்களை ஈரான் கைது செய்து விட்டது. கைது செய்யப்பட்ட அந்த ராணுவ வீரர்களின் குடும்பத்தவர்கள் வாஷிங்டனின் வீதிகளிலே போராடிக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே நாங்கள் உங்களை பொருளாதார தடை என்ற பெயரில் பிடித்து வைத்திருக்கின்ற உங்களின் பணத்தை தந்து விடுகின்றோம். நீங்கள் எங்களுடைய கைதிகளை விட்டு விடுங்கள் என்றொரு பேச்சு வார்த்தையை அமெரிக்கா தொடங்கி இருக்கின்றது. இதற்கு மீண்டும் கத்தாரிடம் எப்படி ஆப்கானிஸ் தானில் உதவி செய்தீர்களோ அதேபோல் ஈரானிடம் இருந்தும் எங்களை காப்பாற்றுங்கள் என்று வந்திருக்கின்றது. அதில் ஈரான் இன்னொரு யுக்தியையும் கையாளுகின்றது.

நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல ஹர்மோஸ் பகுதியில் அதாவது வளைகுடா வினுடைய ஒரு குறுகிய பகுதி அது. அந்த பகுதி முழுவதும் ஈரானின் கைகளில் இருக்கின்றது. இந்தப் பகுதியின் வழியாகத்தான் 80 சதவீதம் பெட்ரோல் உலகிற்கு செல்கின்றது. அதன் வழி வருகின்ற அமெரிக்காவினுடைய கப்பல் களையும், இஸ்ரேலினுடைய கப்பல்களையும் ஈரான் தாக்கிக் கொண்டிருக்கின்றது. காரணம் என்னவென்றால் 3000 படைவீரர்கள் கொண்ட தி15 என்ற அவர்களுடைய கப்பல் படையை அனுப்பி நாங்கள் எங்களை பாதுகாத்துக் கொள்வோம் அதனுடன் இதர நாடுகள் எங்கள் கப்பல்களிடம் பாதுகாப்பு கேட்டால் அந்த பாதுகாப்பையும் கொடுப்போம் என்றெல்லாம் வாக்குறுதி கொடுத்து வந்தார்கள். ஒரு யுத்தத்தை நீங்கள் தொடங்கிவிட்ட பிறகு நாங்கள் என்ன பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா என்ற போர்வையில் ஈரான் தாக்க ஆரம்பித்தது.

ஆகவே ஈரானிடம் இப்பொழுது ஏதேனும் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி இந்த பிரச்சனை களில் இருந்து வெளியேற வேண்டும், வீழ்ந்து கொண்டிருக்கக் கூடிய அமெரிக்காவின் பொருளாதாரத்தை காப்பாற்ற வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபடுகின்றனர். இந்த உலக நிகழ்வுகள் எப்படி எல்லாம் மாற்றம் அடைகின்றன என்பதனைப் பற்றி சொல்கின்ற பத்திரிகைகள், அரசியல் விற்பனர்கள் இது குறித்து எப்படி சொல்கிறார்கள் என்றால் முதன் முதலில் வளைகுடா நாடுகளினுடைய பாதுகாப்பு “கொள்கை ரீதியாக” மாறி இருக்கின்றது.

அவர்கள் அமெரிக்காவினுடனும் அதற்கு பக்கத்துணையாக வரக்கூடிய டேட்டா நாடுகளுடனும் தங்களுடைய பாதுகாப்பை ஒப்படைக்காமல், இப்பொழுது தாங்களே அந்த பாதுகாப்பை மற்ற முஸ்லிம் நாடுகளோடும் இதர நாடுகளுடனும் கைகோர்த்துக்கொண்டு அந்த பாதுகாப்புகளை பெற்றுக் கொண்டார்கள்.

எந்த அளவிற்கு என்று சொன்னால் “டெக்கான் க்ரானிகள்” என்ற பத்திரிகை ஒரு செய்தியை சொல்கின்றது, ரியாத் இனி எங்களுக்கு அமெரிக்காவினுடைய ஆயுதங்கள் வேண்டாம், தேவையானால் நாங்கள் சைனா விடம் பெற்றுக் கொள்கின்றோம் என்று சொல்லிவிட்டது. அமெரிக்காவை மிரட்டு கிறது, எங்களுக்கு தேவையில்லாத ஆயுதங்களை எல்லாம் நீங்கள் விற்பீர்கள் அதற்கு நாங்கள் பெட்ரோ டாலர்களையும் உங்களுக்கு தர வேண்டும் அது இனி வேண்டாம் என்று சொல்லிவிட்டு சவுதி அரேபியா ஒரு புதிய திட்டத்தை, ஏற்கனவே நமது பதிவுகளில் குறிப்பிட்டது போல 2030ல் சவுதி அரேபியா ஒரு பெரிய மாற்றத்தை தன்னுடைய நாட்டிலேயே கொண்டு வர வேண்டும், அதனை ஒரு பெரிய சுற்றுலா தளமாக ஆக்க வேண்டும் என்பதோடு அணு சக்தியையும் பெற வேண்டும் என்று முடிவு செய்திருக்கின்றது.

*The Nuclear Program* என்று சொல்லக்கூடிய இந்த அணு ஆற்றலை (அது குண்டுகள் செய்யும் அளவிற்கு போகுமா என்பது வேறு விவகாரம். ஏனென்றால் உலமாக்கள் ஏற்கனவே மனித இனத்தை ஒட்டுமொத்தமாக அழிக்கின்ற இது போன்ற ஆயுதங்களை நாம் செய்ய வேண்டாம் என்று கூறி இருக்கிறார்கள். ஆனால் ஒரே ஒரு விதிவிலக்கு என்னவென்றால், நமது எதிரிகள், இஸ்லாத்தை அழிக்கவேண்டும் என்று நினைப்பவர்கள் இது போன்ற ஆயுதங்களை வைத்திருப்பதால் நாம் அந்த ஆயுதங்களுக்கு அந்நியமாக இருக்கக் கூடாது. அதனைப்பற்றி தெரிந்திருக்க வேண்டும் என்பதுதான் ஒரு



Saudi Arabia + Add to myFT

Saudi Arabia weighs nuclear power offers from China and France in bid to sway US

Kingdom has made such technology a key demand in talks with Washington over sensitive security pact

US president Joe Biden has largely patched up his relationship with Saudi Arabia's Crown Prince Mohammed bin Salman, above, but the kingdom still faces strong criticism in Washington © Reuters

விதிவிலக்கு) பற்றி கூறியவுடன் அமெரிக்கா அதிர்ந்து போனது.

சவுதியின் இந்த அணு ஆற்றல் நடவடிக்கைக்கு ஈரான், சீனா போன்ற நாடுகள் உதவி செய்ய முன்வந்திருக்கின்றார்கள். இன்றைக்கு இந்த நாடுகள் அணு ஆற்றல் தொழில்நுட்பத்தில் பல படித்தரங்களை கடந்து நிற்கின்றன. சவுதி அரேபியா அமெரிக்கா விடமிருந்து ஏதேனும் அச்சுறுத்தல் வந்தால், அதனை தடுக்கவும் தன்னை பாதுகாத்துக் கொள்ளவும் இந்த ஏவுகணை தொழில்நுட்பம் வேண்டும் என்கின்றது. இன்றைக்கு ஏவுகணை தொழில்நுட்பத்தில் முன்னணியில் இருப்பது துருக்கி. துருக்கி அண்மையிலே இவர்களை அழைத்து ஒப்பந்தம் செய்து கொண்டது, எங்களுக்கு ட்ரோன்கள் போன்றவற்றை நீங்கள் தர வேண்டும் என்று. இப்பொழுது சவுதி யினுடைய பெட்ரோ டாலர்கள் துருக்கிக்கு செல்லும், துருக்கியினுடைய தொழில் நுட்பம், ஆயுதங்களும் சவுதிக்கு வரும். இதைத்தான் அன்று சொன்னார்கள் ஈரானுக்கும் சவுதிக்கும் இருக்கக் கூடிய உறவு உலகளவில் ஒரு பெரிய மாற்றத்தை கொண்டு வரும் என்று.

அடுத்தது அமெரிக்காவை மிரட்டுகின்ற அளவிற்கு சவுதி எல்லா விதத்திலும், அமெரிக்கா விலிருந்து விடுபட்டுவிட்டது.

இனி அமெரிக்காவினுடைய எந்த பொருளையும் நாங்கள் வாங்க மாட்டோம் ஏனென்றால், நான் ஏற்கனவே நீண்ட நெடிய காலங்களுக்கு முன்னால், பல மேடைகளிலும் கூறியது போல், *AWACS (Advance Warning and Control System)* என்ற ஒரு கருவி அதாவது வானில் பறந்து வரும் விமானங்களை, ஏவுகணை களை கண்டுபிடித்து திருப்பி தாக்கக்கூடிய ஒரு கருவிதான் *AWACS*. இதனை இவர்கள் சவுதிக்கு விற்று விட்டார்கள் ஆனால் இதனை எப்படி இயக்குவது என்று சவுதி அரேபியாவிற்கு இவர்கள் கற்றுக் கொடுக்கவில்லை.

ஆனால் இவர்கள் முஸ்லிம் நாடுகளை தாக்குவதற்கு இதே *AWACS* என்பதை சவுதியில் இருந்து கொண்டு உபயோகப் படுத்தினார்கள். இப்படி இருந்த சவுதி, இப்பொழுது உங்களுடைய இராணுவமே எங்களுக்கு தேவையில்லை என்று கூறிவிட்டது.

இப்பொழுது மொத்தமாக முஸ்லிம் நாடுகள் எல்லாம் ஒன்றாக கைகோர்த்துக்கொண்டு, ஒரு நல்ல வளர்ச்சியை கொண்டு வருகின்றது. இதனை “அல் குத்ஸ்” என்ற பத்திரிகை கூறுகின்றது, இந்த மொத்த முஸ்லிம் நாடு களினுடைய நிலையும் எப்படி வலுப் பெறுகின்றது, இருக்கமடைகின்றது, பிணைப்பைப் பெறுகின்றது எனில், சிரியா ஈராக் ஏமன் ஆகியவற்றில் நடந்த மாற்றம்தான் அதற்கு காரணம் என்று.

சிரியாவில் *ISIL* என்ற ஒன்றை உருவாக்கி வைத்துக் கொண்டு, இப்பொழுது மிஷிரிறி என்றொன்றை உருவாக்கிக்கொண்டு இவர்கள் ஆடிய ஆட்டம் இப்பொழுது குறைந்திருக் கின்றது. அடுத்தது ஏமனில் கவ்தீஸ் என்று சிலரை வைத்துக்கொண்டு சவுதியை மிரட்டியது அதுவும் இப்போது இல்லாமல் ஆகிவிட்டது. இந்த ஏமன், சிரியா போன்ற இடங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் அதாவது இப்பொழுது இந்த இடங்கள் எல்லாம் இவர்களுடைய சூழ்ச்சியில் இருந்து விடுபட்டு விட்டதால் முஸ்லிம் உலகத்தினுடைய கட்டமைப்பு இருக்க மடைந்து விட்டது.

இன்றைக்கு சைனாவை மையமாகக் கொண்டு ஒரு பெரிய உலகம் உருவாகிக் கொண்டிருக் கின்றது, அமெரிக்கா கீழே விழுகின்றது அந்த இடத்திற்கு சைனா வருகின்றது. அது எல்லா நாடுகளோடும், ஆப்கானிஸ்தானோடும் ஒரு நல்லுறவை வைத்திருக்கின்றது ஆனால் சைனாவில் இஸ்லாமோபோஃபியா என்ற இஸ்லாமிய வெறுப்பும் இருக்கின்றது ஆனால் அது இப்பொழுது அடங்கியிருக்கின்றது. இந்த முறை ஹஜ்ஜிற்கு நிறைய பேரை அனுப்பி வைத்து சென்று வந்தவர்களை எல்லாம் பெரிய அளவில் வரவேற்று இருக்கிறார்கள். ஒரு சமூக மான உலக மாற்றம் வந்து கொண்டிருக்கிறது.

அமெரிக்காவை ரஷ்யா, ஈரான் மன்னித்து எங்களுக்கு பணத்தை கொடுத்து விடுங்கள், நாங்கள் கைது செய்திருக்கக் கூடிய கைதிகளை தருகிறோம் என்று கூறியிருக்கிறது. ஈராக்கில் உள்ள அமெரிக்காவினுடைய தளங்களுக்கு எந்த பாதுகாப்பும் இல்லை என்றாகிவிட்டது. அவர்கள் எப்படி ஆப்கானிஸ்தானில் இருந்து தப்பித்து வந்தார்களோ, ஈரானின் அமெரிக்க தளங்களில் இருக்கக்கூடிய வீரர்களை காப்பாற்ற வேண்டும் என்றால் ஈரான் மீது இருக்கின்ற பொருளாதார தடையை பின்னுக்குத் தள்ளி விட்டு, தரவேண்டிய பணத்தை தர வேண்டும் என்ற ஒரு நிலைக்கு தள்ளப்பட்டு விட்டது.

ஹர்மூஸிற்கு ஒரு பெரிய படையை அனுப்பி ஒரு யுத்தத்தை தொடங்கிய அமெரிக்கா இப்போது எதுவும் செய்ய இயலாமல் கத்தாரின் காலை பிடிக்கின்றது, கத்தாரும் அதற்கு உதவி செய்வதற்கு தயாராக இருக்கின்றது. இப்படி உலக அளவில் இது ஒரு பெரிய மாற்றத்தை கொண்டு வருகின்றது. பெரும்பாலான அரசியல் நோக்கர்கள், பத்திரிகையாளர்கள் எல்லாம் இந்த நூற்றாண்டின் அடுத்த பகுதி, “இஸ்லாத்திற்கு சொந்தமானதாக இருக்கும்” என்ற கருத்துக்களை கூறியிருக்கின்றார்கள்.

அந்த வீடியோ பதிவுகளை எல்லாம் நீங்கள் பார்த்திருப்பீர்கள். எனவே ஒரு நல்ல சூழல் ஏற்பட்டு வருகின்றது. விரக்திக்கு இனி வழியில்லை, தேவையும் இல்லை. ஈமான் கொண்டவர்கள் விரக்தி அடையக் கூடாது என்பது ஒரு பொது விதி, அந்த வகையிலே இன்று உலக நாடுகள் அனைத்தும் முஸ்லிம் உலகத்தை சுற்றி வருகின்றது.

உக்ரேன் விஷயத்திலும் ரியாத் தான் பெரிய முயற்சிகளை எடுத்திருக்கின்றது. அப்பாவிகள் இறந்து கொண்டிருக்கிறார்கள், அவர்களைக் காப்பாற்றும் முயற்சியை இந்த நாடுகள் எடுக்கும். ஆகவே வளைகுடா நாடுகள், சைனா, தெற்காசியா இப்படி ஒரு உலக மாற்றம் *"Remaking of the World Order"* வந்து கொண்டிருக்கின்றது. பொறுத்திருந்து பார்ப்போம்!

# ஈரானிடம் சரணடைந்த அமெரிக்கா

## 6 பில்லியன் டாலர்களை திருப்பி வாங்கிய ஈரான்...!

இதற்கு முந்தைய பதிவு ஒன்றில், அமெரிக்கா ஈரானிடம் படிந்தது என்ற தலைப்பில்- அமெரிக்கா ஈரானுடைய ஆறு லட்சம் கோடி டாலர்களை தந்து விடுவதாகவும், அதற்கு பதிலாக ஈரான் பிடித்து வைத்திருக்கின்ற அமெரிக்கர்களை,அமெரிக்க இராணுவ வீரர்களை விட்டுவிட வேண்டும் என்றும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டது அதற்கு கத்தார் நாடு அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தக் கூடிய ஒரு நாடாக அமைந்தது.

ஒருவகையில் பார்த்தால் கத்தார் தான் இப்பொழுது, அமெரிக்காவினுடைய ரட்சகன் என்று சொல்ல வேண்டும். ஏனென்றால் அன்று ஆப்கானிஸ்தானில் இருந்து இவர்கள் உயிரோடு வெளியறுவதற்கு பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கு தளம் அமைத்துக் கொடுத்து, அவர்கள் சரணடைகின்ற ஒப்பந்தத்தை கையெழுத்திடும் நாடாகவும் கத்தார் அமைந்திருந்தது. இப்போது அமெரிக்காவினுடைய மானத்தை காப்பாற்றுகின்ற, அமெரிக்கர்களை காப்பாற்றுகின்ற, அவர்களுடைய படைவீரர்களை காப்பாற்றுகின்ற ரட்சகன் ஆகவும் கத்தார் நாடு இருந்து வருகின்றது. நாம் பதிவிட்ட அந்த பதிவிற்கு பின்னால் 18.09.2023 அன்று அமெரிக்கா ஆறு லட்சம் கோடி டாலர்களை ஈரானுடைய வங்கிகளுக்கு மாற்றிவிட்டது. அந்த ஈரானுடைய வங்கிகள் கத்தாரிலே செயல் படுபவை. இந்த இரண்டு வங்கிகளுக்கு 6 லட்சம் கோடி டாலர்களை மாற்றிவிட்டது.

இந்தத் தொகை தனது கணக்கில் சேர்ந்து விட்டது என்பதை உறுதி செய்து கொண்ட ஈரான், ஐந்து கைதிகளை விடுதலை செய்தது. அதே நேரத்தில் ஈரானினுடைய ஐந்து கைதிகளையும் அமெரிக்காவின் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டது. ஆகவே ஆறு லட்சம் கோடி டாலர்கள், ஐந்து கைதிகளையும் பெற்றுக் கொண்டு வெறும் ஐந்து கைதிகளை மட்டும் ஈரான் விடுதலை செய்திருக்கின்றது. உலக அளவில் அமெரிக்காவினுடைய இந்த சரணடைதல் பெரிய அளவில் பார்க்கப்


TOI | World | US Pakistan South Asia UK Europe China Middle East Rest Of World Mad, Mad Wor

## US makes deal with Iran to swap prisoners and release USD 6 billion in frozen Iranian funds

AP / Updated: Sep 12, 2023, 12:39 IST

SHARE | AA | FOLLOW US

You're Reading

US makes deal with Iran to swap prisoners and release USD 6 billion in frozen...

The Biden administration has cleared the way for the release of five American citizens held in Iran by granting a general waiver that allows international banks to transfer ... Read More

Revolutionizing aesthetic treatments at The Esthetic Clinics: A research-driven...

படுகிறது. ஆறு லட்சம் கோடி டாலரும் தென் கொரியா நாட்டிற்கு ஈரான் விற்ற ஆயில் பணம், அந்த பணத்தினை கொடுக்க வேண்டாம் நாங்கள் ஈரான் மீது பொருளாதார தடை விதித்திருக்கின்றோம் என்று அமெரிக்கா சொன்னவுடன் தென்கொரியா அதனை தர மாட்டேன் என்று சொல்லிவிட்டது. ஆக ஈரான் ஐக்கிய நாடுகள் சபைக்கு போகலாம், உலக நாடுகளின் நீதிமன்றம் ஒன்று இருக்கின்றது அதனை அணுகலாம். ஆனால் அங்கு நிவாரணம் கிடைக்காது.

ஏனென்றால் அங்கெல்லாம் அமெரிக்கர்கள் தங்கள் ஆதிக்கத்தை காட்டி அந்த பணத்தை நிறுத்தி வைத்து விடுவார்கள். ஆகவே அது அமெரிக்காவுக்கு எந்த மொழி புரியுமோ, எதைச் செய்தால் அமெரிக்கா தன்னுடைய காலடிகளில் வந்து விழுமோ அதைச் செய்தார்கள். இப்பொழுது அவர்களுக்கு ஆறு லட்சம் கோடி டாலர்கள் கிடைத்துவிட்டது. எப்பொழுது இந்த பொருளாதார தடை வந்தது என்றால் 2015இல் மிகப்பெரிய கொடூரமான, இஸ்லாத்திற்கு எதிரான, வெள்ளை நிறவெறி பிடித்த டொனால்ட் டிரம்ப் ஆட்சி காலத்தில் இந்த பொருளாதார தடையை விதித்தார். ஏன் இந்த பொருளாதார தடையை விதித்தேன் என்று அவர் ஒரு காரணம் கூறினார், அது அமெரிக்காவினுடைய உளவுத்துறையினுடைய ஏஜென்ட் பாப் வில்சன் ஈரானிலே உளவு பார்த்துக் கொண்டிருக்கும் போது காணாமல் போய் விட்டார், அவரை ஈரான் திரும்பத் தரவேண்டும் என்று கேட்டது. அவர் இன்று வரையிலும் காணாமல் போனவராகவே இருக்கிறார். கடைசி வரையிலும் அவரை காணவில்லை. அதனால் பொருளாதார தடை அங்கே நீடித்துக் கொண்டே இருந்தது. இந்த பொருளாதார தடையைத் தான் இப்பொழுது ஈரான் வென்றெடுத்திருக்கின்றது. இந்த பணம் வந்த பிறகு அமெரிக்காவிலே ஒரு பெரிய கொந்தளிப்பு.



இந்த மாதிரி ஒரு நேரத்தில் பைடன் ஈரானிடம் சரணடைந்து 6 லட்சம் கோடி அவர்களுக்கு கொடுத்து ஈரானை திடீரென ஒரு பணக்கார நாடாக ஆக்குகிறார் என்றால் அதை அந்த நாட்டினுடைய எதிர்கட்சிகள் இப்படிச் சொல்கின்றன. ஈரான் வறுமையிலே வீழ்ந்து, பொருளாதாரத்திலே நொருங்கிப் போய்க் கொண்டிருக்கக் கூடிய நேரத்தில் நீங்கள் கொடுக்கின்றீர்கள் என்று சொல்ல வில்லை. ஈரானிடம் இப்பொழுது அப்படியான பொருளாதார நெருக்கடி நிலை இல்லை. அங்கே பொருளாதாரம் மிகவும் நேர்மையாகவும் கீர்த்தியாகவும் போய்க் கொண்டிருக்கின்றது. அவர்களுடைய பொருளாதார வளர்ச்சியின் வேகம் 8.5% ஆகும். நீங்கள் நம்முடைய படைகளுக்கு ஆபத்தை தந்து கொண்டிருக்கக்கூடிய ஈரானுக்கு, மத்திய முஸ்லிம் நாடுகளுக்கும் நமக்கும் உள்ள பிணைப்பை உடைத்துக் கொண்டிருக்கக்கூடிய ஈரானுக்கு என்று சொல்கிறார்கள்.

இதனை நாம் நன்கு கவனிக்க வேண்டும். அண்மையிலே நாம் வெளியிட்ட நம்முடைய பதிவுகளில் வெளியிட்டோம், சவுதிக்கும் ஈரானுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம், நட்புறவு ஆகியவை அவர்கள் தங்கள் நாடுகளுக்கு இடையே, தங்கள் தூதரகங்களை தொடங் கியது எல்லாம் ஒரு பெரிய மாற்றத்தை கொண்டுவர இருக்கின்றது என்பதை நாம் கூறியிருந்தோம். அதுபோலவே அமெரிக்கா



வினுடைய அத்தனை ஆய்வாளர்களும், எதிர்க் கட்சியினரும் அதையே கூறி இருக்கின்றார்கள். ஏன் பைடனுடைய ஆளுங்கட்சியும் கூட இனி நம்முடைய நண்பர்களான மத்திய முஸ்லிம் நாடுகளை நம்மிடம் இருந்து பிரித்து, ஹர்மூஸ் பகுதியிலே நாம் ஒரு படையை அனுப்பினோம், அந்தப் படைக்கு மிகவும் ஆபத்தானதாகவும் ஈரான் இருந்து கொண்டிருக்கின்றது, இந்த நிலையில் ஆறு லட்சம் கோடி டாலர்களை கொடுத்து ஈரானை இப்படி பொருளாதார வல்லரசாக மாற்றி இருக்கின்றீர்கள். ஒரு டாலர் இன்றைக்கு இந்திய மதிப்பில் 83 ரூபாய்15 பைசா எனில் எவ்வளவு கோடி ரூபாய் ஈரானுக்கு லாவகமாக கிடைத்திருக்கின்றது என்று அத்தோடு நிற்கவில்லை.

இதற்கு ஒரு வரலாறு உண்டு 1985களில் ஈரானுடைய பயணிகள் விமானத்தை சுட்டுத் தள்ளியதற்காக 281ஆயிரம் கோடி டாலர் களை அன்றைக்கு கிளிண்டன் அரசிடம் இருந்து பெற்ற நாடு ஈரான். அடிக்கடி அமெரிக்காவிடம் இந்த நஷ்டங்களைப் பெற்றுள்ளது ஈரான்.

இப்பொழுது ஈரானின் மத்திய வங்கியின் கவர்னர் என்ன கூறுகிறார் எனில், “பணத்தை வைத்துக் கொண்டு தராமல் இருந்ததற்கு நாங்கள் தென்கொரியா மீது நடவடிக்கை எடுத்து அதற்கான இழப்பீட்டையும் பெறுவோம்” என்று சொல்லி இருக்கிறார்.

ஆகவே சகோதரர்களே அமெரிக்கா இப்பொழுது முஸ்லிம் நாடுகளிடம் சரணடைந்து கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் அமெரிக்காவில் வேகமாக இஸ்லாமும் வளர்ந்து கொண்டிருக்கிறது. அதனைப் பற்றிய தகவல்களை நாம் அடிக்கடி உங்களுக்கு தந்து கொண்டிருக்கிறோம்.

**MGM**


## ஆப்கானிஸ்தான் முஜாஹித்களின்
### தியாக வரலாறு

**விலை 120/-**




- முஜாஹிதீன் என்றழைக்கப்படும் இவர்கள் யார்? எல்லாம் வல்ல இறைவனைத் தவிர வேறு யாருக்கும் எதற்கும் அஞ்சத் தேவையில்லை, அடிபணியத் தேவையில்லை என்ற இஸ்லாமியத் தத்துவத்தை முன்நிறுத்தி தங்கள் வாழ்வின் அனைத்து சுகங்களையும் தியாகம் செய்து, தமது தாய்நாட்டை ஆக்கிரமித்த அந்நிய நாட்டவடை எதிர்த்து வீறுகொண்டெழுந்தவர்கள் தாம் இந்த முஜாஹித்கள்.



- ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்து ஆட்சி நடத்தலாம்; கம்யூனிஸத்தை அந்நாட்டு மக்களிடம் திணித்து விடலாம் என்ற எண்ணத்தில் தனது ராணுவத்தை அனுப்பு அட்டூழியம் செய்த ரஷ்ய ஏகாதிபத்தியத்தின் எண்ணத்தையே தூள்தூளாக்கிய அந்த விடுதலைப் போராளிகளின் வீர வரலாறு தான் இந்த நூல்.

இதுபோன்ற நூல்களை சகோதர சமுதாயத்தவர்களுக்கு அறிமுகப் படுத்துவதன் மூலம், தேவைப்பட்டால் வாங்கித் தருவதன் மூலம் வாசகர்களும் உண்மையை ஊரறியத்தரும் முயற்சியில் உங்களையும் இணைத்து கொள்ளுங்கள்....!

வேர்கள்
இஸ்லாமிய இலக்கியங்களின் வெளியீட்டகம்

**மு.குலாம் முஹம்மது M.A.,**

**போன் : 7401213394 / 7358278146 / 8148129887**

# லெபனான் அகதிகள் முகாம்



## தாக்குதலும்...! பின்னணியும்...!

## ஹமாஸ் - ஹிஸ்புல்லாஹ் அமைதிப் பேச்சுவார்த்தை....?

அண்மையில் உலகில் ஒரு பெரிய நிகழ்வு, உலக மக்கள் அனைவரையும் குறிப்பாக முஸ்லிம்களையும் வேதனை அடையச் செய்தது.அது லெபனான் என்ற நாட்டில் இருக்கின்ற பாலஸ்தீனர்கள் அதிகமாக அகதிகளாக வாழ்கின்ற.................... என்ற இடத்தில் நடைபெற்ற ஒரு சிறிய தாக்குதல்.அதன் பயங்கரமான விளைவு, அகதிகளாக இருந்த பலர் கொலை செய்யப்பட்டார்கள். அகதிகள் பலர் இந்த அகதிகள் முகாமிலே இருந்து தப்பித்து வெளியே செல்ல வேண்டிய ஒரு அவல நிலைக்கு ஆளானார்கள். அகதிகள் முகாம் அங்கேயும் நிம்மதியாக வாழ முடியாத ஒரு சூழல்.

இந்த அகதிகள் முகாம் உலகிலே அகதிகள் அதிகமாக வாழக்கூடிய முகாம் என்று கருத்தப்படுகிறது. 70 ஆயிரம் அகதிகள் மட்டுமே வாழ முடியும் என்ற நிலையில் ஏற்படுத்தப்பட்ட இந்த அகதிகள் முகாமில் இப்பொழுது ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேர் ஒரு குறுகிய எல்லைக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்குள் பிளவுகளை ஏற்படுத்தி அமெரிக்காவின் அதற்குப் பக்கத்துணையான இஸ்ரேலின் சதி திட்டங்கள். அங்கே குழுக்களை ஏற்படுத்தி அவர்களின் கைகளில் ஆயுதங்களை கொடுத்து, ஒரு உள்நாட்டு சண்டை போல் காட்டி அகதிகள் முகாமிலும் அவர்கள் நிம்மதியாக இருக்க முடியாத ஒரு நிலையை ஏற்படுத்துகிறார்கள்.

இந்த அகதிகள் முகாமினுடைய இன்னொரு முக்கியத்துவம் என்னவென்றால் 1947-1948 களில் இஸ்ரேல் உருவாக்கப்பட்டபோது, இஸ்ரேலில் இருந்து ஏழு லட்சத்து ஐம்பதாயிரம்



பாலஸ்தீனர்கள், முஸ்லிம்கள் அங்கே இருந்து அகதிகளாக வெளியேற்றப்பட்டார்கள் இஸ்ரேலின் தீவிரவாத செயல்களால். அதை பல்வேறு வீடியோக்களிலும், பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு என்ற நூலிலும் விரிவாக சுட்டிக்காட்டி இருக்கின்றோம்.

அன்றிலிருந்து இன்று வரைக்கும் அவர்கள் அகதிகள் முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அதன் பிறகு 2007 இல் லெபனானில் ஏற்பட்ட உள்நாட்டு குழப்பம் அதனால் அகதிகளாக ஆனவர்கள், அதன் பிறகு சிரியாவில் அமெரிக்கா பல்வேறு போராளி குழுக்களை ஏற்படுத்து அங்கே உள்நாட்டு குழப்பத்தை விளைவித்த போது அகதிகளாக அகற்றப்பட்டவர்கள் இப்படிப் பலர் அந்த அகதிகள் முகாம்களிலே வந்து தஞ்சம் புகுந்தார்கள்.

இப்பொழுது பாலஸ்தீனர்களுக்கு மட்டும் என உருவாக்கப்பட்ட அந்த அகதிகள் முகாம், எல்லா பகுதிகளையும் சார்ந்த அகதிகள் வாழும் குறிப்பாக முஸ்லிம்கள் வாழும் முகாம்களாக மாற்றப்பட்டிருக்கின்றது. இஸ்ரேல் அடிக்கடி அங்கே தான் ஹமாசின் உடைய போர்க் களதிகள் அங்கே தான் இருக்கின்றார்கள், ஹமாசின் பயிற்சிகள் அங்கே தான் கொடுக்கப் படுகின்றது. அவர்கள் தான் இவர்களை அடிக்கடி தாக்கி திகிலடைய வைக்கின்றார்கள். ஆகவே அவர்கள் அந்த தீவிரவாதிகளை கண்டு பிடித்து அழிக்கின்றோம் என்று குண்டுகளைப் போட்டு அவர்கள் எழுப்பி வைத்திருக்கின்ற .......... இருப்பிடங்களை கூட அழித்து விடுகின்றார்கள். இது 2018ல் மிகப்பெரிய அளவில் நடந்தது.

இந்த வருடம் 2023 ஜூலை ஒன்றில் அமெரிக்கவினுடைய கைக்கூலிகள் ஏற்படுத்திய ஒரு தாக்குதலில், அது மெல்ல மெல்ல லெபனானினுடைய படைக்கும், பாலஸ்தீன மக்களுக்கு இடையே உள்ள யுத்தமாக மாறி அகதிகள் முகாமை விட்டு 20000 பேர் வெளியேறுகின்ற ஒரு பயங்கரமான சூழல் ஏற்பட்டது. இந்த நிலையில் ஹமாஸினுடைய தலைவர், ஹமாஸினுடைய தளபதியும், ஹிஸ்புல்லாவினுடைய செகரட்டரி ஜெனரல் ஹசன் நசருல்லாவும் அடிக்கடி கடந்த ஜூலை 31இல் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அந்த அகதிகள் முகாம் அமைதியான முகாமாக மாற வேண்டும் அதற்காக நாம் இருவரும் நமது செயல் வீரர்களை அனுப்பி, அமெரிக்கா வினுடைய இஸ்ரேலினுடைய சூழ்ச்சியாளர்கள் உள்ளே புகுந்து விடாமல் தடுத்து மொத்தமாக அந்த அகதிகள் முகாமை காப்பாற்ற வேண்டும் என்று பேசி ஒரு ஒப்பந்தத்திற்கு வந்திருக் கின்றார்கள்.

அந்த ஒப்பந்தத்தின் இறுதியில் லெபனானி னுடைய அலுவலர்களை சேர்த்து விட்டு, ஏனென்றால் லெபனானின் ராணுவத்தில் ஊடுருவி இருக்கின்ற அமெரிக்காவினுடைய கைக்கூலிகள் அடிக்கடி அங்கே தாக்குதலை நடத்துகின்றார்கள். அவர்களை அழைத்துப் பேசி இனி இஸ்ரேல் என்ற நமது எதிரிக்கு எதிராகத்தான் நாம் ஆயுதங்களை பிரயோகிக்க வேண்டுமே தவிர நமது சொந்த சகோதரர் களுக்கிடையே ஆயுதங்களை பிரயோகிக்க கூடாது என்று முடிவு எடுத்திருக்கிறார்கள். இது முஸ்லிம் உலகில் மிகப்பெரியதொரு மகிழ்ச்சி யான நிலையை ஏற்படுத்தி இருக்கின்றது. அதனை எல்லா முஸ்லிம் உலக பத்திரிகைகளும் வெளியிட்டு இருக்கின்றன அதனை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

# குழந்தை வளர்ப்பு

# குழந்தை வளர்ப்பு

> என்னுடைய பாலஸ்தீன தோழி படிப்பை முடித்து அவள் சொந்த ஊருக்கு சென்ற இரண்டாவது வாரத்திலேயே தன் வீட்டின் முன் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டாள். அவள் மூலம் தான் நான் இஸ்லாத்தைப் பற்றிய, முஸ்லிம்களை பற்றிய அறிமுகத்தை பெற்றேன். நான் இன்னும் கலீமா சொல்லவில்லை! ஆனால் என் தோழிக்கு அவளோடு என்னையும் சொர்க்கத்தில் பார்க்க வேண்டும் என்று அலாதியான ஆசை. அதனால்.......!

# அமெரிக்க கிருஸ்தவர் ஆமிராஹ் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்?

நான் அமெரிக்காவின் ஆர்கன்சாஸில் கிறிஸ்தவ பெற்றோருக்கு பிறந்தேன். என் பெற்றோருக்கும் இதுதான் பூர்வீகம். நான் ஆய்வு செய்து பார்த்தவரை, எனது குடும்பத்தினர் அனைவரும் அமெரிக்காவில் உள்ள தென் மாநிலங்களில் இருந்து இங்கு வந்துள்ளனர். நான் என் வாழ்நாள் முழுவதும் ஒரு பண்ணை வீட்டில்தான் வளர்க்கப்பட்டேன். என் தந்தை கிருஸ்தவ மதப்பிரிவில் ஒரு பாப்டிஸ்ட் மினிஸ்டர். இது ஒரு பிரிவு. கத்தோலிக்கர்கள், மெதடிஸ்ட்கள் போன்ற ஒரு கிருஸ்தவ பிரிவு. மேற்சொன்னவைகள் எல்லாம் கிருஸ்தவ மதத்தின் பிரிவுகள். ஆனால் ஒவ்வொன்றிற்கும் ஒரு கோட்பாடு உள்ளது. புரியும்படி சொல்ல வேண்டுமென்றால் ஷியா, சன்னி பிரிவுகள் இருப்பது போல.

நான் வாழ்ந்து கொண்டிருந்த இந்த நகரத்தை சுற்றி 300 மைல்களுக்கு வெள்ளை கிருஸ்தவர்கள் வாழ்கின்றார்கள். வேறு எந்த மதங்களையோ, கலாச்சாரங்களையோ நான் கண்டதில்லை. ஆனாலும் எனக்கு எப்போதும் இப்படி கற்பிக்கப்பட்டது. அது, "கடவுளின் கண்களுக்கு நாம் அனைவரும் சமம் தான். நிறம், இனம், மத ரீதியாக நாம் பிரிந்து கிடந்தாலும், கடவுளின் படைப்பில் நாம் அனைவரும் சமமான மனித படைப்புதான்." என்று.

ஆனால் கிறிஸ்தவர்கள் "திரித்துவம் (பிதா, சுதன், பரிசுத்த ஆவி) என்று அழைக்கும் கொள்கையை நான் எப்போதும் என் மனதில் கேள்வி எழுப்பிக் கொண்டே இருந்தேன். நாம் ஏன் இயேசுவிடம்(அலை) ஜெபிக்க வேண்டும். நேரடியாக கடவுளிடம் ஜெபிக்கக் கூடாதா? கடவுளைத் தாண்டி ஏன் இயேசு(அலை) அவர்கள் மீது இவர்கள் இப்படி ஒரு பிணைப்பை உண்டாக்குகிறார்கள் என்று!

### சுவனத்தில் எனக்காக காத்திருக்கும் என் பாலஸ்தீன தோழி

நான் ஆர்கன்சாஸ் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போதுதான் முதன்முதலாக முஸ்லிம் களைப் பார்த்தேன். நான் ஒப்புக்கொள்கிறேன், நான் "வித்தியாசமான ஆடைகளில்" இருந்த பெண்களையும், தலையில் டவல் போர்த்திக்கொண்டு "நைட் கவுன்" அணிந்திருந்த ஆண்களையும் முறைத்துப் பார்த்தேன். ஆனால் அங்குதான் இஸ்லாம் குறித்த கேள்விகள் கேட்பதில் எனக்கு வசதியாக இருந்த ஒரு முஸ்லிம் பெண் எனக்கு தோழியாக கிடைத்தாள். அந்த நட்புதான் என் இதயத்திலும் உள்ளத்திலும் ஒருபோதும் தணியாத தாகத்தைத் தொடங்கியது. அல்ஹம்துலில்லாஹ்!



நான் அவளை ஒருபோதும் மறக்க மாட்டேன். அவள் பாலஸ்தீனத்தைச் சேர்ந்தவள். அவளுடைய நாடு மற்றும் கலாச்சாரம் பற்றிய கதைகளை நான் மணிக் கணக்கில் உட்கார்ந்து கேட்பேன். ஆனால் என்னை மிகவும் கவர்ந்தது அவளுடைய மதமாகிய இஸ்லாம். அவளுக்குள் ஒரு உள் அமைதியை என்னால் பார்க்க முடிந்தது. இதுவரை இப்படி அமைதியான பெண்ணை யாரையும் நான் பார்த்ததில்லை. இறைத் தூதர்கள், அல்லாஹ் பற்றியெல்லாம் அவள் என்னிடம் சொன்னது இன்றும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.

இஸ்லாம் மட்டும் தான் மனித குலம் சுவனத்திற்கு செல்வதற்கான ஒரே வழி என்பதையும், மற்ற மதங்களை போல இஸ்லாம் வெறும் மதம் அல்ல, அது இறைவனால் வழங்கப் பட்ட முழு வாழ்க்கை நெறி என்றும் எனக்கு விவரித்து கூறினாள். இப்படியே ஓடிக் கொண்டிருந்த எங்களுடைய கல்லூரி காலம் முடிவுக்கு வந்தது. ஆம், பட்டப்படிப்பு முடித்த பின் என்னுடைய தோழியான அவள், அவளது சொந்த ஊரான பாலஸ்தீனத்திற்கு சென்று விட்டாள். அங்கு சென்று இரண்டாவது வாரத்தில் அவள், அவளது வீட்டின் முன் சுட்டுக் கொல்லப்பட்டாள். இந்த செய்தியை கேட்ட நான் உடைந்து போனேன். என்னுள் ஒரு பகுதி அங்கு கொல்லப் பட்டது போல் இருந்தது எனக்கு. எனக்கு நன்றாக தெரியும் இனி நான் இந்த உலகில் அவளை சந்திக்கப் போவதில்லை என்று. ஆனால் அவளுக்கு இவ்வுலகில் ஒரே ஒரு ஆசை தான் இருந்தது. அது, மறுமையில் என்னை அவளோடு சுவனத்தில் பார்க்க வேண்டும் என்ற ஆசைதான்.

### அரபு மொழியின் மீது உண்டான காதல்

இந்த நேரங்களில் தான் நான், மத்திய கிழக்கு நாடுகளைச் சார்ந்த பலரை சந்தித்து நட்பு கொண்டேன். அவர்கள் எனக்கு உதவினார்கள். என் தோழியின் இழப்பிலிருந்து என்னை மீட்டார்கள். அப்போது எனக்கு அரபு மொழி யின் மீது ஒரு இனம் புரியாத ஆர்வம், காதல் வந்தது. மணிக்கணக்கில் அரபு மொழியில் குர்ஆன் ஓதும் “டேப்” களை கேட்பேன். அது எனக்கு எதுவும் புரியாது. ஆனால் அது மனதிற்கு இனிமையாக இருக்கும். அது என் நெஞ்சத்தையும், ஆன்மாவையும் தொடும். இப்போதும் கூட எனக்கு அந்த பழக்கம் உள்ளது. யாரையாவது குர்ஆன் ஓத சொல்லி அதை கேட்கும் போது மனதிற்கு அத்துனை இனிமையாக இருக்கும்.

சுற்றி 300 மைல்களுக்கு ஒரு பள்ளிவாசல் கூட இல்லாத எங்கள் ஊரில் நான் அரபி கற்றுக் கொள்வது சாத்தியமில்லாத ஒன்று. என்னுடைய கல்லூரியில் கற்றுக் கொள்ளவும் எனக்கு போதிய நேரமில்லை. கல்லூரி நண்பர்களிடம் பேச முயற்சி செய்வேன். “அரபி இங்கிலீஷில்” டைப் செய்ய முயற்சி செய்வேன். இதை யெல்லாம் பார்க்கும் என் நம்பர்கள், “நீ ஏதோ தனி வழியில் செல்வது போல உள்ளது” என்று கூறுவார்கள்.

நான் கல்லூரி படிப்பை முடித்துவிட்டு வீட்டிற்கு திரும்பிய போதும், அரபு மொழி மீதான எனக்கிருந்த தாகம் குறையவில்லை. இதை கவனித்த என்னுடைய பெற்றோர்கள் என்னை கண்டித்தார்கள். எனக்கு எதுவுமே புரியவில்லை, “கடவுளின் கண்களால் நாம் அனைவரும் சமம்தானே” என்று நான் நினைத்திருந்தேன். ஆனால் அதில் என் பெற்றோர்கள், குடும்பத் தினர்கள் மட்டும் சற்று விதிவிலக்கானவர்கள் போல. பின்னர் 1995ஆம் ஆண்டு ஒரு வசந்த காலத்தில் அல்லாஹ் ஒருவரை என் வாழ்க்கையில் அனுப்பினான். ஒரு முஸ்லிம் எப்படி இருக்க வேண்டும். பிறரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு அவர் சிறந்த உதாரணமாக திகழ்ந்தார். அவரிடம் மீண்டும் இஸ்லாம் குறித்த கேள்விகளை கேட்க ஆரம்பித்தேன். அவர் எனக்கு அனைத்தையும் விளக்கினார். என்னை முதன் முதலில் பள்ளிவாசலுக்கு அழைத்து சென்றார்.

பின்னர் எட்டு மாதங்களாக இஸ்லாம் குறித்து படித்து, டேப் கேசட்டுகளை கேட்டு, பிப்ரவரி 15, 1996ஆம் ஆண்டு திருக்கலிமாவை கூறி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன். நாங்கள் இருவரும் திருமணம் செய்து கொள்ள விரும்பினோம். ஆனால் எங்கள் இரு வீட்டார்களும் அதற்கு சம்மதிக்கவில்லை. அவரது வீட்டில் அவர் ஒரு அமெரிக்க பெண்ணை திருமணம் செய்ய பயங்கர எதிர்ப்பு இருந்தது. எனது வீட்டார்கள், நாம் ஒரு அரபு மாப்பிள்ளையை தேர்வு செய்ததை அறிந்து அதிச்சி அடைந்தார்கள். அதனால் எங்கள் திருமணம் நடைபெறாமல் போனது. ஆனால் நான் அதற்காக இஸ்லாத்தை விடவில்லை. இஸ்லாம் என்னுள் ஆழமாக குடிகொண்டு விட்டது.

**சோதனைகள்**

நான் இஸ்லாத்தை ஏற்றதை அறிந்து கொண்ட என் பெற்றோர்கள் என்னை ஒரு மனநலக் காப்பகத்தில் சேர்த்து விட்டார்கள். ஆனால் அது பலனளிக்கவில்லை. என்னுடன் என் குடும்பதார் பேசுவதை நிறுத்தினார்கள். என்னுடைய நீண்ட கால நண்பர்களும் கூட! அப்படியே ஏதாவது பேசினாலும், "நீ நரகத்தில் விழுந்து அழுகி போய் விட்டாய்" என்று கடுமையாக திட்டுவார்கள். இதெல்லாம் எனக்கு வேதனையாகத்தான் இருக்கும். ஆனால் அவர்கள் என் பெற்றோர் களாயிற்றே! அவர்களையும், என் நண்பர்களையும் நான் இன்னும் நேசிக்கின்றேன்.

இந்த நேரத்தில் தான் சவுதி அரேபியாவில் ஒரு குண்டுவெடிப்பு நிகழ்கின்றது. அந்த குண்டு வெடிப்பில் என்னுடைய உறவினர்கள் சிலர் இறந்து போயிருந்தனர். அந்த செய்தியை சொல்ல என்னிடம் மீண்டும் பேசினார்கள் என் பெற்றோர்கள். ஆனால் இந்த முறையும் திட்டுக்கள் தான். அவர்கள், அந்த ரத்தக் கரையை என் தலைமீது வைத்தார்கள். என்னுடைய தீவிரவாத நண்பர்கள் தான் என் உறவினர்களை கொன்றுவிட்டனர் என்று என்னை பழித்தார்கள். இது எனக்கு மிகுந்த மன வேதனையை தந்தது. நீண்ட நாட்கள் நான் அழுதுக் கொண்டே இருந்தேன். ஆனாலும் ஆச்சரியம் என்னவென்றால், இந்த ஒவ்வொரு சோதனையிலும் என்னுடைய ஈமான் இன்னும் வலுப்பெற்றுக் கொண்டே சென்றது. அல்ஹம்துலில்லாஹ்!

**நான் தீவிரவாதத்தை காதலிக்கிறேனாம்!**

இந்த சம்பவங்கள் எல்லாம் நடந்து நான்கு நாட்களுக்கு பிறகு, ஒரு மதிய வேளையில் எங்கள் வீட்டின் ஜன்னல் ஒன்றின் மீது துப்பாக்கி சூடு ஒன்று நடந்தது. மேலும், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த என்னுடைய வாகனத்தில் "Terrorist Lover" என்று ஸ்பிரே பெயிண்டில் எழுதப்பட்டிருந்தது. இதுகுறித்து காவல் துறைக்கு நாங்கள் புகார் அளித்தோம். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதே நாளில் இரவில், மீதமுள்ள ஜன்னல்கள் மீதும் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. வெளியில் வந்து பார்த்த போது, என்னுடைய வளர்ப்பு பிராணி களையும் சுட்டுக் கொன்று விட்டிருந்தனர்.

விஷயமறிந்து விரைந்து வந்த காவல் துறையினர், "நீங்கள் அவர்களைப் பற்றின துப்புகளை, அதாவது அவர்கள் பார்ப்பதற்கு எப்படி இருந்தார்கள், வாகங்கள் வைத்திருந் தனரா?, வாகன எண்கள் என்ன" போன்ற துப்பு களை கொடுக்காவிட்டால், எங்களால் அவர்களை கண்டுபிடிக்கவே முடியாது" என்று கூறிக் கொண்டிருந்தனர். நான் அவர்களிடம், "என்னுடைய வாகனத்தை சேத்தப்படுத்தி யுள்ளனர். என்னுடைய வளர்ப்பு பிராணிகளை கொன்றுள்ளனர். அதைப்பற்றி விசாரியுங்கள்." என்று கூறினேன். அவர்கள் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை.

அதன் பின் நான் ஒரு ஹோட்டலுக்கு சென்று தங்க முடிவெடுத்தேன். ஆனால் அதற்கும் காவல்துறை அனுமதிக்கவில்லை. "உன்னுடைய தீவிரவாத நண்பர்கள் தான் யாரோ இதை செய்துள்ளனர்" என்று என்னுடைய முஸ்லிம் நண்பர்களை இந்த சதி வலைக்குள் சிக்க வைக்கவே முயற்சிகளை மேற்கொண்டார்கள். இன்னொரு நாள் என்னுடைய வாகன நிறுத்தும் இடத்தில் என்னை ஒருவன் தாக்கினான், அவன் என்னை முறைப்படி தாக்கினான். என்னுடைய மணிக்கட்டு மற்றும் விலா எலும்புகளில் சில சேதங்களை ஏற்படுத்தினான்.

எனக்கு என்ன செய்வது என்றே தெரிய வில்லை. அல்லாஹ்விடம் "சுஜூத்"-இல் விழுந்தேன். அல்லாஹ்விடம் அழுது, "யா அல்லாஹ் இந்த விஷயத்தில் நீயே எனக்கு உன்னுடைய கருணையையும், நேர்வழியையும் காட்டு" என்று துஆ செய்தேன்.

அல்லாஹ் எனக்கு பதிலளித்தான். என்னை தாக்கிய அந்த மர்ம நபர் பிடிபட்டான். அவன் இதே ஊரில் பல காலமாக பல சமூக சேவை களை புரிந்தவன். அவனை விசாரித்து சிறையில் அடைத்தார்கள். இதேப்போல் ஒரு நாள், துணி துவைக்கும் துப்புறவாளர்களிடம் (Laundry Service) என்னுடைய ஆடைகளை எடுக்க சென்றிருந்த போது, என்னுடைய ஹிஜாப், நிகாப்,

அபாயா போன்ற ஆடைகள் மட்டும் இல்லாமல் இருந்தது. அதுகுறித்து அந்த அதிகாரியிடம் கேட்ட போது, "அவைகள் எல்லாம் தொலைந்து விட்டது" என்று அசால்டாக பதிலளித்தார்.

நான் வசிக்கும் இந்த நகரம் மிகவும் சிறியது. எனக்கு மிக அருகாமையில் உள்ள மசூதியே 120 மைல்களுக்கு அப்பால்தான் உள்ளது. என்னைச் சுற்றி எந்த முஸ்லிம்களோ, அரபுக்களோ இல்லை. அதானல் இஸ்லாம் குறித்து இன்னும் அதிகமாக கற்றுக்கொள்ள எனக்கிருக்கும் ஒரே வழி இனைய தளம் ஒன்றுதான். இணையதளத்தில் உள்ள எனது உண்மையான முஸ்லிம் நண்பர்கள், சகோதர, சகோதரிகள் எனக்கு சிறிது சிறிதாக இஸ்லாத்தை கற்றுக் கொடுக்கின்றார்கள். குறிப்பாக பாலஸ்தீன சகோதரர் ஒருவரும். அவருக்கு என்னுடைய பிரார்த்தனைகளையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அல்லாஹ் நம்மோடு இருக்கின்றான்**

என் மீது அனுதாபம் உண்டாக வேண்டும். எனக்காக நீங்கள் கண்ணீர் சிந்த வேண்டும் என்ற நோக்கத்தில் என்னுடைய இந்த கதையை நான் எழுதவில்லை. என்னுடைய இந்த அனுபவங் களிலிருந்து நீங்கள் ஒன்றை உணர்ந்து கொள்ள வேண்டும். அது, "உங்களுக்கு எவ்வளவு பெரிய சோதனைகள் வந்தாலும், நீங்கள் அல்லாஹ் வையே சார்ந்திருக்க வேண்டும். அல்லாஹ் நிட்சயமாக நம்மை கைவிட மாட்டான்."

அமெரிக்க முஸ்லிம்களாகிய நாம், நிறைய அநீதிகளையும், பழிசொற்களையும் சந்தித்து வருகின்றோம். இதையெல்லாம் ஒரு சோதனை களாக ஏற்றுக்கொண்டு நாம் அவற்றை எதிர் கொள்ள வேண்டும். எனக்கு நன்றாக தெரியும், நான் வசிக்கும் ஊரில் தான் நான் தனியாக இருக்கின்றேனே தவிர, இந்தப் போரில் (இஸ்லாமோபோபியாவிற்கு) எதிரான இந்தப் போரில் நான் தனியாக இல்லை. ஊடகங்கள், இஸ்லாத்தின் உண்மையான பக்கங்களை அச்சிட்டுக் காண்பிக்கும் சூழல்களை நாம் உருவாக்குவோம். அல்லாஹ் நம்மை வெற்றியடைய செய்வான்.

**இறுதியாக**

என்னுடைய பாலஸ்தீன தோழி! எனக்கு முதன் முதலில் இஸ்லாத்தை அறிமுகப் படுத்தியவள். சொர்க்கத்தில் நாங்கள் இருவரும் சந்தித்துக் கொள்ள வேண்டும் என்று ஆசை கொண்டவள். நான் உறுதியிட்டு கூறுகின்றேன். பிப்ரவரி 15, 1996 அன்று சொர்க்கத்திலிருந்து நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட அந்த காட்சியை கண்டு, முகத்தில் சிரிப்போடு, அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் என்று கூறியிருப்பாள். விரைவில் நான் அவளை சுவனத்தில் சந்திப்பேன். இன்ஷா அல்லாஹ்...!

*https://www.muslimconverts.com/converts/Amirah*

- அஷ்ரப் அலீ

## தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் - அன்பகம் தாஃவா மத்ரஸா

### 17-09-2023 அன்று அந்தனப்பேட்டை, பொரவாச்சேரி - கிராமங்களில் தாஃவா

**17/09/23 அன்று நாகை மாவட்டம் அந்தனபேட்டை ,பொரவாச்சேரி கிராமத்தில் தாஃவா சுற்றுப்பயணம் மேற்கொள்ளப்பட்டது. இதில் "வாழ்வின் நோக்கம்" நோட்டிஸ் மற்றும் வேர்கள் வெளியீட்டகத்தின் தாஃவா நூல்கள் விநியோகிக்கபட்டது.!**







# இந்தியாவில் முஸ்லிம்கள்

## தொடர் 18

இங்கே நாம் சூஃபியாக்களது பங்களிப்பை குறித்து வரலாற்றின் காலவரிசையில் குறிப்பிட வில்லை. ஏனென்றால் அவ்வாறு குறிப்பிட முயன்றால் அது பல பாகங்களை கொண்ட நூலாக உருவாகி விடும். இந்தியாவில் சீர்திருத்தம் மிகுந்த ஒரு சமூகத்தை உருவாக்கியதில் இந்த நாட்டை சேர்ந்தவர்களது பங்களிப்பை விட சூஃபி மகான்களின் பங்களிப்பே அதிகம்.

இடைக்காலத்தில் சூஃபி மகான் களை பற்றி பல்வேறு வரலாற்று குறிப்புகள் நூல்களில் குவிந்து இருந்தாலும், இங்கே பதிமூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய மிகப்பெரிய சீர்திருத்த வாதியும், சூஃபி மகான்களில் ஒருவருமான, ஸைய்யத் அஹ்மத் ஷஹீத் (ரஹ்) அவர்களை குறித்து மட்டும் இங்கே பதிவு செய்கிறோம். மக்களின் சமூக வாழ்க்கையில் மார்க்க ரீதியான தாக்கத்தை எவ்வளவு ஆழமாக இந்த சூஃபி மகான் ஏற்படுத்தினார் என்பதற்கு, பின்வரும் உதாரணம் ஒன்று மட்டுமே போதுமானது. வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்,

ஸைய்யத் அஹ்மத் ஷஹீத் (ரஹ்) அவர்கள் தனது தோழர்களோடு மக்காவிற்கு புனித யாத்திரை செல்லும் வழியில் கல்கத்தாவில் தங்கியிருந்த போது அன்னார் அவர்களோடு இருந்த உலமாக்கள், ஸாலிஹீன்கள் அனைவரும் மக்களுக்கு மார்க்கத்தை போதித்தனர்.

இந்த போதனைகள் மக்களிடையே ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தின. நிறைய மக்கள் இஸ்லாத்தை தழுவினர். ஷரீஅத்தை பின்பற்ற துவங்கினர். இதனால் மதுச் சந்தைகள் முற்றிலுமாக மூடும் நிலை உருவானது. கல்கத்தா அந்த நேரத்தில் இந்தியாவின் மிகப் பெரிய நகரமாகவும் ஆங்கிலேய அரசின் தலைமையகமாக திகழ்ந்தது. மக்களின் இந்த மனமாற்றம் மதுச் சந்தைகளை மிகப்பெரிய சரிவை சந்திக்க வழிவகுத்தது. மதுக் கடைக் காரர்கள் அவர்களது வியாபாரம் மிகப் பெரிய சரிவை சந்தித்ததால் வரியை செலுத்த முடியவில்லை என்று அரசாங்கத்திடம் கூறும் அளவிற்கு



மூலம்:
அபுல் ஹஸன் அலீ நத்வீ (ரஹ்)

நிலைமை மாறியது. இதனால் முற்றிலுமாக மதுக்கடைகள் மூடப்பட்டது.

இதுபோன்ற நிகழ்வுகள் சூஃபி மகான்களின், ஸாலிஹீன்களின் ஆன்மீகம் மற்றும் நல்லொழுக்கத்தின் விளைவே என்று கூறினால் அது மிகையாகாது. இவர்களின் மூலம் பல்வேறு மக்கள் நேர் வழி பெற்றார்கள். தங்களது பாவங்கள், தீய குணங்கள், மனோ இச்சையை பின் பற்றுதல் ஆகியவற்றிலிருந்து தவ்பா செய்தார்கள். இதுபோன்று எந்தவொரு அரசாங்கமும், அமைப்பும், சட்டங்களும் மக்களின் சமூக வாழ்க்கையில் இவ்வளவு தூரம் ஆதிக்கத்தை ஏற்படுத்த வில்லை என்பதே நிதர்சனமான உண்மை.

### அநீதி அரசன் முன்பு சத்தியத்தை உரக்க கூறுதல்

சூஃபி மகான்களின் மற்றுமொரு முக்கியமான ஒரு பண்பு மன்னர்களின் பேராபத்து மிகுந்த நடவடிக்கைகளை எதிர்த்து போராடினார்கள். நாட்டையும் அரசையும் உலுக்கிய அபாயமான சூழ்நிலையிலிருந்து காப்பாற்றினர். அதேபோல நாடோ அரசோ அச்சறுத்தலை எதிர்நோக்கும் போது தங்களது அறிவார்ந்த ஆலோசனைகளால் அதனை அழிவிலிருந்து காப்பாற்றி இருக்கின்றனர். அதே போல சத்தியத்தை விட்டு அரசு வழிதவறும் தருணங்களில் அனைத்தும் கடுமையாக அதனை விமர்சிக்கவும் செய்தனர். இவர்களது இந்த நடவடிக்கைகள் மக்களது உள்ளங்களில் வீரம், தைரியம், எழுச்சி ஆகிய உணர்வுகளை தட்டியெழுப்பியது.

இந்திய வரலாற்றில் இது போன்ற நிகழ்வுகள் நிரம்பியே இருக்கின்றன.இந்த சூஃபி மகான்கள் தேவை ஏற்படும் தருணங்கள் அனைத்தும் தங்களது துணிச்சல் மிகுந்த செயல்களை வெளிப் படுத்தினர். வாழ்வதை விட மரணத்திற்கே முன்னுரிமை அளித்தனர். ஜிஹாத்களில் சிறந்தது "அநீதியான அரசன் முன்பு சத்தியத்தை உரக்க கூறுவது" இதனையே தங்களது கோட்பாடாக கொண்டிருந்தனர்.

மன்னர் துக்ளக் அவர்களது காலத்தில் நிகழ்ந்த இரண்டு சம்பவங்களை இங்கே நாம் உதாரணமாக குறிப்பிடுகிறோம். இந்த இரண்டு நிகழ்வுகளும் அவர்களது வீரத்தையும் அரசின் பிரம்மாண்டத்தை எவ்வளவு சாதாரணமாக கருதினார்கள் என்பதையும் தங்கம் மற்றும் வெள்ளி குவியல்களை எவ்வளவு அற்பமாக கருதினார்கள் என்பதை தெளிவாக கூறுகிறது.

சுல்தான் முஹம்மத் துக்ளக் ஷைகு குத்புதீன் முனவ்வர்(ரஹ்) அவர்களது ஹான்காவை கடந்து சென்றார். ஷைகு அவர்கள் ஷிஷ்திய்யா தரீகத்தின் மிகப்பெரிய ஷைகு ஆவார்.மக்களை விட்டும் தனிமையில் இருப்பதை விரும்புபவர். இதனால் மன்னரை சந்திக்க வில்லை. இதனால் சுல்தான் ஷைகு அவர்களை

டில்லிக்கு வருமாறு கூறினார். ஷைகு அவர்கள் அரண்மனைக்கு வருகை புரிந்து அரசவைக்குள் நுழைந்தார் . அங்கே அமைச்சர்கள், அதிகாரிகள், பணியாளர்கள் அனைவரும் எழுந்து அமைதி யோடு, பணிவோடு ஆயுதம் ஏந்தி இதயங்களை அச்சுறுத்துவதை போன்று நின்று கொண்டிருந்தனர்.

ஷைகு அவர்கள் தன்னோடு தனது மகனையும் அழைத்துச் சென்றிருந்தார். சிறிய வயதுடைய மகன் என்பதால் அரசவையை இதற்கு முன்பு பார்த்ததில்லை. எனவே இந்த காட்சி சிறுவனது உள்ளம் முழுக்க அச்சத்தை ஏற்படுத்தியது. உடனே ஷைகு குத்புதீன்(ரஹ்) அவர்கள் தனது குரலை உயர்த்தி "எனது மகனே சர்வ கண்ணியமும் இறைவனுக்கே சொந்தம்" என்று கூறினார்.

ஷைகு நூருத்தீன் அவர்கள் கூறுகிறார்கள், "எனது தந்தை உயர்ந்த குரல் சப்தத்திற்கு பிறகு ஒரு விநோதமான ஆற்றலை என் உள்ளத்தில் உணர்ந்தேன். என் உள்ளத்தில் தோன்றியிருந்த அச்சம் முழுமையாக மறைந்து போனது. சிறிது மணித்துளிகளில் முன்னால் என் உள்ளத்தை அச்சுறுத்திய அரசவை இப்போது எனக்கு ஏதோ சிறிய ஆட்டு மந்தை போல தெரிந்தது."

பிறகு சுல்தான் ஷைகு அவர்களை கடிந்து கொள்ளும் விதத்தில் "உங்களது ஹான்காவை நாங்கள் கடந்து சென்றோம், ஆனால் நீங்களோ உங்களது சந்திப்பின் மூலம், உங்களது நல்லுப தேசத்தின் மூலம் எங்களை கண்ணியப் படுத்தவில்லை."

அதற்கு ஷைகு அவர்கள் நிச்சயமாக இந்த ஏழை மனிதன் உங்களை சந்திக்கும் அளவு தகுதி வாய்ந்தவன் அல்ல. அவன் எப்போதும் தனித்து வாழ்பவன். அவனது பணியே எப்போதும் அரசனிற்காகவும் அனைத்து முஸ்லிம் களுக்காகவும் பிரார்த்தனை செய்வதே. இந்த விஷயத்தில் எனது காரணத்தை ஏற்று கொள்ள வேண்டும்.

ஷைகு அவர்கள் அரண்மனை விட்டு சென்ற பிறகு தனது அமைச்சர்களிடம் கூறினார், "எனக்கு நிறைய ஷைகுமார்கள், உலமாக்கள் முஸாஃபஹா செய்துள்ளார்கள். ஆனால் அவர்கள் எனக்கு முஸாஃபஹா செய்யும் போது அவர்களது கரங்கள்

அச்சத்தால் நடுங்குவதை நான் உணர்ந்துள்ளேன். நான் இந்த ஷைகை முஸாஃபஹா செய்யும் போது அவரது கரங்களில் எந்தவொரு நடுக்கத் தையும் உணரவே இல்லை மாறாக முழு நம்பிக்கையோடு பலத்தோடு எனக்கு முஸாஃபஹா செய்தார்."

ஷைகு அவர்களுக்கு ஒரு இலட்சம் தங்க காசுகளை அன்பளிப்பாக வழங்கினார். உடனே ஷைகு அவர்கள் சுப்ஹானல்லாஹ்!!!! "எனக்கு உண்ணும் அளவிற்கு சிறிது அரிசியும் சிறிய குவளையில் நெய்யும் போதுமானது. இத்துனை லட்சம் பொற்காசுகளை வைத்து நான் என்ன செய்வது."

ஆனால் மன்னர் வழங்கும் அன்பளிப்பை ஏற்கவில்லை என்றால் கோபம் கொள்வார் என்று கூறப்பட்ட போது அந்த பொற்காசுகளை வாங்கி தனது தோழர்களுக்கும் ஏழைகளுக்கும் பங்கிட்டு கொடுத்து விட்டார்கள்.

இரண்டாவது நிகழ்வு ஷைகு ஃபக்ருத்தீன் அர்ராஸி (ரஹ்)தொடர்புடையது.ஷைகு அவர்கள் அரசர்களை சந்திப்பதை பெரும்பாலும் தவிர்த்து கொள்ளும் பழக்கம் உடையவர். எப்போதும் இவ்வாறு கூறுவார்,

"சுல்தானின் தர்பாரில் என் தலை உருள்வதை நான் காண்கிறேன்." அதாவது அரசனானாலும் சத்தியத்தையே நான் கூறுவேன் இதனால் சுல்தான் என் தலையை வெட்டுமாறு ஆணையிடுவார். இத்தகைய ஷைகு அவர்களை அரசவைக்கு சுல்தான் வருமாறு கூறி எங்களுக்கு உபதேசம் செய்யுமாறு வேண்டினார்.

ஷைகு அவர்கள் இவ்வாறு உபதேசம் செய்தார்கள். "கோபத்தை விழுங்கி விடுங்கள். உங்களது கோபத்தை கட்டுப்படுத்துங்கள். உங்களது உள்ள பாய்ச்சல்களை கட்டு படுத்துங்கள்."

அதற்கு சுல்தான் "எந்த கோபத்தை எந்த உள்ள பாய்ச்சல்களை நான் கட்டுபடுத்த வேண்டும்" என்று கேட்டார்.

அதற்கு ஷைகு அவர்கள் "காட்டு விலங்குகள் போல கடுமையாக கோபம் கொண்டு பாய்வதை போல பாயாதீர்கள் மாறாக உங்களை கட்டு படுத்தி கொள்ளுங்கள்" என்று கூறினார்.

இதனை கேட்ட சுல்தானது முகம் கோபத்தால் சிவந்து போனது ஆனாலும் எதையும் கூறவில்லை. பிறகு ராஜ விருந்துக்கு அழைப்பு விடுத்தார். தனது உணவுத் தட்டை ஷைகு அவர்களோடு பகிர்ந்து கொண்டார். அவ்வப்போது தனது கரங்களாலே ஷைகு அவர்களுக்கு ஊட்டியும் கொடுத்தார். வேறு வழியில்லாமல் வெறுப்புடன் ஷைகு அவர்களும் அதனை ஏற்றுக் கொண்டார். பிறகு மன்னர் வழியனுப்பி வைத்தார்.

நிச்சயமாக அரசர்கள் சத்தியத்தை உரக்க கூறுவதை எந்தளவிற்கு மன்னிக்க முடியாத குற்றமாக கருதினார்களோ அந்தளவிற்கு சூஃபி மகான்கள் சத்தியத்தை தயங்காமல் கூறினார்கள். வேறு வழியில்லாமல் அரசர்கள் சூஃபியாக்களது நடவடிக்கைகள் பிடிக்கவில்லை என்றாலும் கூட சகித்துக் கொள்ளவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டார்கள்.

கடைசி காலகட்டத்தில் இதனை அற்புதமாக மேற்கொண்டார்கள். அவர்களது மேன்மையை, ரோஷத்தை அனைத்தையும் பாதுகாத்து கொண்டார்கள். ஒரு முறை முகலாய சுல்தான் ஷாஹ் ஆலம் மிகப்பெரிய சூஃபி ஞானியான ஷைகு மீர்தர்த்(ரஹ்) அவர்களது மஜ்லிஸிற்கு வருகை புரிந்தார். சுல்தானிற்கு காலில் கொஞ்சம் வலி இருந்தமையால் காலை கொஞ்சம் நீட்டி அமர்ந்தார். ஆனால் இதனை ஷைகு அவர்களால் பொறுத்து கொள்ள முடியவில்லை. உடனே மன்னர் என்று கூட யோசிக்காமல் "இவ்வாறு காலை நீட்டி மஜ்லிஸில் அமர்வது மஜ்லிஸின் மேன்மைக்கு முரணானது."

உடனே சுல்தான் நீட்டியதற்கான காரணத்தை கூறி மன்னிப்பு கோரினார். அதற்கு ஷைகு அவர்கள் கூறினார்கள் "உங்களுக்கு இதுபோன்ற வலியிருந்தால் நீங்கள் மஜ்லிஸிற்கு வரவேண்டிய தேவையில்லையே."

**உலக அலங்காரம் பதவி மோகம் ஆகியவற்றை அர்பமாக கருதுவது**

நிச்சயமாக சூஃபி மகான்கள் அரசு பதவிகளை ஏற்கமாட்டார்கள். அரசன் மட்டும் அரசு அதிகாரி களது அன்பளிப்புகளையோ, விளைநிலங் களையோ அவர்களோடு நெருக்கமாக பழகு வதையோ இவை எதனையும் விரும்ப மாட்டார்கள். அதனை எப்போதுமே தவிர்ந்து கொள்வார்கள்.

போதுமென்ற மனம், உலக பற்றற்ற நிலை, இறைவனை மட்டுமே சார்ந்து இருத்தல் ஆகியவைகளை தங்களது அரணாக வைத்து கொண்டவர்கள். இதன் மூலம் தங்களது சுய மரியாதையையும் காத்துக் கொண்டவர்கள்.

இதன் காரணமாக இந்திய சமூகத்தில் சத்தியத்தில் உறுதியோடு இருந்தனர். இதன் மூலம் மனித மேன்மையை பாதுகாத்தார்கள். ஆன்மீகம்

வணிகமயமாக்கப்பட்டு கொண்டிருந்த சூழலில் ஆன்மீகத்தை உயிரோட்டமாக வைத்திருந் தார்கள். எல்லா சூழல்களிலும் என்றுமே அவர்களது அடையாளமாக விளங்கியது ஃபார்ஸி கவிதைகளில் கூறப்பட்ட இந்த வரிகளே,

"பேரரசுகளின் கொடிகளுக்கு பகரமாக எனது விலாயத்தை விற்கமாட்டேன். சுலைமான்(அலை) அவர்கள் கொண்டிருந்த ஆட்சியதிகாரத்தை போன்ற ஆட்சியதிகாரத்திற்கு ஆசைப்பட்டு எனது ஏழ்மையை விட்டுவிட மாட்டேன். ஆட்சி அதிகாரத்தின் சுகத்திற்கு ஆசைப்பட்டு ஆன்மீக என்னும் கடுமையான பயணத்தின் மூலம் நான் பெற்றுக் கொண்ட பொக்கிஷத்தை விட்டு விட மாட்டேன்."

இந்தியாவில் சூஃபியாக்களது வரலாற்றில் அவர்களது உலக பற்றின்மை, போதுமென்று மனம் தன்னை விட பிறரை முற்படுத்துவது ஆகிய நற்குணங்களை எடுத்து கூறும் நிகழ்வுகள் ஏராளம் உள்ளன.

அவற்றில் பதிமூன்று மற்றும் பதினான்கு நூற்றாண்டில் நிகழ்ந்த சில நிகழ்வுகளை இங்கே குறிப்பிடுகிறோம். ஏனென்றால் இந்த இரு நூற்றாண்டில் தான் பொருள் முதல்வாதம் வேரூன்றி இருந்தது.

ஷைகு ஷம்சுத்தீன் ஹபீபுல்லாஹ் (ரஹ்) அவர்கள் மீர்ஜா ஜான் தெஹ்லவி என்ற பெயரால் பிரபல்யமானவர். நக்ஷபந்தி தரீகத்தின் மிகப்பெரிய ஷைகு (ஹி1195). இந்தியாவின் மன்னர் ஒரு முறை அவரிடம் இவ்வாறு கூறினார்,

"நிச்சயமாக அல்லாஹ் எனக்கு மிகப்பெரிய பேரரசை அருளியுள்ளான்.இவற்றிலிருந்து தாங்கள் எதையாவது ஏற்றுக்கொள்ள வேண்டும். என்று ஆசைப்படுகிறேன்."

அப்போது ஷைகு அவர்கள், நிச்சயமாக அல்லாஹ் இந்த பிரம்மாண்டமான உலகத்தை குறித்து கூறும்போதே, "இந்த உலகத்தின் இன்பம் அர்பமானது என்று கூறுகிறான். இத்தகைய உலகில் தங்களது அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதி அதில் மிகவும் சிறியது. நீங்கள் வைத்திருக்கும் இந்த சிறிய பகுதியில் நான் எதையும் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை" என்று பதிலளித்தார்.


அதேபோல முகலாய சாம்ராஜ்ஜியத்தின் அமைச்சர்களில் ஒருவரான ஆஸிஃப் ஜா இருபதாயிரம் ரூபாய்களை வழங்கினார். ஆனால் ஷைகு அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் அமைச்சர் கூறினார், "நீங்கள் எடுத்து கொள்ள வில்லை என்றாலும் இதனை தேவை உடையவர் களுக்கு வழங்கலாமே" என்றார்.

அதற்கு ஷைகு அவர்கள் இல்லை என்னால் சிறந்த முறையில் அதனை செய்ய இயலாது. நீங்களே அதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். வழியிலேயே நிறைவடைந்து விடும் அல்லது மீதம் இருந்தால் அதற்கு பிறகு நிறைவடையும்.

டோங் மாகாணத்தின் அமைச்சரான மீர் கான் அவர்கள் ஷைகு குலாம் அலி தெஹ்லவி அவர் களது ஹான்காவிற்கு வருடந்தோறும் பணம் அனுப்புவதற்கு விரும்பினார். அதற்கு ஷைகு அவர்கள் இவ்வாறு பதில் கடிதம் எழுதினார் "நாங்கள் நிச்சயமாக ஏழ்மையை இழிவாக கருத வில்லை. அதன் மேன்மையை குறை கூறவில்லை. மீர் கானிடம் கூறுங்கள் நிச்சயமாக ரிஸ்க் என்பது அல்லாஹ்வால் தீர்மானிக்கபட்டு விட்டது."

தொடரும்.....

**தமிழில்: மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி**


**நூலைப்பெற தொடர்பு கொள்ளுங்கள்**

**7401213394 / 7358278146**


**8148129887**

# CRUSADE 2.0 BY JOHN FEFFER

**The west's Resurgent War on Islam**

# சிலுவைப் போர் 2.0

**மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்**




இஸ்லாத்திற்கு எதிரான வெறுப்பு பிரச்சாரம், முதல் நாள் தொட்டே நடைபெற்று வருகின்றது. இதற்கு அந்தந்த காலத்தில் கிடைக்கும் அத்தனை ஊடகங்களும் பயன்படுத்தப்பட்டன.

ஏதோ இங்கொன்றும் அங்கொன்றுமாக இவை நடைபெறவில்லை. நிரந்தரமான திட்டங்கள், பெரிய அளவில் அந்த நிதி தங்குதடையின்றி கிடைத்திட நிரந்தர ஏற்பாடுகள், அதற்காக 24×7 என உழைத்திட மனித ஆற்றல். அவர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு- ஓவர் டைம், சம்பளம் முதல் ஓய்வூதியம் வரை நிரந்தர ஏற்பாடு என அத்தனையும் ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டன.

வரலாற்றில் இவையெல்லாம் எப்படி நடந்தன என்பதை வைகறை வெளிச்சம் மாத இதழில் தொடராக தொடர்ந்து வெளியிட்டு வருகின்றோம்.

வெறுமனே இஸ்லாத்தின் எதிரிகள், எப்படி எல்லாம் செயல்படுகின்றார்கள் என்பதை மட்டும் வெளியிடவில்லை அந்த வெறுப்பை, எப்படி முஸ்லிம்கள் வெற்றி கொண்டார்கள்.

எப்படியெல்லாம் முஸ்லிம்கள் இந்த வெறுப்பு பிரச்சாரத்தை தூள் தூளாக்கினார்கள், தவிடு பொடியாக்கினார்கள் என்பதையும் நாம் திகட்டவே கோடிட்டுக் காட்டி வருகின்றோம்.

அந்தத் தொடரை படித்தால் நிறையவே அறிவையும், ஆக்கபூர்வமான செயல் திட்டங்களையும் பெறலாம்.



**தமிழ் வடிவம்: மு. குலாம் முஹம்மது.M.A.,**

# நவீன சிலுவைப்போரின்
# கோரம்... கொலை பாதகங்கள்..!

# தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் - அன்பகம் தாஃவா மத்ரஸா



## ஆனமலையில் நடத்திய தாஃவா பிரச்சாரம்








*10.09.2023* அன்று ஆனைமலையில் இஸ்லாத்தை நோக்கி மக்களை அழைக்கும் தாஃவா பிரச்சார பணி மிகச்சிறப்பாக நடைபெற்றது. இதில் சகோதர சமூகத்தவர்களுக்கு திருக்குர்ஆன், மற்றும் வேர்கள் பதிப்பகத்தின் நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. மேலும் இஸ்லாம் குறித்த அவர்களின் சந்தேகங்களையும் தெளிவுப்படுத்திக் கொண்டனர். அல்ஹம்துலில்லாஹ் !



# தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் ஏற்பாடு செய்த

## ஆனமலை - பொது மருத்துவ முகாம் - நாள் : 10-09-2023






ஆனைமலையில் *10.09.2023* அன்று தாருல் இஸ்லாம் ஃபவுன்டேஷன் டிரஸ்ட் மூலம் பொது மருத்துவமுகாம் ஏர்பாடு செய்யப்பட்டது. இதில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெற்றனர். அல்ஹம்துலில்லாஹ்.



# இதைச் செய்தால் 5 பலன்கள் உண்டு

ஒரு தள்ளுவண்டியில் காய்கறி வியாபாரம் செய்யும் ஒருவரின் வித்தியாசமான சத்தம் என்னைக் கவர்ந்தது." சார் என்னிடமிருந்து காய்கறிகள் வாங்கினால், சூப்பர் மார்க்கெட்டு களில் இருந்து காய்கறிகள் வாங்குவதைவிட உங்களுக்கு ஐந்து நன்மைகள் அதிகம். அந்த நன்மைகள் என்னவென்று தெரிய வேண்டுமா?

அழுக்குக் கைலியும் சட்டைக்குப் பதில் தோளில் ஒரு துண்டும் அணிந்த ஓர் இளைஞர், பக்கத்தில் ஆறேழு வயதில் ஒரு பையன். நான் வாங்க நினைத்த அத்தனைக் காய்கறிகளும் இவரிடமும் இருக்கின்றன.

*சார் என்னிடமிருந்து வாங்கும் பொருள் களுக்கு நீங்கள் ஜிஎஸ்டி தரவேண்டாம். நூறு ரூபாய்க்கு ஐந்து ரூபாய் லாபம். இது முதல் நன்மை.*

*சார் நீங்கள் வாங்கும் பொருட்களைக் கொண்டுபோக நான் தரும் கவர் இலவசம்... சூப்பர் மார்கெட்டில் இந்த கவருக்குக் குறைந்தது ஐந்து ரூபாய் தரவேண்டும் (நாம் காசு கொடுத்து வாங்கும் கவரில் அவர் களுடைய விளம்பரம்). இது இரண்டாவது நன்மை.*

மூன்றாவது நன்மை என்னவென்று அறிய ஆவலுடன் அவரைப் பார்த்தேன்.

*சார்... சூப்பர் மார்க்கெட்டில் அவர்கள் கேட்கும் விலையை நீங்கள் கொடுக்க வேண்டும். எங்களிடம் நீங்கள் விலை பேசி வாங்கலாம். நூறு ரூபாய் பொருளை 80 ரூபாய்க்குக் கேட்டாலும் தருவோம். ஏனென்றால், எங்கள் வயிற்றுப் பிழைப்பு இது. எங்களுக்கு வேறு வருமானம் ஒன்றும் இல்லை. 20 ரூபாய் லாபம். இது மூன்றாவது நன்மை.*

சரிதான் என்று தலையாட்டிவிட்டு அவரையே பார்த்தேன்.

*சார் நான்காவது... இந்தக் காய்கறிகள் பக்கத்துக் கிராமங்களில் நாங்களே இயற்கை யாகப் பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளிக் காமல் விவசாயம் செய்தது. இந்தக் காய்கறி களைச் சாப்பிடுவதால் உடலுக்கு எந்தத் தீங்கும் வராது சார்...*

அவர் சொல்வது அனைத்தும் சரியாகவே இருந்தது. சூப்பர் மார்க்கெட்டுகளில் அவர்கள் கேட்கும் விலையைக் கொடுத்து, விஷம் சேர்த்த காய்கறிகளை கியூவில் நின்று வாங்குவதற்குத் தயாராகும் நாம் இதையெல்லாம் சிந்திக்கிறோமா?. சிந்தனையில் நிற்கும்போதே நான் கொடுத்த லிஸ்ட்டில் உள்ள காய்கறிகளை பேக் செய்து கொடுத்தார். பிறகு நான் அவரிடம், "எல்லாம் சரி ஐந்தாவது நன்மை என்னவென்று சொல்லவே இல்லையே" என்றேன் ஆவலுடன்.

இது என்னுடைய மனைவி இவளுக்கு இரண்டு கிட்னியும் செயலிழந்துவிட்டது. இவளுடைய மருத்துவத்துக்காக நான் யாரிடமும் கையேந்தியதில்லை. நீங்கள் விலை பேசாமல் கொடுத்த இந்தப் பணத்தின் ஒரு பகுதி இவளுடைய மருத்துவச் செலவுக்கு உபயோகப்படும். இதுவும் நீங்கள் செய்யும் ஒரு சாரிட்டிதான். இதற்குரிய நன்மை இறைவனிடமிருந்து உங்களுக்குக்கிடைக்கும். இதுதான் நான் சென்ன ஐந்தாவது நன்மை.

புன்னகையோடு அவர் சொல்லி நிறுத்தினாலும் அவருடைய கண்கள் நிறைந்திருந்தன. நானும் கண்ணீரை மறைக்க முயன்று தோற்றேன்.

இதுபோன்ற துக்கங்களும் துயரங்களும் வழியோரங்களில் வியாபாரம் செய்யும் பலருக்கும் இருக்கலாம். ஆகவே, சிந்திப்பீர்!

**முதுமை எனும் பூங்காற்று**

## ஆரோக்கிய அதிசயம்

# தக்காளி

தக்காளி இந்தியாவின் மிக முக்கியமான உணவுப் பொருளாகும். ஏழைகளின் ஆப்பிள் என்று சொல்லப்படும் இது, ஊட்டச்சத்து நிறைந்தது, லைக்கோபின் எனப்படும் ஒரு பொருள்தான் அதற்குச்சிவப்புநிறத்தைக் கொடுக்கிறது. புற்றுநோயை எதிர்த்துப் போராடக்கூடிய சக்தி வாய்ந்தது இந்த லைக்கோபின். புராஸ்டேட் மற்றும் மார்பகப் புற்றுநோய் வராமல் பாதுகாப்பதில் இது முக்கியப் பங்கு வகிக்கிறது. செல்லை அழித்து முதுமை அடையக் காரணமாயிருக்கும் காரணிகளை எதிர்த்து முதுமையைத் தாமதிக்கச் செய்கிறது இந்த லைக்கோபின். மேலும், வைட்டமின் ஏ மற்றும் வைட்டமின் சி, நார்சத்து, பொட்டாசியம், நியாஸின் மற்றும் பல தாதுக்களைக் கொண்டது தக்காளிப் பழம்.



# சிரிக்க......! சிந்திக்க....!

"நேத்து ஸ்கூலுக்கு வரலன்னு கேட்டதுக்கு உடம்பு சரியில்லன்னு சொன்னியே.. டாக்டர் சர்டிபிகேட் வாங்கிட்டு வரச்சொன்னேனே... வாங்கிட்டு வந்தியா?"

"நான் எவ்வளவோ கேட்டுப் பாத்துட்டேன்... அது அவங்க கஷ்டப்பட்டு படிச்சி வாங்கினதாம். அதனால் தரவே மாட்டேன்னு. சொல்லிட்டாங்க மிஸ்...

"முதல் ஊசி போடுறப்பதான் வலிக்கும். ரெண்டாவது ஊசி போடுறப்ப வலிக்காது!"

அப்ப ரெண்டாவது ஊசியையே இப்ப போட்டுடுங்க டாக்டர்!"

## ஆரோக்கியமான ஊட்டச்சத்து

# ஆல்மட் (பாதாம்)

இதில் நார்ச்சத்து, ரிபோஃப்ளேவின், மக்னீசியம், இரும்பு மற்றும் கால்சியம் ஆகியவை அடங்கி உள்ளன. ஒருநாளைக்கு ஒருமுறை இதை எடுத்துக்கொண்டாலே நமக்குத் தேவையான வைட்டமின்-ஈ கிடைத்துவிடும். இதில் அடங்கியுள்ள கொழுப்பு கொலஸ்ட்ராலின் அளவைக் குறைக்கக்கூடிய ஒற்றைச் செறிவற்ற கொழுப்பு வகையைச் சார்ந்தது.



## அமெரிக்காவில் சனாதானத்திற்கு எதிராக சட்டம் இயற்ற வைத்த

# சாதனைப் பெண்
# ஆயிஷா வஹ்ஹாப்

நாம் முந்தைய பதிவில் இந்தியாவில் இருக்கின்ற ஜாதிய அடக்கு முறையையும், அடுக்கு முறையையும், தீண்டாமையையும் இன்றைக்கு இருக்கின்ற இந்துத்துவ பாசிசம் ஆட்சியில் அமர்ந்தவுடன் இதனை வெளிநாடுகளுக்கெல்லாம் கொண்டு சென்றுவிட்டார்கள் என்பதை தெளிவுபடுத்தி இருந்தோம்.

இந்தியாவிலிருந்து தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் எப்படி ஒரு கனவோடு அமெரிக்காவிற்கு சென்றார்களோ, அந்த கனவினை நிறைவேற்ற முடியாத அளவிற்கு அங்கே இந்த சனாதனத்தை தூக்கிப் பிடிப்பவர்கள் அமர்ந்து கொண்டு அமெரிக்காவிலும் ஒரு மனிதனாகக் கூட வாழ முடியாத நிலையை உருவாக்கி விட்டார்கள். அதற்கு எதிராக "ஆயிஷா வஹாப்" என்ற சகோதரி ஒரு சட்டத்தை இயற்றுவதற்கு, சாதிய ரீதியிலான பாகுபாடு கூடாது என்று ஒரு சட்டத்தை இயற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வந்தார்கள் என்பதை விரிவாக குறிப்பிட்டும் இருந்தோம்.

ஆனால் அங்கு இருக்கின்ற இந்து வழக்கறிஞர்கள் குழு என்ற இந்து அமைப்பு அதனை மிகவும் பயங்கரமாக எதிர்த்தது. அங்கும் சென்று அமைப்புகளை ஏற்படுத்தி மக்களுக்கு கிடைக்கின்ற உரிமைகளை மறுப்பதும், தீண்டாமையை செயல்படுத்துவதும் இவர்களுடைய முழு நேர பணியாக இருக்கின்றது.

அவர்கள் ஏற்கனவே அங்கு இருக்கின்ற சட்டங்கள் போதும், அந்த சட்டங்களை வைத்தே

இந்த தீண்டாமையை ஒழித்து விட முடியும் என்ற ஒரு பம்மாத்தை சொன்னார்கள். அமெரிக்காவில் ஒரு பழக்கம் உண்டு. நமது நாட்டில் அது இப்பொழுது அறவே இல்லாதது. அது என்னவெனில் எதிர்க் கட்சிகள் கருத்துக்களை கூறினால், அந்தக் கருத்துக்களில் ஏதாவது நியாயங்கள் இருந்தால் அதனை கருத்தில்கொண்டு சட்ட வரைவிலே தவறுகள் இருந்தால் திருத்துவது அல்லது இந்த எதிர் கருத்துக்களுக்கு இடம் கொடுக்க முடியுமா என்று பார்ப்பது வழக்கம் ஆனால் அது நமது நாட்டில் அறவே இல்லாமல் போய் விட்டது.

ஆனால் ஆயிஷா வஹாப் ஒரு யுக்தியை கையாண்டார். அந்த சட்டத்தினுடைய பின்னணியை பற்றி சொல்லும் பொழுது அதில் சில மாற்றங்களைச் செய்து, இந்த இந்து அமைப்பின் வாயினை அடைத்துவிட்டார்.

*28.08.2023* அதாவது ஆகஸ்ட் மாதம் 28ஆம் தேதி அந்த சகோதரியினுடைய முயற்சி வெற்றி பெற்று கலிபோர்னியாவில் அது சட்டமாக நிறைவேற்றப் பட்டிருக்கின்றது. அந்த மாநிலத்தினுடைய கவர்னர் கையெழுத்து போட வேண்டும் அது தானாகவே நடந்தேறும் இங்கு இருக்கக்கூடிய கவர்னர்களைப் போல தீண்டாமை வெறி பிடித்தவர்கள் அவர்கள் அல்ல. ஆகவே பெரும்பான்மையினர் சட்டத்தை இயற்றி விட்டால் உடனே ஒப்புதல் கொடுத்து விடுவார்கள். ஆயிஷா வஹாபினுடைய இந்த முயற்சிகள் பெரிய அளவில் வெற்றியை கண்டிருக்கின்றது. அனைத்து பத்திரிகைகளும் சிலாகித்து எழுதி இருக்கின்றன.

"ஒரு முஸ்லிம் சகோதரி எடுத்த இந்த முயற்சி அமெரிக்காவில் தீண்டாமையை தடுப்பதற்கு ஒரு பெரிய அளவில் உதவி செய்திருக்கின்றது" என்று பாராட்டி இருக்கின்றார்கள்.


அந்த சகோதரி ஆப்கானிஸ்தானை வம்சா வழியாக கொண்டவர். நாம் அந்த சகோதரி யிடம் சொல்ல விரும்புவது, அன்றைக்கும் கூறினோம், இன்றைக்கும் கூறுகிறோம் இஸ்லாத்தை முன்வைத்து இந்த விடுதலையை நீங்கள், தீண்டாமைக்கு எதிரான போரினை நடத்துவீர்கள் என்றால் பரம்பரை பரம் பரையாக அந்த தீண்டாமை ஒழிந்துவிடும். நிரந்தரமாக ஒழிந்து விடும்! அதை நீங்கள் செய்ய வேண்டும் மற்றும் உங்களுடைய முயற்சிக்கு அல்லாஹ் உதவி செய்திருக்கிறான். நீங்கள் பெற்ற வெற்றியை நாங்களும் பாராட்டுகிறோம்.



**தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் - அன்பகம் தாஃவா மத்ரஸா**

**17-09-2023 அன்று திண்டுக்கல்லில் நடந்த இஸ்லாமிய அழைப்பு பணி**





# சிலிண்டர் விலை குறைப்பு....?

148 முறை விலையை ஏற்றிவிட்டு ஒரு 200 ரூபாயை குறைத்து இருக்கிறார்கள். மானியங்களை வங்கியில் செலுத்துவோம், வங்கியில் செலுத்துவோம் என்று ஏழை மக்களை எல்லாம் ஏமாற்றிக் கொண்டு, இப்பொழுது தேர்தலை மனதில் வைத்துக் கொண்டு 200 ரூபாயை குறைத்துள்ளார்கள்.

அனைவரும் சிந்திப்பதற்கு முன்பு ஏதாவது ஒரு சூழ்ச்சியைச் செய்து ஆட்சியைப் பிடித்து விட வேண்டும் என்ற எண்ணத்தில் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

சிலிண்டர் விலையை 200 ரூபாய் குறைத்து விட்டு, இந்த சிலிண்டர் விநியோகம் செய்பவர்கள் ஏற்கனவே 200 ரூபாய் கூடுதலாக செலுத்தித்தான் இந்த சிலிண்டர்களை எல்லாம் வாங்கி வைத்துள்ளார்கள் மக்களுக்கு விநியோகிப்பதற்கு. சில நேரம் இந்த ஆயில் மார்க்கெட்டிங் கம்பெனிகள் என்ன செய்கிறார்கள் என்றால் நீங்கள் அதிகமான சிலிண்டர்களை வாங்குங்கள் என்று இவர்களை அழுத்தத்திற்கு உள்ளாக்கி லட்சக் கணக்கான ரூபாயை அவர்களிடம் இருந்து பெற்று விடுகிறார்கள்.

இப்பொழுது 200 ரூபாய் விலை குறைப்பு அறிவித்தவுடன், ரூ.200 குறைந்துவிட்டது.

ஆனால் 27 ஆயிரம் கேஸ் விநியோகம் செய்யக் கூடியவர்கள் 550 கோடி இழப்பிற்கு ஆளாகியுள்ளர்கள். காரணம் இவர்கள் ஏற்கனவே அதிக விலை கொடுத்து வாங்கி விட்டார்கள். இவர்களுக்கெல்லாம் ஒரே இரவில் அனைத்தும் நஷ்டமாகிவிட்டது.

இதனை அரசு திரும்ப கொடுக்க வேண்டும், வாங்கிய பணத்தை இந்த ஆயில் மார்க்கெட்டிங் கம்பெனிகள் திரும்பிக் கொடுக்க வேண்டும் ஆனால் நம்முடைய ஏழைகளைப் பற்றி கவலைப்படாத, விவசாயி களைப் பற்றி கவலைப்படாத, அடித்தட்டு மக்களைப் பற்றிக் கவலைப்படாத,அதானி அம்பானி போன்றவர்கள் மட்டுமே வாழ வேண்டும் என்று நினைக்கும் இந்த அரசாங்கம் என்ன செய்திருக்கிறார்கள் என்றால், இந்த ஆயில் மார்க்கெட்டிங் கம்பெனிகளுக்கு ஏற்படக்கூடிய இழப்புகளை, உண்மையில் அங்கு இழப்புகளே ஏற்படாது காரணம் பெட்ரோல் விலை குறைந்த நேரத்திலும், கூடிய நேரத்திலும் இவர்கள் விலையை குறைப்பதில்லை. இந்த அரசுக்கும் அதில் லாபம் இருப்பதால் அதனை கண்டு கொள்வதில்லை.

ஆனால் இந்த ஆயில் மார்க்கெட்டிங் கம்பெனிகளுக்கு ஏற்படக்கூடிய இழப்பினை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமாம், விநியோகம் செப்பவர்களுக்கு வரக்கூடிய இழப்புகளை, அவர்கள் கட்டிய பணத்தை திரும்ப கொடுப்பதற்கு இதுவரையிலும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்க முன் வரவில்லை. இவர்கள் கதறிக் கொண்டிருக்கின்றார்கள். ஒரே நாள் இரவில் இவர்கள் நஷ்டமாகி விட்டார்கள் என பத்திரிகைகள் செய்திகளைத் தருகின்றன.

தங்களுக்கான சுயநலத்தில் இவர்கள் விலை குறைப்பது கூட, அடித்தட்டில் இருக்கக்கூடிய விநியோகஸ்தர்களை பாதிப்பதாகவும், மேல் தட்டில் இருக்கக்கூடிய ஆயில் மார்க்கெட்டிங் கம்பெனிகளுக்கு லாபம் கிடைக்கும் விதத்திலும் தான் இதனை அமைத்திருக் கிறார்கள். மொத்தத்தில் இவர்களுடைய இந்த கார்ப்பரேட் சிந்தனை இவர்களை விட்டுப் வெளியே போகவில்லை. என்ன நடக்கின்றது என்பதனை பொறுத்திருந்து பார்ப்போம். எங்களோடு இணைந்திருங்கள்!

# தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் ஏற்பாடு செய்த

## தேனி மாவட்டம், துலக்கப்பட்டியில் சமூக நல்லிணக்கக் கூட்டம், விருந்தோம்பல் நிகழ்ச்சி

*தேனி மாவட்டம், துலுக்கப்பட்டியில் கடந்த 03-09-2023 அன்று சமூக ஒற்றுமை நிகழ்ச்சி மற்றும் விருந்தோம்பல் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு K.முனியாண்டி அவர்கள் தலைமை ஏற்றார்கள். சிறப்புரையாளர்களாக மௌலவி, ஹாஃபிழ் S.M.அப்துல் பத்ரி அவர்களும், S.M.சையது அபுதாஹீர், முகமது ஜகரிய்யா, காதர் மைதீன் மற்றும் இந்நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் அபூபக்கர் சித்தீக் மற்றும் ரஃபின் அவர்களும் சிறப்புரை யாற்றினார்கள். இந்த நிகழ்ச்சியில் சுமார் 150க்கும் மேற்பட்ட ஆண்களும், பெண்களும் திரளாக கலந்துக் கொண்டார்கள். அனைவருக்கும் இரவு உணவு ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பாக நிகழ்ச்சி முடிந்தது. அல்ஹம்துலில்லாஹ்...!*










# இல்ல ஒழுக்கம் பேணுவோம்



ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம்
குளச்சல்

இஸ்லாம் இல்லங்களில் நாம் கடைபிடித்தொழுக வேண்டிய ஒழுக்க நெறிகளை வரையறுத்துச் சொல்கிறது. இஸ்லாம் மனிதன் உலகில் பிறந்ததிலிருந்து இறப்பது வரை எவ்வாறு வாழ வேண்டு மென்பதை வலியுறுத்திச் சொல்லும் வாழ்க்கை நெறியாகும். இஸ்லாம் குடும்பமாக நாம் வாழும் இல்லங்களில் கடைபிடித்து ஒழுக வேண்டிய ஒழுக்க நெறிகளை சொல்வதை காலச் சூழ்நிலையைப் பொறுத்து இக்கட்டுரையில் பார்ப்போம்.

இல்லற ஒழுக்கம் சிதைந்து சமுதாயம் அலங்கோலமாகியுள்ள இக்காலத்திற்கு மிக மிகத் தேவை இல்லற ஒழுக்கம். மனித வர்க்கமும் ஜின் வர்க்கமும் இறைவனை வணங்குவதற்கே படைக்கப்பட்டுள்ளது என்ற திருமறை வசனம் ஜின்னும், இன்சும் இறைவழிபாட்டிற்கென்றே படைக்கப்பட்டுள்ளதென்றே உறுதிபடச் சொல்கிறது. மனிதன் தன் அத்தியாவசிய தேவைகளுக்கு வேண்டி உழைக்கவும் ஓடியாடித் திரிய வேண்டியவனாகவும் உள்ளான்.

இஸ்லாம் சொல்லும் வணக்கமென்பது மனிதன் இறைவனுக்கு செய்யும் இபாதத் என்னும் வணக்கம். இறைவனுடைய படைப்பினங்களுக்கு மனிதன் செய்யும் இபாதத் என்னும் வணக்கம். தன் சொந்த சரீரத்திற்கு மனிதன் செய்யும் இபாதத் என்னும் வணக்கம் என இபாதத்தை மூன்றாக அறிஞர் பெருமக்கள் பிரித்துள்ளனர்.

இறைவனுடைய படைப்பினங்களுக்கு மனிதன் செய்யும் இபாதத்தில் தம் கூட்டு மனித வாழ்க்கையை எப்படி பேணி வாழ வேண்டுமென்பதே இக்கட்டுரையின் தலைப்பு. மனித சமுதாயம் முதலில் குடும்பத்தில் உம்மா, வாப்பா, அண்ணன், தம்பியென குடும்ப வாழ்க்கை. இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு சமுதாயமாக சேர்ந்து கூட்டு குடும்பமாகவும், தனி குடித்தனமாகவும் வாழவும்,வாழ்வில் எப்படி சமுதாய ஒழுக்கமென்னும் இல்ல ஒழுக்கம் பேண வேண்டும் என்பதை இஸ்லாம் சொல்கிறது.

அன்னிய பெண்களிடம் செல்வதைக் குறித்து நான் உங்களை எச்சரிக்கிறேன் என்றார்கள் நபிகள் நாயகம். உடனே தோழர் ஒருவர் அல்லாஹ்வின் தூதரே! கணவனின் உறவினர்கள் பற்றி என்ன சொல்கிறீர்கள்? என்று வினவ கணவனின் உறவினர்கள் மவ்த் மரணம் என்று பதிலளித்தார்கள். இந்த நபிமொழி இமாம் புகாரியில் பதிவு செய்துள்ளார்கள்.

அல்-ஹம்வு என்ற வார்த்தை கணவனின் தந்தை, பாட்னார், பிள்ளைகள், பேரன்கள் தவிர்த்து ஏனைய உறவினர்களை குறிப்பிடுகிறது. ஒரு பெண்ணை இவர்கள் மணம் முடிக்கலாம் என இந்நபிமொழிக்கு நவவி இமாம் விளக்கம் சொல்கிறார்கள். முறையில்லாத ஆணும் பெண்ணும் சந்தித்ததால் தவறு ஏற்பட வாய்ப்பு உண்டு, ஆகையால் இஸ்லாம் ஆண், பெண் சந்திப்பதில் வரையறை வைத்துள்ளது. இதனால் குடும்பத்தில், சமுதாயத்தில் குழப்பங்களும், நிம்மதியற்ற நிலையும் ஏற்படுமென்பதால் இவ்வாறான சந்திப்பை மரணமென்றார்கள் நபிபிரான்.

எந்த ஓர் ஆணும் (மஹ்ரம் அல்லாத) அன்னிய பெண்ணுடன் தனித்திருக்க வேண்டாம். அப்படியிருந்தால் அங்கே சைத்தானும் அவர் களுடன் மூன்றாமவனாக இருப்பான் என்பது நபி மொழி. நாம் பெண்களிடம் எவ்வாறு தனிமை சந்திப்பை தவிர்க்க வேண்டும் என்பதை சொல்கிறது.

நபிபிரான் பிராட்டிமார்களிடம் ஏதாவது பொருளை கேட்க நேர்ந்தால் நீங்கள் திரை மறைவிலிருந்தே கேளுங்கள். இது இருவர் உள்ளங்களையும் பரிசுத்தமாக்கி வைக்கும் என்ற திருமறை வசனம் ஆண், பெண் சந்திப்பு எவ்வாறிருக்க வேண்டு மென்பதை நமக்கு போதிக்கிறது.

பெண்கள் உடலில் வெளியில் இருக்கக் கூடியவற்றை தவிர தங்கள் அலங்காரத்தை வெளிக் காட்டாமல் மறைத்துக் கொள்ளட்டும். தங்கள் முந்தானைகளால் மார்பையும் மறைத்துக் கொள்ளட்டும். திருமறை பெண்கள் தன் சரீரத்தை வெளியில் சபையில் வெளிக் காண்பிக்காமல் அதனால் பிற ஆடவர், பெண்டிர் மாறி மாறி இச்சை கொள்ளாமல் ஒழுக்க சீலர்களாக வாழச் சொல்கிறது.

இஸ்லாம் எப்படிப்பட்ட உடை அணியச் சொல்கிறதோ அதுபடி நாம் வாழ வேண்டும். பிறரை பின்பற்றக் கூடாது.யார் பிற சமுதாயத் தவருக்கு ஒப்பாகின்றாரோ அவர் அவர்களைச் சார்ந்தவரே என்ற நபிமொழி ஆடை விசயத்தில் நம் சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட நிலை மேற் கொண்டொழுக வேண்டும் என போதிக்கிறது.

நம் வீட்டில் வேலை செய்யும் வேலையாட்கள் ஆணோ, பெண்ணோ அவர்களிடம் எஜமானர்கள் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும், இஸ்லாமிய சட்டவரம்பிற்குட்பட்டென்பதையும், வீட்டிலுள்ள வாகனங்கள் வாடகைக்கு எடுத்து செல்லும் ஆட்டோ போன்றவற்றை ஒட்டும் ஒட்டுனர்களிடமும் பேசுவதில் ஒழுக்கத்தோடு ஹிஜாப் அணிந்து நம் அங்க அசைவை இறைவன் கண் காணிக்கிறான், உற்று நோக்குகிறான் என்பதை மனதில் கொண்டு வாழ வேண்டும். இவ்வாறு வாழ்வது தான் இஹ்ஸானின் அடையாளம்.

யூசுப் அலைஹியின் அழகில் மயங்கிய அரசி காதலுக்கு உட்பட தூண்டிய நிகழ்விற்கு ஆட்படாமல் உன் கணவன் என்னை கண்ணியமாக வைத்துள்ளார்.

இத்தகைய நன்மை செய்வோரை துரோகம் செய்வது ஆகாததென நபி யூசுப் அலைஹ் சொல்லிய சொல் திருமறையில் 12:23 காணலாம். இது என்றும் குடும்பத்தலைவர்கள்,தலைவியர், தனி நபர் பின்பற்ற வேண்டிய வழிமுறையாகும். நெறி முறையுமாகும்.

பணியாட்கள் முன்பாக ஹிஜாப் அணிந்தே பெண்கள் நடமாட வேண்டும். வேலை முடிந்தால் வேலையாட்கள் ஆணோ பெண்ணோ அவர்களை வசிப்பிடங்களுக்கு அனுப்பி விட வேண்டும். தவறினால் இஸ்லாமிய முறைப்படி 100 கசையடியும், ஓராண்டு நாடு கடத்தலும் (இத்தண்டனை திருமணமாகத ஆணிற்கு) பெண்ணிற்கு 100 கல்லெறி (திருமணம் ஆனவளிற்கு).

நபி(ஸல்) பெண்களைப் போன்று ஒப்பனை செய்து கொள்ளும் ஆண்களையும் ஆண்களைப் போன்று ஒப்பனை செய்து கொள்ளும் பெண் களையும் சபித்தார்களென்ற நபிமொழியும், அரவாணிகளை நபிகள் நாயகமும் உமர்(ரலி)யும் வீட்டிலிருந்து வெளியேற்றிய நிகழ்ச்சி காணலாம். நபி(ஸல்)பெண்களைப் போன்று இச்சையை துண்டாத அரவாணிகளை வீட்டிலிருந்து விலக்க வில்லை. அரவாணி இச்சையை தூண்டுபவரானால் வீட்டிலிருந்து விலக்கப்பட வேண்டியவரே. இதனால் தவறு ஏற்பட வாய்ப்புண்டு.

தொலைக்காட்சியில் ஆபாச படங்கள் பார்ப்பது அதன் மூலம் நாமும்,குடும்பமும் கெட வாய்ப் புண்டு. இதை தவிர்க்க வேண்டும். நல்லொழுக்கம் போதிக்கும் உரைகள் பார்ப்பதில் தவறில்லை. ஒரு காலம் வரும் அப்பொழுது ஹராம் நடு வீட்டில் உபசரிக்கப்படும் என்ற நபி மொழியை நினைத்து செயல்படுவோம்.

தொலைபேசி விசயத்தில் அவசியத்தை முன்னிட்டு பேசுவதில் தவறில்லை. ஆண், பெண் இருபாலரும் சதா தன்னுடன் இருக்குமிட மெல்லாம் தொலைபேசியை கொண்டு செல்வதோடு பல ஆபாச படங்கள், பேச்சுகள், பிற பெண்களோடு தொடர்பென இன்றுள்ள சமுதாய சீரழிவிற்கு இஃதொரு முக்கிய காரணியாக உள்ளது. நன்மையான காரியம் தவிர தீமை விசயத்தில் மிகவும் எச்சரிக்கையுடன் செயலாற்ற வேண்டும்.

வீடுகளில் உருவங்கள் இருந்தால் மலக்குகள் வரமாட்டார்கள் என்ற ஹதீஸ் உருவங்களை தவிர்க்க சொல்லுகிறது. மேலும் அலங்காரங்கள் இவ்உலகில் தவிர்க்கப் பட வேண்டும். இவ்உலக வாழ்வு நிலையில்லாதது. நிலையுள்ள மறுமை வாழ்வை நினைத்து செயல்படுவோம்! இல்லத்தில், நாட்டில், வசிப்பிடங்களில் ஒழுக்கம் பேணினால் இல்லமும் நாடும் அமைதி பூங்காவாக திகழும். நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பதை நம் வாழ்வில் ஏற்படுத்துவோம்!

வீட்டினுள் போக இஸ்லாம் "ஸலாம்" சொல்லி வீட்டாரிடம் அனுமதி கேட்டே போகச் சொல்கிறது. வீட்டிலிருந்து வெளியில் செல்லும் போது வீட்டாருக்கு "ஸலாம்" சொல்லி விடை பெற இஸ்லாம் போதிக்கிறது, இம்முறை இஸ்லாம் போதிக்கும் நெறியாகும்.



தொடர்

# பிராமினிஸ்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

## பொய் சாட்சிகளும், போலி ஆவணங்களும்

**புல்தானாவிற்கு சென்று விசாரணையை ஆரம்பித்தார் *PI* கேசவ் *(PI - Police Inspector)***

ஷேக் பஹிம் சேக் ரஹீம் குரைசி வாகனத்தை சேக் ஷகூர் சேக் கபூருக்கு விற்று விட்டதை கண்டு பிடித்தார். 100 ரூபாய் ஸ்டாம்ப் பேப்பரில் கையெழுத்தை பெற்றுக்கொண்டு அவருடைய மகன் வாகனத்தை ஷேக் ஜமில் சேக்-ஆலம் என்பவருக்கு விற்றுள்ளார். வாகனத்தை விற்பதற்கு சேக் ஷகூர் தன்னுடைய மகனுக்கு அதிகாரத்தை வழங்கவில்லை. ஆவணங்கள் அவரின் பெயரிலேயே இருந்துள்ளன. ஷேக் ஜமில் சேக் - ஆலம் என்பவருக்கு வாகனத்தை மாற்ற ஆர்டி ஓலிருந்து எந்தவித கடிதமும் பெறப்படவில்லை. எனினும் PI கேசவ் வாகனம் ஷேக் ஜமில் சேக் ஆலம் என்பவரின் பெயரில்தான் உள்ளது என்று குறிப்பெடுத்துக் கொண்டார். என்ஜின் நம்பரையும் CHASSIS நம்பரையும் சரி பார்த்த பின்பு வாகனத்தை போட்டோ எடுத்துக் கொண்டார்.

PI கேசவ் விசாரணையை மேற்கொள்ளும் நேரத்தில் யார் பெயரில் வாகனம் இருந்தது? அதை யார் வைத்துள்ளார் என்பது மிகப்பெரிய மர்மமாகவே இருந்தது.

புல்தானா வட்டாரப் போக்குவரத்து அலுவலக ஆவணத்தின் படி, வாகனத்தை சேக் ஷகூர் சேக் கபூர் இடமிருந்து வாங்கியவர் சதலி அப்சர் நபிகான். இவருடைய பெயரே கடைசியாக புல்தானா ஆர்டிஓ ஆவணத்தில் இருந்தது. அதன் பின்பு வாகனம் அப்துல் நதிம் சேக் ரஹீம் என்பவரின் பெயரில் அமராவதி ஆர்டிஓ விற்கு மாற்றப்பட்டது.

அமராவதி ஆர்டிஓ ஆவணத்தின் படி, அப்துல் நதிம் சேக் ரஹீம் என்பவரின் பெயருக்கு வாகனத்தை மாற்றுவதற்கு முன் அதனுடைய உரிமையாளர் பெயர் சேக் சைவர் சேக் கைனர்.

PI கேசவ் அளித்த அறிக்கையின்படி. சேக் ஷகூர் சேக் கபூர் இட மிருந்து வாகனத்தை வாங்கி யவர் சேக் ஜமில் சேக் ஆலம். இவரே புல்தானா வில் இறுதியாக வாகனத்தை வைத்திருந்தவர்.

தலை சுற்றும் அளவிற்கு குழப்பம். பொதுவாக முஸ்லிம்கள் வைக்கும் பெயர்களை பல இடங்களில் பயன்படுத்தி மக்களையும் நீதித் துறையையும் குழப்புவதே நோக்கம். மொத்த வழக்கிலும் இதுதான் உத்தி.

மேற்கூறியவை தவிர, மொத்த வழக்கிலும் எங்கேயெல்லாம் தொய்வு ஏற்பட்டுள்ளது என்பதை கீழே காணலாம்.

1) ரபிக் சேக் அல்லது வாகனத்தின் உரிமையாளர் அல்லது அதை வைத்திருந்தவர் இவர்களிடம்

வாகனத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க சொல்லி எந்த உத்தரவையும் நீதிமன்றம் வழங்கிடவில்லை. வாகனம் தற்பொழுது இருக்கின்றதா? அதன் உண்மைத் தன்மை என்ன என்பதைப்பற்றி காவல்துறை அதிகாரி அளித்த அறிக்கையை ஏற்றுக் கொண்டு அதே நேரத்தில் வாகனத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க சொல்லிடாத நீதிமன்ற நடவடிக்கை இதுவரையில் கேட்டிராத ஒன்று.

2) வாகனத்தின் இன்ஜின், CHASIS நம்பரை காவல்துறை அதிகாரி போட்டோ எடுக்கவில்லை. அந்த எண்களை தன்னுடைய அறிக்கையில் குறிப் பிடவும் இல்லை. சம்பந்தப்பட்ட வாகனத்தின் நம்பர் பிளேட்டை வேறு வாகனத்தில் பொருத்தி அறிக்கை தயார் செய்யப்பட்டும் இருக்கலாம். விசாரணையில் வாகனத்தின் நம்பர் பிளேட்டை மாற்றலாம் என்று காவல்துறை அதிகாரி ஒப்புக் கொண்டுள்ளார்.


3) உண்மையைக் கூறின், வாகனத்தின் பதிவு எண், இன்ஜின் நம்பர், CHASIS நம்பர், அதன் உரிமையாளர், அதன் நகரும் திறன் இவற்றை அடிப்படையாக வைத்து வாகனத்தின் உண்மை தன்மைக்கு சான்றிதழ் வழங்க வேண்டிய அதிகாரம் ஆர்.டி.ஓ.விற்கே உண்டு. நீதிமன்றம் அதைத்தான் செய்திருக்க வேண்டும். ஆனால் ஒட்டு மொத்த விசாரணையிலும் ஆர்டிஓ வை அணுகிடவில்லை. ஏடிஎஸ் உடைய போலீஸ் இன்ஸ்பெக்டர் கூட ஆர்.டி.ஓ.விலிருந்து சம்பந்தப் பட்ட வாகனத்தின் ஆவணங்களை பெறவும் இல்லை. அவர்களுடைய உதவியை நாடவும் இல்லை.

எனினும் PI கேசவ் அளித்த அறிக்கையின் அடிப்படையில், MH-14-X-4380 என்ற நம்பர் உடைய வாகனம் இருக்கின்றது என்றும் அது இயங்கி கொண்டிருந்தது என்றும் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

சாட்சியாக நிறுத்தப்பட்ட ரபிக் ஷேக் உடைய நம்பகத்தன்மையை பற்றியும் மேலே விவாதித்து இருந்தோம். உண்மையில் ஆயுதங்கள் கடத்தியவர் களை காப்பாற்றிட, ரபிக் சேக் தான் வாகனத்தின் உரிமையாளர் என்று நிறுவும் முயற்சி நடந்துள்ளது. வாகனத்தை பொருத்தவரை அது இருக்கின்றதா அல்லது அழிக்கப்பட்டுவிட்டதா என்பதும் மர்மமாகவே இருக்கின்றது.

### 7) குற்றவாளி முஜாபரால் வாடகைக்கு எடுக்கப்பட்ட டாட்டா இண்டிகா (MH-20-U1240)

வழக்கில் கூறப்பட்டுள்ளபடி, PW 2 (PROSE CUTION WITNESS 2) என்பவரிடமிருந்து MH-20-U1240 என்ற நம்பர் உடைய டாடா இண்டிகா வாகனத்தை குற்றவாளி எண் 3 முஜாபர்




வாடகைக்கு எடுத்துள்ளார். PW2-இன் பெயரை விசாரணை அறிக்கையில் வெளிப்படுத்தவில்லை. PW2 கூற்றின் படி, முஜாபரின் தந்தையான ஜமில் அகமது இவரின் நண்பர். 9 மே 2006 அன்று காலை 9.30 மணி அளவில் ஜமில் அகமது தன்னிடம் வந்து பீட் பகுதியில் நடைபெறும் திருமண நிகழ்விற்கு தன்னுடைய தாயை அழைத்து செல்ல வண்டியை கேட்டதாகவும் அதற்கு அவர் காரின் சாவியை கொடுத்ததாகவும் கூறியுள்ளார். அதே நாள் மாலை நேரத்தில் அவுரங்காபாத் காவல் நிலையத்திற்கு அவரை அழைத்து காரை பற்றி விசாரணை செய்துள்ளனர். காலையிலேயே முஜாபர் காரை எடுத்துச் சென்று விட்டார் என்று கூறி முஜாபரின் முகவரியை காவல் துறையிடம் கொடுத்துள்ளார். PW2-இன் கூற்றுப்படி, நடு இரவு ஒரு மணிக்கு முஜாபர் காவல் நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டு உள்ளார். மேலும் இருவரையும் குல்தாபாத் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர். விசாரணை மேற்கொண்ட பின் முஜாபர் கைது செய்யப் பட்டுள்ளார். PW2 விடுவிக்கப் பட்டுள்ளார்.

ஆளில்லாமல் தனியே விடப்பட்ட நிலையில் தன்னுடைய கார் மாலேகானில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது என்று 14 மே 2006 செய்தித் தாளை படித்து தெரிந்துகொண்டார்.

15 மே 2006 அன்று மும்பை கிஜிஷி அலுவலகத் திற்கு அவர் அழைக்கப்பட்டுள்ளார். தன்னுடைய கார், அதன் சாவி, அதன் ஆவணங்களை

அடையாளம் காட்டி உள்ளார். ஆனால், வண்டியின் நம்பர் பிளேட் MH-15-A-1140 என்று மாற்றமாக இருந்துள்ளது.

இந்த சாட்சி போலியாக தெரிகிறது. ஏனென்றால் அவருடைய பெயர் வெளிப்படுத்தப் படவில்லை. வண்டியின் நம்பர் பிளேட் மாறி இருப்பதை பார்த்தால் ஏதோ சதி நடந்துள்ளது தெரிகிறது. அவுரங்காபாத் ஆர்.டி.ஓ. ஆவணத்தின் படி, MH.20-U1240 என்ற நம்பருடைய வாகனத்தின் உரிமையாளர் அவுரங்காபாத் சிந்தி காலனியில் வசிக்கும் முஜிபுத்தீன் ஹபிபுத்தீன். உண்மையில் MH-15-A-1140 என்ற நம்பர் உடைய வாகனத்தில் ஆயுதங்கள் கடத்தப்பட்டு இருக்க வேண்டும். அதனுடைய உரிமையாளரை பாதுகாக்க, முஸ்லிம் உரிமையாளரை கொண்ட வேறொரு கார் இந்த வழக்கில் காட்டப்பட்டுள்ளது. முஸ்லிம் உரிமையாளர் மிரட்டப்பட்டு இருக்க வேண்டும். சாட்சியாக மட்டுமே உன்னை பயன் படுத்துவோம். இதற்கு மறுத்தால் உன்னையும் வழக்கில் இணைத்து விடுவோம் என்று காவல்துறை கூறியிருக்க வேண்டும்.

இந்த சாட்சி அளித்த வாக்குமூலத்தில் உள்ள முரண்பாடுகளை பார்த்தால் சந்தேகம் மிகவும் வலுக்கிறது. உதாரணமாக முஜாபர் தந்தையின் பெயர் ஜமில் அகமது என்று கூறினார் ஆனால் அவருடைய பெயர் தன்வீர் அகமது. திருமண விழாவிற்கு செல்வதாக கூறி முஜாபர் வண்டியை வாங்கினான் என்றுதான் அவுரங்காபாத் காவல் நிலையத்தில் 9 மே 2006இல் PW2 கூறினார். ஆனால் 15 மே 2006இல் தீவிரவாத எதிர்ப்பு படையிடம் வண்டியை வாங்கியதற்கான கூறப் பட்ட காரணம் வேறு. முஜாபருடன் (A3) முகமது அமீர் (A1) காரில் செல்வதை பார்த்தேன் என்று 9 மே 2006இல் காவல் நிலையத்தில் PW2 கூறினார்.

ஆனால் மற்ற வாக்கு மூலங்களில் அமீரின் பெயரை குறிப்பிடவில்லை. இன்னும் இது போன்ற முரண்பாடுகளும் உள்ளன. இதன்மூலம் முஜிபுத்தீன் ஹபிபுத்தீன் ஒரு போலியாக திமீக்கப் பட்ட சாட்சியம் என்ற முடிவுக்குத்தான் நம்மால் வர முடிகிறது.

- இன்ஷா அல்லாஹ் தொடரும்.....!

## தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் - மேட்டுவிளை சுன்னத்வல் ஜமாத் இணைந்து நடத்திய மழைக்கான பிரார்த்தனை தொழுகை



தூத்துக்குடி மாவட்டம், புத்தன்தருவை மற்றும் சுற்று வட்டார பகுதியில் இந்த வருடம் வெயிலின் தாக்கம் மிக அதிகமாக இருந்து வருகிறது. மேலும் மழை பொழிவு என்பது அறவே இல்லை. அதனால் மிகுந்த வரட்சியின் காரணமாக கடுமையான குடிநீர் தட்டுபாடு நிலவி வருகிறது. விவசாய நிலங்களிலும் தண்ணீர் இல்லை. ஆகவே எல்லாம் வல்ல அல்லாஹ்வின் ரஹ்மத்தில் ஒன்றான மழையை வேண்டி சிறப்பு பிராத்தனை தொழுகைக்கு ஏற்பாடு செய்யபட்டு கடந்த 10/09/23 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் மேட்டுவிளையில் உள்ள நியாவிலைக் கடை அருகே உள்ள திடலில் வைத்து நடைபெற்றது. தொழுகையினை மௌலவி K.முஹம்மது முஹைதீன் பைஜி அவர்களும், குத்பா உரை அம்ஜத் ஹூசைன் ஆலிம் இம்தாதி அவர்களும், சிறப்புரையாக மௌலவி. A.செய்யது அஹமது உஸ்மானி அவர்களும், மௌலவி K.முஹம்மது முஹைதீன் பைஜி அவர்கள் துஆ செய்தார்கள். இதில் திசையன்விளை, புத்தன் தருவை, மேட்டுவிளை, பூச்சிக்காடு ஆகிய இடங்களிலிருந்து சுமார் 90க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டார்கள்.

**- புத்தன் தருவையிலிருந்து நமது நிருபர்**

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002